ஜகன்மோகினி

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்.

1-1-'50 மார்கழி. 27-வது ஆண்டு. அணு நான்கு.

5

சுதந்தர இந்தியாவின் சிற்பியும், நிர்வாகியும்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1950
MADRAS

JC
N50.27'1

மலர் அளிக்கும் மகத்தான விருந்து

கண்ணுக்கும் கருத்துக்கும் ஒருங்கே உணவு

ஸ்ரீ பகவானுடைய கிருபையால் உருவான இம் மலர், அவரது ஆயிரம் நாமங்களுள் மிகவும் சிரேஷ்டமான ராம நாமத்தின் தனிப் பெருமையைப் பரமசிவன் பார்வதி தேவிக்கு விளக்குவதுடன் ஆரம்பிக்கிறது. இவ்வழகிய மூவர்ண மேலட்டைப் படத்திற்கு ஒத்ததாகவே முகப்புப்படம் (இருவர்ணங்களில்) அமைந்துள்ளது. ஸ்ரீ கிருஷ்ணன், வியாஸர் இருவர் முன்னிலையிலும் பீஷ்மாசாரியர் தர்மபுத்திரருக்கு உபதேசம் செய்கையில் ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் அவதரித்த கட்டத்தை அது சித்திரிக்கிறது.

அலங்காரங்கள் செய்துகொண்டு பந்தடிக்கும் விளையாட்டிலே ஊன்றியிருந்த பரகாலநாயகி, கண்ணன் குடக்கூத்தாடியவாறு பறையறைந்து கொண்டு வந்ததைக் கண்டு நிலைதடுமாறி நிற்பதைச் சித்திரிக்கிறது அடுத்த மூவர்ணப்படம். அவ்வாறு நின்ற நாயகி மேனி நிறமிழந்து, அறிவழியப்பெற்று, வாய் பிதற்றி, விகாரமுற்று, விரஹத்தால் மடலெடுக்கவும் துணிந்தாளென்று வர்ணிக்கிறதல்லவா சிறிய திருமடல்?

பகவானை அடைவதற்கு வேண்டும் சாதனங்களையும் அவனையே வேண்டிப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற தத்துவத்தை வெளியிடும் திருப்பாவை 26-வது பாசுரம் '!மாலேமணிவண்ணா!'' அடுத்த ஓவியமாய்ப் பரிமளிக்கிறது.

''அணிநூல்' என்பது பற்றிய அருமையான ஆராய்ச்சிக் கட்டுரை திவான்பகதூர் ஞானபாஸ்கர K. S. ராமஸ்வாமி சாஸ்திரியாரால் அளிக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக, கவியோகி சுத்தானந்த பாரதியார் வீட்டைத் துறக்கும் போது தமது தாயார் மனச்சாந்திக்காக "குடும்பவிநோதம்" என்று பாடிய அரிய பாட்டு ஓவிய அணியுடன் வெளியாகியுள்ளது. (39 கண்ணிகள்)

அடுத்ததாக, "பத்தினிப்பெண்'' என்ற மகுடத்துடன் மூன்று ரஸமான ஸம்வாதங்கள்—(1) த்ரௌபதி—ஸத்யபாமா. (2) ஸீதா—அனஸூயா. (3) நாயகி—தோழி. வை. மு. ஸ்ரீ. தொகுத்து எழுதியது. (படத்துடன்)

சிவபெருமானுக்கு மூன்றாவது கண் ஏற்பட்ட சரித்திரத்தைச் சித்திரிக்கிறது அடுத்த மூவர்ணப்படம். அவரது மனத்திற்கு மகிழ்ச்சியை உண்டாக்கக் கருதி பார்வதிதேவி பின்புறத்தில் நின்று அவரது கண்களைப் பொத்தினதும், அதனால் உலகில் இருள் மூடியதால் அவரது நெற்றியில் மூன்றாவது கண் உண்டானதும், அதனின்று வெளிப்பட்ட பிரளயாக்னிக்குச் சமமான அக்கியால் இமயமலை எரிக்கப்பட்டதும், பார்வதியின் பிரார்த்தனைக்கிணங்க குளிர நோக்க மலை திரும்பவும் முன்போலானதும் மஹாபாரதத்தில் அனுசாஸன பர்வத்தில் 205-வது அத்யாயத்தில் உள்ளன.

ஒரு தனிப்பாடலில் புதைந்துள்ள காதலை விளக்குகிறது "ஆலி நாடன்'' எழுதிய அடுத்த கட்டுரை.

ஜனவரி 26உ-யின் மகத்துவத்தைச் சரித்திரபூர்வமாக விளக்குகிறார் 'தியாகி' இராம சடகோபன்.

அடுத்தபடியாக "சொன்னவண்ணம்'' என்ற வை. மு. ஸ்ரீ. கதம்ப சித்திரம் ஓவிய—போடோ அணியுடன் (ஒரு பகுதி).

"பாடுபடுவோம்!'' என்ற கட்டுரையில் வசுமதி ராமஸ்வாமி மக்களுக்குப் புனித சூழ்நிலையை நிலவுபடுத்துவதன் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறார்.

"நிராசை'' என்ற ஹரிணியின் சிறுகதை ஒரு உணர்ச்சி ததும்பும் சோகச் சொல்லோவியம்.

"யோக க்ஷேமம்'' என்ற வியாசத்தில் காயனபடு ஸி. ஸரஸ்வதிபாய் கீதாஸாரமான ஒரு ஸ்லோகத்தைக் குறித்த ஒரு சரித்திரத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி ராப்பர் 3-ம் பக்கம்

OFFICE OF BOOK

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.
— திருவள்ளுவர்

ஜகன்மோகினி யென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
— வீராகவ கவி

Vol. 27. விரோதி ஞூ, சுதந்தர சகாப்தம் January.
No. 1. மார்கழி மீ 30-ம் திங்கள் 1950.

பாயிரம்

எட்டு மிரண்டும் அறியாத பேதை எனதுளத்தில்
மட்டவிழ் சோலைக் குருகைப் பிரான்வந்து மன்னியதி
சிட்டர் புகழ்ந்திடும் சீதரன் கீர்த்தியைச் செப்புகெனக்
கட்டளை யிட்டதனல் துணிந்தேன் கவி செப்புதற்கே.

திருவல்லிக்கேணி

விருத்தம்

திக்கெலாம் புகழந் திருவல்லிக்கேணித் திருநகர் கைரவதீர்த்தப்
பக்கமீதோளிருமானந்த நிலையம் பாவை ருக்மிணி யோடுநின்றேய்
சிக்கெனத் தேரிற்றிகழ் விசயனுக்குத் தீர்க்கமாய்க்கீதைமுனுரைத்தோய்
சக்கரத் திரவிமறைத்தவன் பார்த்தசாரதீதாளினை யருள்வாயே.

ராகம்—காம்போதி

பல்லவி

ஸ்ரீருக்மிணீ சாய நம ஸ்தே, நமஸ்தே
தினகர கோடிகோடி, தே ஜாய, தீனஜன போஷாய (ஸ்ரீருக்)

அநுபல்லவி

சாருதோய கைரவதட, தீர ஸர்வசரண்யாய
க்ரூரகம்ஸாதிதமன, கோபஸ்வரூப தரணுய
பாரசோக ஹரணதரணி, பாலனுக்ர கண்யாய
மாரஜனக விசித்ர தர, மஞ்சுலா வண்யாய (ஸ்ரீருக்)

சரணம்

ஸ்ரீகர நந்தஸூகுமார, ஹலாயுதப்ரிய ப்ராத்ரே
சித்த சோகஹரணநிபுண, கீதோபதேசகர்த்ரே
வேகரத விஜயாஸூித, வீரப்ருந்த ஸம்ஹார்த்ரே
விச்வரூப கரத்ரே, வேதாகம விதாத்ரே.
பீகராஸுர ஜேத்ரே
பீமராஜ ஜாமத்ரே
மோஹாபஹர ஸவித்ரே
முக்தி போகப்ரதாத்ரே (ஸ்ரீருக்)

— வை. மு. வேதம்மங்கார்,



பால் பொங்குக! **குடியரசு வாழ்க!**

ஸ்ரீ கீதாசாரியன் திருவருளால் நாளது தைத்திங்களன்று நம்மெல்லோர் வீட்டிலும் பால் பொங்கவேண்டும். நம் நாட்டில் ஜனவரி 26-ல் பிரகடனம் செய்யப்படப்போகும் பூர்ண சுதந்தரக் குடியரசு சிரஞ்சீவியாய்ப் பரிமளித்து உலகுக்கே வழிகாட்டியா யமையவேண்டும். நமது அடுத்த இதழ் வெளிவருவதற்குள் மங்களகரமாகப் பால்பொங்கி, குதூகலமாய்க் குடியரசும் ஸ்தாபிதமாகிவிடும். அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

இவ்விதழுடன் மோகினி தனது 27-வது வருடப்பணியைத் துவக்குகிறாள். இப்புத்தாண்டில் சில புதிய அம்சங்களைச் சேர்த்துள்ளோம். அபூர்வமான தனிப்பாடல், பாசுர ஓவியம், வை. மு. வேதம்மங்கார் கீர்த்தனம் முதலியவற்றை விசேஷமாகக் குறிப்பிடலாம். வழக்கம்போல் நாவல் பகுதி, அபூர்வ ராமாயணம், ஆத்மசோதனை, சகோதரியின் சுய சரிதை, வனிதாமண்டலம் முதலியன தொடர்ந்து வெளிவருகின்றன. அடுத்த இதழிலிருந்து மலரின் தொடர்ச்சியாக "சொன்னவண்ணம்" என்ற கதம்பச்சித்திரத்தின் பகுதிகள் வெளிவரும்.

இவ்விதழின் அனுபந்தமாக வெளியாகியுள்ள மோகினி 27-வது ஆண்டு மலர் அளித்துள்ள பலரக விருந்தைப்பற்றி ராப்பர் உள்பக்கங்களில் காண்க. ஒரு விசேஷ அம்சத்தைமட்டும் இங்கு குறிப்பிடுகிறோம். அதாவது, மலரில் வெளியான "ஜீவநாடி" நவீனம் மட்டும் தனிப்பதிப்பாக அச்சாகியுள்ளது. அதன் விலை ரூ. 2. மலரின் விலையும் ரூ. 2 தான். ஆக அந் நவீனம் தவிர மலரில் சுமார் இருமடங்கு அதிக விஷய விருந்தை வாசகர்களுக்கு எவ்வித அதிகப்படியான விலையுமின்றி இனாமாகவே அளித்துக் களிக்கின்றோம்.

ஒவ்வொரு வருடமும் பொங்கலின்போதே மலர் வெளியிட்டு வந்ததால், இவ்வருடமும் அதேபோல் என்றெண்ணி பல சந்தாநேயர்கள் 1-க்குப்பிறகு பணம் அனுப்புவதாகவும் கட்டாயம் மலர் ரிஸர்வ் செய்துவைக்கும்படியும் எழுதியுள்ளார்கள். ஏஜண்டிடம் வாங்கும் வாசகர்களும் சில ஊர்களில் அங்ஙனமே தெரிவித்திருப்பதாக ஏஜண்டுகள் எழுதியுள்ளார்கள். சென்ற வருடம் பொங்கல் கழித்து 2[illegible]-ல் வெள்ளிவிழாவன்று மலர் வெளியாயிற்றே, இவ்வருடம் பொங்கலுக்கு 2 வாரம் முன்னதாகவே வெளியிட்டுவிடுவோமென்று நாங்கள் தீர்மானித்தது சில அன்பர்களுக்கு அசௌகரியமாயுள்ளதை இவ்வாறு அறிந்து அவர்களுக்காகக் கொஞ்சம் பிரதிகளை ரிஸர்வ் செய்துள்ளோம். யார் சீக்கிரம் அனுப்புகிறார்களோ அவர்களுக்கு மலர் அனுப்புவோம். மலர் முழுதும் பதிவா[illegible]றகு பணமனுப்புவோர்க்கெல்லாம் ஜீவநாடி நவீனம் மட்டுமே அனுப்பப்படும்.

அடுத்த இதழில் பூர்ண சுதந்தரத்தின் சுகந்தம் பரிமளிக்கும். சாதாரண இதழைவிட விசேஷித்திருக்கும்; ஆனால் விலை உயர்வு இல்லை. உங்கள் ஏஜண்டிடம் தொடர்ச்சியாக, ஒழுங்காக மாதாமாதம் கொடுக்கும்படி ஏற்பாடுசெய்துகொள்ளுங்கள். அல்லது, சந்தாதாரராய்ச் சேருங்கள். இவ்விதமாவது உங்கள் அன்பு மழையைப் பொழியுங்கள். —வை. மு. ஸ்ரீ.

உள்ளூருஞ் சிந்தைநோ யெனக்கே தந்து என்
    ஒளிவளையும் மாநிறமும் கொண்டா ரிங்கே
தெள்ளூரு மிளந்தெங்கின் தேறல் மாந்திச்
    சேலுகளும் திருவரங்கம் நம்மூ ரென்ன
கள்ளூரும் பைந்துழாய் மாலையானைக்
    கனவிடத்தில் யான்காண்பன் கண்ட போது
புள்ளூரும் கள்வா! நீ போகே லென்பன்
    என்றாலு மிதுநமக்கோர் புலவிதானே ?

திருநெடுந்தாண்டகம். (23.)

உள்ளுக்குள்ளேயே படரும்படியான மனோவியாதியை என்னொருத்திக்கே உண்டாக்கி, எனது வளைகளையும் மேனி நிறத்தையும் இத் திருமணங்கொல்லையிலே கொள்ளைகொண்டுபோனார்; ஸ்ரீரங்கம் நமது இருப்பிடம் என்றும் சொல்லிப்போனார். அவரைக் கனவிலே காணப்பெற்று, 'என்னைவிட்டுப்போகலாகாது!' என்றேன். இவ்வாறு கனவில் கலந்ததும் நமது ஆற்றாமை அதிகரிக்க உறுப்பானதே யன்றோ!"

தலைமகள் தோழியிடம் சொன்ன வார்த்தையாகத்
திருமங்கையாழ்வார் அருளிச்செய்தது.

திருமணப் புதுமுறை வாழ்த்து

சிவநேசச் செல்வர்—துறைமங்கலம் சிவப்ரகாச சுவாமிகள் அருட் கவி வள்ளலாய்த் தோன்றி இயற்றியுள்ள ப்ரபந்தங்கள் பலவுள. ஓரோர் சமயங்களில் தனிப்பாடல்களாகவும் பாடியருளியதுண்டு.

ஒரு சிவனடியார் இல்லத்தில் நிகழும் திருமணத்துக்கு இவர் வருந்தி யழைக்கப்பட்டார். அப்பொழுது பல உற்றோரும் உறவினரும் வந்திருந்து பொன்னாகவும் பொருளாகவும் மணமக்கட்குப் பல வரிசைகள் வழங்கினர். நமது சுவாமிகளோ பிறர் தந்த அழியும் பொருள்கள் போலில்லாமல் நிலை நின்ற வாழ்த்தாக ஐந்து கவிகள் அருளிச்செய்தார். நகைச்சுவையும் நயம் பலவும் விளங்கும் ஒரு செய்யுளை இங்கு நாம் அநுபவிப்போம்.

அரனவ னிடத்திலே ஐங்கரன் வந்துதான்
ஐய! என் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளினான் என்றே சிணுங்கிடவும்
அத்தன் வேலவனை நோக்கி
விரைவுடன் வினவவே யண்ணனேன் சென்னியில்
விளங்குகண் எண்ணின னென
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீ யப்படி
விகடமேன் செய்தா யென
மருவுமென் கைந்நீள முழமளந் தானென்ன
மயிலவன் நகைத்து நிற்க
மலையரையன் உதவவரும் உமையவளை நோக்கிநின்
மைந்தரைப் பாரா யெனக்
கருதரிய கடலாடை யுலகுபல வண்டங்கள்
கருப்பமில் பெற்ற கன்னி
கணபதியை யருகழைத் தகமகிழ்வு கொண்டனள்
களிப்புட னுமைக் காக்கவே!"

கயிலையில் பரமசிவன் மாலைப்பொழ்தில் ஜபம் செய்துகொண்டிருக்கிறார். மலைமகள் மலர் கொய்துகொண்டிருக்கிறாள். சிறுவர்கள் ஐங்கரனும், அறுமுகனும் ஓடியாடி விளையாடுகின்றனர். அவர்களிடையே ஒரு ரஸமான விளையாட்டுச்சண்டை உண்டாகிறது.

விநாயகர் தன் தந்தையிடம் ஓடிவந்து, "அப்பா! நம்ப சுப்பிணி என் காதை வெடுக்கென்று கிள்ளிவிட்டான்" என்று சொல்லிச் சிணுங்குகிறார்.

சிவ:—(அவசரமாக) வேலா! நீ ஏன் அவன் காதைக் கிள்ளினாய்?

முருகன்:—அப்பா! அண்ணன் என் முகங்களிலுள்ள பன்னிரு கண்களையும் ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணுகிறானே! அது மாத்திரம்?

சிவ:—விநாயகா! அப்படி விகடம் செய்துவிட்டு அழுகையென்ன?

கணபதி:—எனது துதிக்கை எத்தனை முழம் இருக்கிறதென்று தம்பி அளந்து பார்த்தானே; அது மாத்திரம்?

சிவ:—முருகா! இப்படியா உன் அண்ணனைப் பரிகசிப்பது?

பதில்சொல்லமாட்டாமல் முருகன் சிரித்து நிற்கிறான்.

சிவ:—"பார்வதி! உன் குழந்தைகளைச் சண்டைபோடாமலிருக்கச் சொல். பூப்பறிப்பது பிற்பட்டு ஆகட்டும். எனது ஜபமும் தடைபடுகிறதே. இவர்கள் பேசும் கட்சிகளுக்கு முடிவைக் காணோம்" என்றுகூற, பல உலகுகளையும் கருத்தரியாமலே தோற்றுவித்த சக்திதேவி, கணபதியைத் தேற்றி மகிழ்ந்தாள். அத்தகைய அம்பிகை களிப்புடன் மணமக்களிருவரையும் காப்பாளாக!

வசுமதி ராமஸ்வாமி | **சிறுகதை**

இவளன்றோ பெண்!

"அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி யழகும் புவிப்பொறையும்—வன்னமுறும்
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்."

மனைவியின் சிறப்பியல்புகள்--ஒரு தனிப்பாடல்

"ஹேமா! இன்று உனக்கு ஒரு ஸந்தோஷ சமாசாரம் கொண்டுவந்திருக்கிறேன். தற்செயலாய் நேர்ந்தது. நமக்கு நல்ல காலம் வந்துவிட்டது ஹேமா!" என்று குதூகலத்துடன் சொல்லிக்கொண்டேவந்தான் நடராஜன்.

காலையில் இல்லாமல் மாலைக்குள் அப்படியென்ன பிரமாத அதிர்ஷ்டம் வந்துவிட்டது? என்னால் நம்பமுடியவில்லையே; காரியாலயத்தில் சம்பள உயர்வா? அல்லது பெரிய உத்தியோகத்துக்கு மாறுதலா? அல்லது ஆபீஸில் யாரோ ஒரு ராவ் உங்களிடம் விரோதப்படுகிறானென்று சொல்லிக்கொண்டிருந்தீர்களே, அவனுக்கு மாற்றலாகிவிட்டதா?

இரு, அவசரப்படாதே; ஹேமா! நீ கேள்விகளை அடுக்கிவிட்டால் எப்படி பதில் சொல்வது? நீ சொல்லுகிற அதிர்ஷ்டமெல்லாம் நமக்கு வந்துவிடவில்லை. ஆனாலும் சந்தோஷப்படக்கூடிய சம்பவந்தான் இன்று நேர்ந்தது.

என்ன விஷயமென்றுதான் சொல்லிவிடுங்களேன். ஒன்றுமில்லாததை கோபுரத்தில் தூக்கிவைப்பது உங்கள் சுபாவம்.

அப்படிச்சொல்லாதே ஹேமா! அடிக்கடி உன்னிடம் சொல்வேனே என் நண்பன் T. R. நாதன் என்பவனைப்பற்றி, அவன் என்னுடன் முதல் வகுப்பிலிருந்து B. A. வரை ஒன்றாகப் படித்தவன். அல்லும் அசலுமாக நாங்கள் வளர்ந்தோம். இருவரும் ஓராத்தில் சாப்பிட்டு, ஒருவிளக்கில் படித்து ஒரு அறையில் தூங்கி வாழ்ந்தோமென்றெல்லாம் உன்னிடம் சொல்லி இருக்கிறேனல்லவா? பின்னால் என் தகப்பனாருடைய ஏழ்மையில் என்னை மேல் படிப்புக்கு அனுப்பமுடியவில்லை. அவனுடைய செல்வாக்கில் அவன் மேல்நாட்டிற்குச் சென்று ஐ. ஸி. எஸ். பாஸ்செய்து ஸப்கலெக்டராக இந்தியாவுக்கு வந்தான். வெகுநாள் வரை தெலுங்கு ஜில்லாவில் இருந்தான். ஒவ்வொருநாள் நாம் தரித்திரத்தின் பிடியில் அகப்பட்டு நசுங்கும்பொழுது என் நண்பனை நினைத்துக்கொள்வேன். ஏதாவது உதவிகோரி கடிதம் எழுதலாமென்றுகூட தோன்றும். ஆனால் ஐ. ஸி. எஸ் உத்தியோகஸ்தன் எப்படி மாறி இருக்கிறானோவென்று எழுதாமலிருந்தேன். ஆனால் ஹேமா! என்ன ஆச்சர்யத்தைச் சொல்லுவது! இன்று நான் வீட்டிற்குத் திரும்பும்பொழுது சமீபத்தில் ஒரு பெரிய கார் ஹார்ன் கேட்டது.

திரும்பிப் பார்த்தால் என் நண்பன் ரங்கநாதன் என் முதுகில் தட்டி யோகக்ஷேமம் விசாரித்தான். போன வாரம்தான் சென்னைக்கு மாற்றி வந்திருக்கிறான். அதைக்கூட நான் தினசரியில் பார்க்கவில்லை. உன்னையும் அழைத்துக்கொண்டு அவன் பங்களாவுக்கு வரச்சொல்லி கூப்பிட்டிருக்கிறான்.

"சரிதான்! இவ்வளவு நேரம் கதை சொன்னதில் உங்களுக்கு வந்த பாக்கியமென்ன வென்றுதான் எனக்குத் தெரியவில்லை" என்று வெறுப்புடன் சொன்னாள் ஹேமா.

பொறு ஹேமா, இதில் நமக்கு வந்த அதிர்ஷ்டத்தைச் சொல்லுகிறேன். இரண்டு மாதத்திற்குமுன் தீபாவளி சமயத்தில் காசில்லாமல்

எவ்வளவு கஷ்டப்பட்டோம். குழந்தை சசிக்கு ஒரு பட்டுப் பாவாடை வாங்கமுடியாமல் எப்படிப் புழுங்கினோம். கடன் கேட்டு வாய் ஓய்ந்தேன். கொடுப்பாரில்லை. இப்பொழுது பார்! அடுத்துவரும் பொங்கல் பண்டிகைக்கு கொஞ்சம் கடன் கேட்டால் உடனே தூக்கிக் கொடுப்பான் என் நண்பன். மெதுவாகத் திருப்பிக் கொடுக்கலாம். கொஞ்சங் கொஞ்சமாக கொடுக்கலாம். என் நண்பனுக்குப் பெருந்தன்மை.

அழகுதான் போங்கள். கடன் வாங்க ஒரு ஆள் அகப்பட்டால் அது பெரும் பாக்கியமா? கடன் வாங்குகிற அன்று இருக்கிற உற்சாகம் மறுநாளே மங்குமே. இதில் ஒரு சந்தோஷமா? ஒன்றுமில்லாததை புகழ்வதும், உங்களையே ஏமாற்றிக்கொண்டு எல்லாரிடமும் அதிகப்படியாக எதிர்பார்ப்பதும் ஒருவழக்கம். பிறகு ஏமாந்து மனம் சோம்புவது; டம்பப் பேச்சு எதற்கு? தரித்திரத்தைக் கண்டு நானொன்றும் உங்களைப்போல் கோழையாகிவிடவில்லை. அத்துடன் போராடி வெற்றிகிடைத்தால் பார்ப்போம். இல்லாவிட்டால் வீர சொர்க்கம். போலி பவிஷில் மனதை ஏமாற்றினால் அது நம்மைப் பழிவாங்கிவிடாதா?

இந்த அர்த்தம்மிகுந்த சொற்கள் நடராஜன் காதில் விழவில்லை; விழுந்தாலும் அவனுக்குப் புரியாது!

ஹேமா அமைதியான பெண். தீர ரமணி. ஏதோ சோற்றுக்கு, துணிக்கு உள்ள குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள். நடராஜன் படித்து பட்டம்பெற்றவன், நல்ல உத்தியோகமாகுமென்ற நம்பிக்கையில் அவள் தகப்பனாருக்கு மாப்பிள்ளை ஆனான். ஆனால் பொல்லாத அதிர்ஷ்டம் அவனை மறந்துபோய்விட்டது. எண்பது ரூபாய் சம்பளத்தில் ஒரு பாங்கியில் அமர்ந்தான். ஆமைவேகத்தில் வருஷம் 2, 3. ரூபா.—சம்பளம் உயர்வு. ஹேமா பெயருக்கொப்ப அந்த பணத்தில் தங்கம்போல் குடும்பம் நடத்தினாள். ஒரு உழக்கு நெய்யிலும் பொழுதுபோக்கலாம்; ஒரு உழக்கு நொய்யிலும் பொழுதுபோக்கலாமென்று ஔவை சொன்னதை ஹேமா ருசுப்பித்தாள். ஒரு உழக்கு நொய்யே அவள இன்ப வாழ்க்கைக்கு போதுமானதாக இருந்தது. ஆனால் யுத்தத்திற்குப் பிறகு அகவிலை ஏற்றத்திலும் இரண்டு குழந்தைகளைக்கொண்ட குடும்பத்தையும் அவளால் சமாளிக்க முடியாமல் திணறினாள். நடராஜன் பொல்லாதவனில்லை. ஆனால், ஊதாரி; வீண்டம்பப் பேச்சு. அவாளைத்தெரியும் இவாளைத்தெரியுமென்று கித்தாப்பில் காசை இழப்பான். வீண் கௌரவத்திற்காக யாருக்காவது கடன்கொடுப்பான். இதனால் ஹேமா மனத்தில் வெறுப்பு. நடராஜன் பேச்சில் நம்பிக்கை இல்லை. இவன் படாடோபம் அவளுக்குப் பிடிப்பதில்லை.

ஹேமா! இன்று ஆபீஸுக்கே என் நண்பன் டெலிபோன் செய்துவிட்டான். நாளைக்கு அவன்வீட்டில் குழந்தைக்கு பிறந்தநாளாம். விருந்து சாப்பிட உன்னுடன் வரும்படியாகச் சொன்னான். வீட்டிற்கு வர அவகாசமில்லையாம். உபசரித்துக் கூப்பிட்டான். 'மாப்பிள்ளை ஸார் தனியாக வராது, தம்பதிகளாய் வரணும்' என்று பரிகாசம் வேறுசெய்தான். கோஞ்சம்கூட கர்வமேயில்லை. நம்மை மதித்துகூப்பிட்டிருக்கிறான் பார்!

கொஞ்சம்கூட கர்வமில்லை! நம்மை மதித்து கூப்பிட்டிருக்கிறார்! என்னால் நம்பவேமுடியவில்லை. அப்படி என்னதான் பால்யத்தில் உற்ற நண்பர்களாயிருந்தாலும் மலைக்கும், மடுவுக்குமுள்ள அந்தஸ்தில் இருக்கும்பொழுது இப்படி நட்புரிமை பாராட்டினால் அவருக்காக மழைகொட்டலாமே; பூமியில் ஒரு தூறல் விழுமாட்டேனென்று சத்தியாக்கிரகம் செய்கிறதே! அவர் மனைவிகூட அவ்வளவு குணசாலியா? நாளைக்கு நம்மால்

போகமுடியாதே. பண்டிகையும், பருவமுமாய் எப்படிப்போவது? நம்மாத்தில் சாப்பிடாமல் பிறராத்தில் சாப்பிடமுடியாதே.

அதற்கென்ன செய்வது ஹேமா? பொங்கல் பண்டிகை ஒவ்வொரு வருஷமும்தான் வருகிறது. நண்பன் அழைத்த சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டாமா? அங்கேயும் சம்பிரமமாய் விருந்துதானே சாப்பிடப்போகிறோம். நண்பன் குழந்தைக்குத்தான் எதாவது பரிசு வாங்கிக்கொண்டுபோக பணமில்லையே யென்று யோசிக்கிறேன்.

அதுக்குகூட கவலை வேண்டாம். நான் பொங்கல் பண்டிகை வருகிறதேயென்று கஷ்டப்பட்டு பதினைந்து ரூபாய்சேர்த்துவைத்திருக்கிறேன். அதில் 5 ரூபாய்க்கு நாளை சமயலுக்கு வேண்டிய சாமான்கள் வாங்கிவிட்டேன். மீதமான 10 ரூபாயில் உங்கள் நண்பர் குழந்தைக்கு ஒரு சொக்காய் துணி வாங்கினால்போகிறது.

அப்படி சொல்லு ஹேமா! நீ ஹேமா வென்றால் பத்தரை மாற்று பசும் பொன்தான். எப்படியோ சேர்த்திருக்கிறாயே. அப்படியே செய்வோம்.

ஆனால் நாளும் கிழமையுமாக சாப்பிடப்போகவேண்டாம். மாலையில் போய்ப் பரிசைக் கொடுத்துவிட்டு காப்பி, பலகாரம் கொடுத்தால் சாப்பிட்டு வருவோம்.

"வேண்டாம்; ஹேமா! அது நன்றாயிராது. உனக்கு பண்டிகை தினத்தில் சாப்பிடவேணுமென்று தோன்றினால் சர்க்கரைப் பொங்கலை மட்டும் செய்துவிடு. அதை மட்டும் சாப்பிட்டுவிட்டுப் போவோம்" என்றான் நடராஜன்.

ஹேமாவும் ஒத்துக்கொண்டாள். நடராஜனுக்கு ஒரே குஷி. நண்பனைக் காக்காய் பிடித்தால் தனக்கு அபார லாபம் வரும். குழந்தைக்கு பரிசை வாங்கிக்கொண்டுபோனால் நண்பன் பெருமை அடைவான். அதற்குப் பணமும் ஹேமா வைத்திருக்கிறாள் என்ற பெருமிதம்.

பேதைப் பெண் ஹேமா எவ்வளவு நாள் தன் கணவனுக்கும் குழந்தைகளுக்கும் சமைத்துபோட்டுவிட்டு வடித்த கஞ்சியில் உப்பைப் போட்டுக் குடித்துவிட்டுக் காலம் தள்ளி இருக்கிறாள். அதையெல்லாம் நடராஜன் ஆராயவுமில்லை. ஹேமாவும் அதைத் தெரிவித்து அவன் மனதைச் சஞ்சலமாக்க விரும்பவுமில்லை.

நுங்கம்பாக்கத்தில் பெரிய பங்களா. நடராஜனும், ஹேமாவும் ஒரு வண்டியில்வந்து பங்களா வாயிலில் இறங்கினார்கள். அவ்வளவு பெரிய மாளிகைபோன்ற வீடு நிசப்தமாக இருந்தது. குழந்தையின் பிறந்தநாளுக்கு விருந்தாளிகள் யாரும் வந்ததாகத் தெரியவில்லை. ஒரு நாய் மட்டும் லொள் லொள்ளென்று குலைத்தது. வாயில் காப்பான் முடுக்காக நின்றான். இந்த சூழ்நிலையை ஒன்றுமே நடராஜன் கவனிக்காமல் அங்கவஸ்திரத்தை மடித்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். ஹேமா தயக்கத்துடன் பின்னால் சென்றாள். காவல்சாரன் கொஞ்சம் யோசனையுடன் உள்ளே அனுமதித்தான். ஜீவனில்லாமல் வீடு வெறிச்சென்றிருந்தது. முன்பக்கத்தில் ஹாலில் நடராஜன் உட்கார்ந்துகொண்டு கொஞ்சம் கனைத்து இருமி தன் வரவைத் தெரிவித்தான். ஹேமா உட்கார மறுத்தும் நடராஜன் உபசரணையில் உட்கார்ந்தாள்.

கொஞ்சநேரத்தில் மாடிப்படியில் T. R. நாதனும், அவன் மனைவி சாந்தாதேவியும் இறங்கினார்கள். T. R. நாதன் ஒருமாதிரி முகத்தை வைத்துக்கொண்டு "எங்கே வந்தாயப்பா? ஸௌக்கியமதானே. எனக்கு அவசரமாக வெளியில் வேலை இருக்கிறது. இன்னொரு நாள் பார்ப்போம்.

இவள்தான் என் மனைவி சாந்தா, இவன்தான் என் ஆதிகாலத்து நண்பன்" என்று ஒரே மூச்சில் சொல்லிவிட்டு வெளியில் போய்விட்டான்.

நடராஜனுக்கு ஒன்றுமே புரியவில்லை. தலையை ஒரே சுற்றலாகச் சுற்றியது. ஹேமாவும் பிரமித்துவிட்டாள். சாந்தா ஐந்து நிமிஷம்மட்டும் மரியாதைக்கு உட்கார்ந்து பேசினாள். ஹேமா 'உங்கள் குழந்தை எங்கே' யென்று கேட்டுவைத்தாள். 'குழந்தையா? தற்சமயம் நாங்கள் புருஷ னும் மனைவியும்தான் குழந்தைக'ளென்றுசொல்லி விழுந்துவிழுந்து சிரித்தாள். ஹேமா ஒன்றுமே விளங்காமல் குன்றிவிட்டாள். அவளுடன் பேச வேறு ஒரு விஷயமும் புலப்படவில்லை. முள்ளின்மேல் உட்கார்ந்திருப்பதுபோல் இருந்தாள். அந்த சங்கடமான நிலையைப் போக்குவது போல் டெலிபோன் மணி கிடுகிடுத்தது. 'யாரோ கூப்பிடுகிறார்கள்; நீங்கள் சென்று வருகிறீர்களா'வென்று விடைகொடுத்துவிட்டு சாந்தா மாடிப் பக்கம் பறந்துவிட்டாள். நடராஜனுக்கு ஹேமாவை நிமிர்ந்துபார்க்க தைர்யமில்லை. அப்பொழுது ஹேமாதான் வென்றாள், "வாருங்கள், நேரமாகிறது வீட்டிற்குப் போவோம்" என்றாள்.

நடராஜன் ஹேமாவைப் பின்தொடர்ந்தான். வழியில் ஒருவருக்கொருவர் பேசவில்லை. அப்படி தன்னை வரச்சொல்லி ரங்கநாதம் இப்படி அவமானப்படுத்துவானேன்? ஹேமா நல்லநாளும் கிழமையும் பிறர் வீட்டிற்கு சாப்பிடப் போகக்கூடதென்று தடுத்தும் கிளம்பினோமே. நம்மோடு இருந்தாலும் பரவாயில்லை; ஹேமாவையும் அழைத்துவந்தோமே யென்ற நினைவில் கால்கள் பின்னின. பஸ்ஸுக்குத் தவமிருந்து ஒரு மணிக்கு வீடுவந்து சேர்ந்தார்கள்.

ஹேமா ஒருவார்த்தைகூட அவனைக் கேட்கவில்லை. ஒருநொடியில் சமயலைமுடித்து பண்டிகையைக் கொண்டாடினாள். அன்று மாலை ஹேமாவின் அத்தைபுருஷன் பலராமையர் வந்தார். "என்ன மாப்பிள்ளை ஸார்! இன்று என் பேரனுக்கு பிறந்தநாள் கல்யாணம்; ஹேமாவையும் அழைத்துக்கொண்டு சாப்பிடவரும்படி நேற்று டெலிபோனில் ரங்கநாதனை அழைக்கச் சொன்னேனே! வரவில்லையே!" என்றார், நடராஜனுக்கு அப்பொழுதுதான் விஷயம்புரிந்தது. அசடு வழிகிறது என்பார்களே, அதை அப்பொழுது நடராஜன் முகத்தில் பிரத்யக்ஷமாகக் காணலாம்.

ஹேமா தங்கக்கட்டியாச்சே; இந்த நிலையை நீடிக்கச் செய்வாளா? "வரமுடியவில்லை அத்திம்பேரே! ரங்கநாத அத்தான் குழந்தைக்கா? இன்று இவருக்கு ஒரே தலைவலி. காய்ச்சல் வரும்போலிருந்தது. இங்கே ஆத்திலேகூட பண்டிகை ஒரு தினுசாதான் நடந்தது. இன்னொருநாள் வருகிறோ"மென்றாள். "அப்படியா? மாப்பிள்ளை உடம்புதான் முக்கியம்; ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளம்மா; உன் அத்தை காரணத்தை அறிந்துவரச்சொல்லி தொணப்பிவிட்டாள். இன்னொரு நாள் அவசியம் வாருங்க"ளென்று சொல்லி விடைபெற்றுக்கொண்டார்.

நடராஜன் நாத்தழுதழுக்க "ஹேமா! உனக்குநான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன். நான் அத்திம்பேரிடம் சொல்லத் தெரியாமல் விழித்தேன். சமயோசிதமாகச் சொல்லி மூடிமறைத்துவிட்டாயே" என்றான்.

"மனைவிக்கு புருஷன் கைம்மாறு செய்வதென்று உண்டா? உங்கள் கௌரவம் என்னுடையதல்லவா? இனியாவது நம் நிலைக்கு மேலான சிநேகத்தில் பலன் ஏற்படுமென எதிர்பார்த்து ஏமாறவேண்டா"மென்றாள் ஹேமா. இருவருக்கும் மறக்கமுடியாத இந்தவருஷ பொங்கல் பண்டிகையில் மனம் உண்மை ஸந்தோஷத்தில் பொங்கியது.

அகரம் அறிவுச் சிகரமா?

'அகதிக்குத் தெய்வமே துணை' என்று கோமதி சொன்னாள். 'அகதிசொல் அம்பலம் ஏறாது' என்றாள் காந்திமதி. இவர்கள் இருவரும் 'அகதியைக் குறித்த வேறொரு பழமொழி தெரிந்தால் சொல்லு பார்க்கலாம்' என்று விசாலாட்சியைக் கேட்க, அவள் சிறிதுநேரம் ஆலோசனையில் ஆழ்ந்தாள். பிறகு, 'உங்களைக் காட்டிலும் அகதிக்குப் பொருத்தமான ஒரு பழமொழி சொல்லப்போகிறேன்' என்ற பீடிகையுடன்,

அகதியைப் பகுதி கேட்கிறதா?

என்றாள்.

'உண்மைதான். பொருள் பொதிந்த அரசியல்-பழமொழி. அரசாங்கம் இந்தப் பழமொழியில் பொதிந்திருக்கும் அரசியல் ஞானத்தைத் தன் அகத்திலே பதியவைத்துக்கொண்டால் எவ்வளவு நலமாயிருக்கும். பணக்காரர்களே தீர்வை கொடுக்கவேண்டும், ஏழைகள் சகல சௌகரியங்களையும் அனுபவிக்கவேண்டும்' என்றாள் காந்திமதி.

'ஆனால் காந்திமதி சொன்ன பழமொழியில் அவ்வளவு அரசியல் ஞானம் இல்லையே. அகதிசொல் அம்பலம் ஏறுவதன்றோ ஜனநாயகம்? மேலும் கோமதியம்மாளின் "அகதிக்குத் தெய்வமே துணை" என்ற பழமொழியையும் நான் பாராட்டமுடியவில்லை. "அகதிக்கு அகதியே துணை" என்றல்லவா இருக்கவேணும், "தன் கையே தனக்கு உதவி" என்பதுபோல' என்றாள் விசாலாட்சி.

இந்த அபிப்பிராயத்தில் முற்பகுதியை மாத்திரம் — அதாவது தன்னைக்குறித்துச் சொன்ன பகுதியைமாத்திரம்—ஒப்புக்கொள்வதாக காந்திமதி சொன்னாள். 'அகதிக்குத் தெய்வமே துணை' என்ற பழமொழியில் சமயஞானமும் இருக்கிறது; அரசியல் ஞானமும் இருக்கத்தான் செய்கிறது என்றாள். அகதிகளுக்குத் தெய்வசக்தி துணைசெய்கிறது என்பதை உணர்ந்துகொள்ளும் அரசாங்கம் தர்ம ராஜாங்கமாக நடைபெறாதா?' என்றுகேட்டாள்.

கோமதி சொன்னாள்: 'காந்தா சொன்ன பழமொழியிலும் பொருள் இருக்கத்தான் செய்கிறது. "அகதிசொல் அம்பலம் ஏறாது" என்பது உலகமெங்கும் உண்மையாகத்தான் இருக்கமுடியும். சாதாரண லௌகிக அனுபவம் இது. அகதி சொல்லையும் அம்பலமேற்றிக் கௌரவிப்பது அரசினர் கடமையென்பதை இந்தப் பழமொழி மறுக்கவில்லையே.'

பிறகு, தமிழர் வீடுகளில் சாதாரணமாக வழங்கிவரும் பழமொழிகளிலும் எவ்வளவு அறிவுப்புதையல் கிடக்கிறது என்பது குறித்து மூவரும் விவகரிக்கத் தொடங்கினார்கள். 'பார் இதோ, "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்ற பழமொழியை. என்ன அழகான பழமொழி! எவ்வளவு உண்மையானது!' என்றாள் காந்திமதி.

'இதே கருத்துப் புதையலுள்ள பழமொழி ஆங்கிலத்திலும் உண்டு. அழகான, அறிவு பொதிந்த, பழமொழிகள் நம் தமிழில் மட்டுமல்ல, மற்ற மொழிகளிலும் காணப்படுகின்றன' என்றாள் விசாலம்.

'ஆனால் நமது நாட்டுப் பழமொழிகளில் தத்துவப் புதையல்களும் காணப்படுகின்றன' என்றாள் கோமதி.

'எனினும் லௌகிக ஞானத்திற்கும் குறைவில்லையே.

அகல இருந்தால் நிகள உறவு;
கிட்ட வந்தால் முட்டப் பகை

என்ற பழமொழியைத்தான் பாருங்கள்' என்றாள் காந்திமதி.

'தமிழ்பழமொழிகளில் தத்துவம் இருக்கலாம்; லௌகிகமும் இருக்கலாம்; நகைச்சுவை இருக்கிறதா, மேல்நாட்டுப் பழமொழிகளில் இருப்பதுபோல?' என்று கேட்டாள் விசாலம்.

'சந்தேகம் என்ன? நகைச்சுவை நிரம்பியிருக்கிறது நம் தமிழ்ப் பழமொழிகளில். உதாரணமாக இரண்டு சொல்லுகிறேன்.

அக்கினி மலையிலே கர்ப்பூரபாணம் பிரயோகித்தது போல;
அக்கினி தேவனுக்கு அபிஷேகம் செய்வது போல—

இந்தச் சாதாரணப் பழமொழிகளைக்கொண்டு தமிழர்கள் ஹாஸ்யப் பிரியர்கள் என்பதைத் தெரிந்துகொள்ளலாமல்லவா?' என்றாள் காந்திமதி.

'இந்த இரண்டும் தமிழுக்கும் வடமொழிக்கும் இடையே ஏற்பட்ட கலப்புமணத்தின் பயனாகத் தோன்றிய பழமொழிகள்; ஆரிய திராவிடக் கலப்புமணத்திற்குச் சான்று' என்றாள் விசாலம்.

'நீ சொல்லுகிறது அவ்வளவு சரியில்லை. வடமொழியும் தமிழும் ஏதோ சமீபகாலத்தில் கலப்புமணம் செய்துகொண்டது போலப் பேசுகிறாய். உண்மையில், சரித்திரகாலத்திற்கும் முன்பே இரண்டும் இரண்டறக்கலந்துவிட்டன. இது இருக்கட்டும். ஹாஸ்ய ரஸத்திற்கு ஒரு தூய தமிழ்ப் பழமொழி சொல்லட்டுமா? பழைய காலத்துப் பழமொழியும் இல்லை. ஏழைப் புக்ககத்திலிருந்து பரம ஏழையான பிறந்தகத்திற்கு மகளை வரவழைத்துக்கொண்டார்களாம்; அப்போது மகளுக்குத்தான் எவ்வளவு சௌகரியம்! இதைக் குறிப்பிடும் பழமொழி:

அங்குஏண்டி மகளே கஞ்சிக்கு அழுகிறாய்?
இங்குவாடி கண்ணே! காற்றாய்ப் பறப்பாய்!

சமீப காலத்தில் கிராமத் தமிழிலே அவதரித்த அனுபவ அறிவு இது—இல்லையா?' என்றாள் காந்திமதி.

'அவ்வளவு நீளம்கூட வேண்டாம். ஒரு சிறு பழமொழி எவ்வளவு பெரும்பொருளை அடக்கிக்கொண்டிருக்கிறது பாருங்கள்:

அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?

இந்தக் காலத்தில் சொல்லுகிறார்களே—இரண்டரை வயதுமுதல் ஐந்து வயதுவரையிலும் குழந்தைகள் எத்தகைய பயிற்சி பெறுகிறார்களோ அது அவர்களுடைய வருங்காலத்தைப் பாதிக்கும் என்

றெல்லாம்—இந்த அறிவை நம்மவர்களும் ஓரளவு அனுபவத்தால் பெற்றிருந்தார்களென்று நம்பக்கூடுமல்லவா?' என்றாள் கோமதி.

இதேமாதிரி நான் ஒரு பழமொழி சொல்லட்டுமா? அஞ்சிலும் அஞ்சிற்குள்ளும் குழந்தையை வளையச்செய்வது என்றால் பெற்றோர் இஷ்டப்படியெல்லாம் குழந்தையுள்ளத்தை வளைத்து இடர்ப்படுத்துவதல்ல. குழந்தையின் இயற்கை வேகத்திற்கு இசைந்தபடி உள்ளம் பண்படுமாறு சூழ்நிலை அமைத்துக் கொடுப்பதுதான். இதற்காகக் குழந்தையின் ஆத்மசக்தியை அன்புச் சூழலில் வளரவிடவேண்டும். உண்மையான அன்புச் சூழ்நிலையில்தான் குழந்தைகள்மட்டுமா? —மனிதர்களைச் சார்ந்து வாழும் மற்றப் பிராணிகளுங் கூட நன்கு வளரமுடியும். இந்த அறிவுப் புதையலைக் காட்டும் பழமொழி:

அருமையற்ற வீட்டில்
எருமையும் குடியிராது!

இப்படியிருக்க, அன்பு என்ற அருமை இல்லா வீட்டில் குழந்தையுள்ளம் எப்படிக் குடியிருந்து வளரமுடியும், வளையமுடியும், விளையமுடியும்?' என்றாள் காந்திமதி.

'தமிழர்களுடைய அறிவுச் சிகரத்தைத்தான் பழமொழிகள் காட்டுகின்றனவா?

அருமை மருமகள் தலைபோனாலும்
ஆதிகாலத்து உரல் போகலாமா?

என்பதுபோன்ற மூடநம்பிக்கைகளும் பழமொழிகளாக வந்து தொந்தரவு செய்கின்றன அல்லவா?' என்றாள் விசாலாட்சி.

அதற்குக் காந்திமதி சிரித்துக்கொண்டே, ஒரு பழமொழியில் ஒரு எழுத்தைமட்டும் மாற்றி,

அருண்டவன் கண்ணுக்கு
இருண்டதெல்லாம் பேய்

என்றாள்.

'சரி, மூடநம்பிக்கை மட்டுமல்ல, நல்ல நம்பிக்கையும் இருக்கிறது என்கிறாய். இது இப்படி இருக்கட்டும்.

அல்லல் ஒருகாலம்
செல்வம் ஒருகாலம்

என்ற காலத்தின் தலையிலும், தலைவிதியின் தலைமேலும் பாரத்தைப் போட்டுவிட்டு அல்லற்படுகிறார்களே நம் மக்கள்' என்றாள் விசாலம்.

அதற்குக் கோமதி, 'அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிக்கிறாய்!' என்று ஒரு பழமொழியிலேயே பதில் சொன்னாள். ஆம், தனக்கு உகந்த சீர்திருத்த—அவலை நினைத்துக்கொண்டு தானே பேசுகிறாள்?

'பழமொழிகளில் கொள்கைகளை மட்டும் பார்த்துக்கொண்டே போனால் போதாது. பழமொழிகளின் கவிச்சுவையையும் கவனிக்க வேண்டும். உதாரணமாக,

அவன், வல்லாள கண்டனை வாரிப் போரிட்டவன்

என்ற பழமொழியைப் பாருங்கள்.

அழையா வீட்டில் நுழையா விருந்து

என்பதைத்தான் பாருங்கள்.

அளக்கிற நாழி அகவிலை அறியுமா? அதன் சுவை அறியுமா?

என்ற பழமொழியில் உள்ள கவிச்சுவையைத்தான் பாருங்கள்' என்றாள் காந்திமதி.

அதைத் தொடர்ந்து கோமதி சொன்னாள்: 'சும்மா கொடுப்பதற்கும் கடன் கொடுப்பதற்கும் உள்ள வேற்றுமையைத்தான் பாருங்கள்:

அள்ளிக் கொடுத்தால் சும்மா,

அளந்து கொடுத்தால் கடன்.

அறிந்ததாகச் சொல்லிக்கொண்டு அறியாமையோடு விபரீத அறிவை வெளியிடும் பரிதாப நிலையை,

அறிவேன், அறிவேன்,

ஆலிலை புளியிலைபோல் இருக்கும்!

என்ற பழமொழி எவ்வளவு தெளிவாய்க் கவிச்சுவையுடன் வெளியிடுகிறது!'

'ஒரே ஒரு பழமொழியைக் கேட்டுவிடுங்கள். ஒருவன் தன் நிலை அறியாது பிறரைப்போல் எழுதவோ பேசவோ ஆரம்பிக்கிறான் என்பதை "ஆகாயத்தோட்டி'யான காகத்தைக்கொண்டு வெளியிடும் பழமொழி:

அன்னநடை நடக்கப்போய்த்

தன்நடையும் இழந்ததாம் காக்காய்.

எவ்வளவு அனுபவ அறிவு அத்தர்போல் உறைந்து கவிச்சுவையாகிக் கிடக்கிறது சில பழமொழிகளிலே!' என்றாள் காந்திமதி.

திடீரென்று விசாலாட்சி, 'நாம் இந்தச் சம்பாஷணையில் உபயோகித்துக்கொண்ட பழமொழிகளெல்லாம் அகர வரிசையிலேயே அமைந்துவிட்டன! என்ன அதிசயம்! அகரம்தான் அறிவுச் சிகரமா?' என்றாள்.

அதற்கு காந்திமதி 'ஆகாரத்திலும் அறிவுச்சிகரம் காணலாமே வேறொரு சமயம்!' என்றாள்.

அத்தான்—சிலேடை

ஸ்ரீவானமாமலை மடம் ஆஸ்தான வித்வான் தென்திருப்பேரை அபிநவகாளமேகம் ஸ்ரீ. அநந்தகிருஷ்ணையங்கார்ஸ்வாமி, மதுரை டெக்னிகல் ஸ்கூலில் ஒருசமயம் சிலேடைகளாய்ப் பொழிந்தபின் சபையோர் கூடவந்த அத்தானை யாரெனக்கேட்டபோது பாடிய சிலேடை:

"நல்லதோர் குடும்பன் யார்க்கும் நாவித னின்சொல் தட்டான்
புல்லர்க ளிடத்தில் நாடான் பொருந்திய விடையன் மேலோர்
சொல்லுநற் கவிக்கு நெஞ்சத் துருக்கனித் தரணித் தேவன்
இல்லுறு மெனக்கத் தானு விசைந்தன னறிமின் னீரே"

குடும்பன்—நல்ல குடும்பத்தைச்சேர்ந்தவன்; ஓர் ஜாதி. நாவிதன்—நாவில் இதமுடையவன்; அம்பட்டன். பொருந்தியவிடையன்—கேள்விக்குத்தக்க விடையளிப்பவன்; ஆயன். நெஞ்சத்து உருக்கன், நெஞ்சத்துருக்கன். தரணித் தேவன்—பூசுரன்; ஓர் ஜாதி.

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

1919-ஆவது வருஷம்

செஞ்சிப் பிரயாணம்

வருஷ ஆரம்பத்தில் கிறிஸ்துமஸ் விடுமுறையில் ஆச்ரமத்துப் பெண்கள் சிலருடன் செஞ்சிக்குப் போய்வந்தோம். திண்டிவனத்தில் இறங்கி பஸ்ஸில் போகவேண்டும். யாத்திரைக்கு சுகமான குளிர்ச்சியான காலம். செஞ்சியை சமீபிக்கும்போது கூழாங்கல்போல் தேய்ந்து மழமழப்பான பெரிய பெரிய கற்களாலான மலைகள் நிறையக் காணப்படும். ஊரையடுத்து சங்கராபரணிநதி ஓடுகிறது. நாங்கள் போன சமயம் ஸ்நானத்துக்குவேண்டிய அளவு ஜலம் நதியில் தெளிவாக ஓடிக்கொண்டிருந்தது. நதிக்குப் பக்கத்தில் உத்தியோகஸ்தர்கள் தங்குவதற்கு அழகிய விடுதி யொன்று. கிருஷ்ணகிரி ராஜகிரி என்னும் இரண்டுமலைகளையும் ஏறிப்பார்த்தோம். தேசிங்கு (ஜயஸிங்?) ராஜன் ஆண்ட காலத்தில் கட்டப்பட்ட கோட்டைகள், அரண், அகழ், பொக்கிஷசாலை, தானியசாலை, ரங்கநாதர் கோவில் எல்லாம் பார்க்கத் தகுந்தவை. மலையின் மேல்பாகத்தில் ஒரே பெரிய பாறையினாலான சிகரம். ஆங்காங்கு பெரிய தேன் அடைகள். மலையின் மேல்பாகத்தை அடைந்துவிட்டால் அங்கு சுற்றிலும்மேலும் பாறைகளால்மூடப்பட்டு ஒரு பாகத்தில் படிக்கட்டுக்களின் அடியில் ஒரு சுனை. ருசியான தீர்த்தம். மலையின் மேலிருந்து சுற்றிலும் பார்த்தால் பசுமையான வயல்களின் காட்சி. 4-நாட்கள் செஞ்சியிலிருந்துவிட்டு சென்னை திரும்பினோம்.

1919-ஆம் வருஷம் ஆச்ரமத்தில் வந்துசேர்ந்த பெண்கள் சுமார் 20. ஏற்கெனவே இருந்தவர்கள் சுமார் 70. வருஷக் கடைசியில் கிட்டத்தட்ட 90 பேர் இருந்தனர். இந்த வருஷம் S. S. L. C. பரீக்ஷைக்கு ஆச்ரமத்திலிருந்து போய் தேர்ச்சி பெற்றவர்கள் 3 பேர். வி. செல்லம், வி. விசாலம், பத்மாபாய். [வி. செல்லம் மேல் படிப்பு படித்து பட்டதாரியாகி இப்போது ஸ்கூல் இன்ஸ்பெக்டரஸ்ஸாயிருக்கிறாள். பத்மாபாய் ஒரு நர்ஸாக இருக்கிறாள்.]

அய்யரின் புனர் விவாகம்

விவாகம் செய்துகொள்ள இஷ்டப்படும் சில வயதான புருஷர்கள், வயதான பெண்கள் என் வழியாகக் கிடைப்பார்கள் என்னும் எண்ணத்துடன் எனக்குக் கடிதம் எழுதுவது வழக்கம், அன்றுமுதல் இன்றுவரைக்கும். கும்பகோணத்தில் சொத்துள்ள 30 வயதுள்ள, முதல்தாரத்தை யிழந்துவிட்ட சுப்ரமணிய அய்யர் என்பவர் வயதான ஒரு பெண் வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வந்துசேர்ந்தார்.

எழும்பூரில் முதன்முதல் ஆச்ரமத்தில் படித்த சீதாலக்ஷ்மியின் சகோதரி 18 வயதான தர்மாம்பாளின் தகப்பனார் வரன் கிடைக்காமல் தவித்துக்கொண்டிருந்தார். இரண்டே நாட்களில் விவாகம் நிச்சயமாகி மூன்றுநாள் மார்ச்சு மாதம் 30-ந் தேதி அரைநாளில் கலியாணமாகி மணமாலையுடன் தம்பதிகள் வந்து எங்களை நமஸ்கரித்து ஆசிர்வாதம் பெற்று,

அன்றிரவே புறப்பட்டு கும்பகோணம் சேர்ந்தனர். மிகுந்த நன்றியறிதலுடன் கூடிய உணர்ச்சியுடன் கடிதம் எழுதி, மிகுந்த சந்தோஷத்துடன் அவர்கள் இருப்பதாகத் தெரிவித்தார்கள்.

தம்பதிகளின் செல்லச் சண்டை

அந்த வருஷம் கோடை விடுமுறைக்கு நாங்கள் கொடைக்கானலுக்குப்போகும்போது வழியில் கும்பகோணம் ஸ்டேஷனில் சுப்ரமணிய—தர்மா தம்பதிகள் விருந்து உணவுகளுடன் எங்களுடன் இரண்டாவது வகுப்பில் ஏறி, நாங்கள் விருந்து உண்டபிறகு அவர்கள் குடும்பம் நடத்துவதைப்பற்றிப் பேசினார்கள். முதலில் சுப்ரமணியர் தர்முவைப்பற்றிக் குறைகூறி தன் விருப்பப்படி நடந்துகொள்ளும்படி அவளுக்குப் புத்திமதி சொல்லும்படி என்னைக் கேட்டுக்கொண்டார். இதைக் கேட்டுக்கொண்டே வந்த தர்மு தன்மீது ஒரு குற்றமுமில்லையென்றும் தன்னைச் சரியாக நடத்தும்படி அவருக்கு நான் புத்திமதி கூறவேண்டுமென்றாள்.

சு:—அடுப்பில் விறகை எரித்துத்தான் சமையல் செய்வாளாம். ஏன் கரியடுப்பில் நாகரிகமாக சமைக்கக்கூடாதா? விறகுப்புகை கண்ணுக்குக் கெடுதல்தானே; இதுவிஷயத்தில் என் ஆலோசனையை கேட்டுக்கொள்ளக் கூடாதா?

த:—அக்கா! பெண்கள் விஷயத்தில் புருஷர்கள் தலையிடுவானேன். நல்ல சவுக்குவிறகு வைத்து எரித்தால் அடுப்பிலும் கொடியிலுமாய் நிமிஷமாக சமையல் ஆகிறது. கரியடுப்பில் ஒன்று ஒன்றாகச் செய்வது தாமதமாகிறது. இவர்வந்து சமைக்கிறாரா? சமையல்வேலை என்னுடையது, என் இஷ்டப்படி, சௌகரியப்படி செய்ய விடக்கூடாதா?

சு:—அது போகட்டும். ஒழிந்த வேளைகளில மாடியில்வந்து இருக்கக்கூடாதா?

த:—ஐயோ! அதை ஏன் கேட்கிறீர்கள். தினம் 100 தடவை மாடிப்படி ஏறி இறங்கவேண்டும். 'தர்மு! விசிறி கொண்டா' என்பார். கீழே இறங்கிப்போய் எடுத்துக்கொண்டுவந்து 5 நிமிஷத்துக்கெல்லாம் 'தர்மு, தீர்த்தம் வேண்டுமே, கொண்டுவா' என்பார். இந்த இரண்டையும் சேர்த்தே கேட்டிருக்கக்கூடாதா?

சு:—தீர்த்தம் மாடியிலும் எனக்கு வைத்திருக்கவேண்டுமென்று நான் சொல்லாமல் இவளுக்கேதான் தெரியக்கூடாதா?

த:—பிறகு, மாடியிலே உட்கார்ந்திருந்தால் சரிப்படுமா? கீழே சமையல்வேலை, வாசல்கதவை தட்டுபவர்களுக்குக் கதவைத்திறந்து பலபேருக்குப் பதில் சொல்லவேண்டும். வருபவர்கள் போகிறவர்கள், வேலைக்காரர் இத்தியாதி எத்தனையோ தொல்லைகள். வேண்டுமானால் இவர்தான் கீழே வந்து ஈஸிசேரில் சாய்ந்துகொண்டிருக்கப்படாதோ?

சு:—பெரிய மாடியாக கட்டிப்போட்டிருக்கேன், நல்ல காற்று, அதை அனுபவிக்காமல் கீழேவந்து புழுக்கத்தில் என்னையும் உட்காரச்சொல்கிறாளே இது நியாயமா?

இத்தியாதி இத்தியாதி—விஷயங்கள் ஒன்றும் பிரமாதமேயில்லை. அற்பவிஷயங்கள். ஒருவருக்கொருவர் அனுசரித்துக்கொண்டு, விட்டுக்கொடுத்துக்கொண்டு, இணங்கிப்போகவேண்டும். விவாகரத்துச் சட்டம் செய்துகொள்வதற்கு கோர்ட்டுக்குப் போவார்களோ? நிற்க, வேடிக்கையாயும் வினையாயும் பேசிக்கொண்டு வந்த இந்த புது தம்பதிகளின் செல்லச் சண்டையை நாங்கள் விநோதமாகக் கேட்டுக்கொண்டு போனோம். தஞ்சாவூரில் அவர்கள் இறங்கி அடுத்த ரயிலில் கும்பகோணம் போய்ச்சேர்ந்தார்கள்.

மனக்கவலையும் மூளைக்கோளாறும்

இந்தவருஷம் (1919) ஏப்ரல் மாதத்தில் ஆச்ரமத்தில் சாவித்திரி என்னும் ஒரு பெண்ணுக்கு திடீரென்று புத்திக்கலக்கம் உண்டாகிவிட்டது. காரணம் கீழ்வருமாறு. சாவித்திரிக்குத் தாயார் இல்லை. தகப்பனார் அவரது இளைய மனைவியின் அதிகாரத்துக்கு உட்பட்டு, இந்தப் பெண்ணை லீவுகளுக்குக்கூட தன்னிடம் அழைத்துக்கொள்ளாமல் இருந்தார். தகப்பனாருடைய அன்பும் ஆதரவும்கூட தனக்கில்லையே என்னும் ஏக்கம் இந்தப் பெண்ணுக்கு நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டேவந்து, இரவில் இதே கவலையில் தூக்கம் குறைந்து பாடத்திலும் புத்தி செல்லாமல், நாங்கள் எத்தனை சமாதானப்படுத்தியும் பயனில்லாமல்போய் ஒருநாள் திடீரென்று தன் ஞாபகம் இல்லாமல், மூளைக்கொதிப்பு அதிகமாகி கன்னாபின்னாவென்று பேசவும், உளறவும், பேத்தவும் ஆரம்பித்துவிட்டாள். இவள் போடும்கூச்சல் மூன்றாவது மாடிவரைக்கும் கேட்கும். மற்ற மாணவிகள் எல்லாரும் பயந்துபோய்விட்டார்கள். அவளை கீழேயே ஒரு அறையில்வைத்து ஓய்வு எடுக்கச்செய்தும் புத்திமதி கூறியும் பார்த்தோம். பயனில்லை. 2, 3, நாட்களில் நிலைமை மகா மோசமாகிவிட்டது. டாக்டர் முத்துலக்ஷ்மி, கோஷா ஆஸ்பத்திரி தலைவி டாக்டர் ஸ்காட் இருவரும் வந்து அவளைக் கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்குவேண்டிய ஸர்டிபிகேட்டுகள் கொடுத்தார்கள். பிறகு போலீஸ் கமிஷனர் ஆபீஸுக்குச் சென்று அவரிடமிருந்து ஒரு ஸர்டிபிகேட் வாங்குவது மிகுந்த சிரமமாகிவிட்டது. அன்று ஞாயிற்றுக்கிழமையானதால் அவரைப் பேட்டி காண்பதே பிரம்மப்பிரயத்தனமாகிவிட்டது. எப்படியோ, சாவித்திரியின் நிலைமையையும் ஹாஸ்டல் பெண்கள் பயப்படுவதால் அவளை உடனே அங்கிருந்து வெளியேற்றிவிடவேண்டிய அவசரத்தையும் எழுதியனுப்பி அந்த ஐரோப்பியரிடமிருந்து அனுமதிக்கடிதம் வாங்கிக்கொண்டு பிறகு, இன்ஸ்பெக்டரிடம்போய் அவனிடம் விஷயத்தைத்தெரிவித்துவிட்டு, திரும்பி ஐஸ் ஹௌஸுக்கு வரும்போது மணி 7 ஆகிவிட்டது. அதன்பிறகு சித்தியம்மாளும் நானும் முரண்டு அதிகமாகிவிட்ட சாவித்ரியை வண்டியில் சிரமத்துடன் ஏற்றிக்கொண்டு வழியில் கூடியமட்டும் கத்தாமல்பார்த்தும், அவள் கூப்பாட்டினால் கவரப்பட்டுவந்த போலீஸ், ஜனங்களையெல்லாம் தாண்டிக்கொண்டு இரவு 9 மணிக்கு கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரிக்குப்போய், நாங்கள் கொண்டுபோன ஸர்டிபிகேட்டுகளையெல்லாம் அங்குள்ள டாக்டருக்குக் காண்பித்து, அவர் திருப்தியடைந்து, 2 நர்ஸுகள்வந்து சாவித்திரியை வண்டியிலிருந்து இறக்கி அழைத்துப்போகும்போது முரண்டுபண்ணி நர்ஸுகளை கால்களாலும் கைகளாலும் உதைத்து அடிக்க ஆரம்பித்துவிட்டாள். கடைசியாக அவளை அங்குசேர்த்துவிட்டு நாங்கள் வீடு திரும்பும்போது மணி 11. அன்று முழுவதும் ஏற்பட்ட அலைச்சலும் மனவேதனையும் மறக்கவேமுடியாத சம்பவங்கள். அவளுக்கு மூளைக்கலக்கம் ஏற்பட்ட உடனேயே அவள் தகப்பனாருக்கு தந்தியும் விவரமான கடிதமும் எழுதி அவரை உடனே வரும்படியும் முடியாவிட்டால் அவளை கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்கு எனக்கு அனுமதியாவது கொடுக்கும்படியும் எழுதினேன். ஒருவித பதிலும் அவரிடமிருந்து வரவேயில்லை !!

மாதம் ஒருமுறை ஆஸ்பத்திரிக்குப் போய் சாவித்திரியைப் பார்த்துவிட்டு வருவோம். ஆரம்பத்தில் சுத்தமாக அவளுக்கு ஞாபகமேயில்லை. எங்களை யாரென்று அடையாளமே தெரிந்துகொள்ளவில்லை. பிறகு கொஞ்சம் கொஞ்சமாய் குணமாக ஆரம்பித்து ஒரு வருஷத்தில் பூர்ண

மான சௌக்கியமாகிவிட்டது. எத்தனைக் கெத்தனை வேகமாயும் முரட்டுத்தனமாயும் வந்ததோ அத்தனை வேகமாகவே சௌக்கியமும் ஆகிவிட்டது. அனாதை விதவைப் பெண்ணாகிய அவளுக்கு கடவுள் கருணையால் சீக்கிரத்திலேயே குணமாகிவிட்டது எங்களுக்கெல்லாம் ரொம்ப சந்தோஷமாயிருந்தது. மனக்கவலையினாலும் ஏமாற்றத்தினாலும் வேதனையினாலும் ஏற்பட்ட மூளைக் கோளாறு தான், மனோதிடத்துடன் இருந்தால் இனிமேல் இவ்விதக் கோளாறுகள் ஏற்படாதென்றும் டாக்டர்கள் சொன்னதின் பேரில், அவளுக்குத் தைரியம் உண்டாக்கி, அப்பன் இறந்துபோய்விட்டதாகவே எண்ணிக்கொள்ளும்படி அவளுக்கு புத்திமதி கூறி மறுபடி வகுப்பில் சேர்த்தோம். பேய் பிசாசு நம்பிக்கையுள்ளவர்கள், அவளுக்குப் பிசாசு புகுந்துவிட்டதென்று சொல்லி, ஆட்டிவைத்து பூசை போட்டு அடித்து இம்சைசெய்து அவள் நிலைமையை அதிக மோசமாக்கி யிருப்பார்கள். நிற்க, அவள் S. S. L. C. முடித்து, இப்போது ஒரு கவர்மெண்ட் பாடசாலையில் உபாத்தினியாய் சௌக்கியமாயிருக்கிறாள்.

கோடைக்கேற்பட்ட கோடைக்கானல்

ஏப்ரல்மாதம் வருஷப் பரீக்ஷைகள்முடிந்து, ஐஸ்ஹௌஸில் வழக்கம் போல விடுமுறை வகுப்புக்கள் நடப்பதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு என் பெற்றோர்கள் நாங்கள் சகோதரிகளும் கோடைவிடுமுறைக்கு மே மாதம் இரண்டாந்தேதி புறப்பட்டு கோடையின் கானலை சமனம்செய்வதற்கே ஏற்பட்டுள்ள கோடைக்கானல் என்னும் மலைப் பிரதேசத்துக்குப் புறப்பட்டு மறுநாள் உடலுக்கும் மனதுக்கும் குளிர்ச்சியையும் அமைதியையும் கொடுக்கும் அந்த இடத்தைப் போய்ச்சேர்ந்தோம். கொடைக்கானல் ரோடு என்னும் ஸ்டேஷனிலிருந்து பஸ்ஸில் போகவேண்டும். பஸ்ஸில் போகும்போது சமதரையைத் தாண்டி மலைமேல் பாதிதூரம் போகும் வரைக்கும் புழுதியும், உஷ்ணமும், சுழற்சியும், களைப்பும் அதிகம். அதற்கு நேர்மாறுதலாக பிற்பகுதிப் பிரயாணத்தில், உத்ஸாகத்தை யுண்டாக்கும் ரம்யமான குளிர்ந்த மலைக்காற்றும், ஆரோக்கியமான யூகலிப்டஸ் முதலிய விருக்ஷங்களிலிருந்து வரும் ஸுகந்த மணமும், பூலோகத்திலிருந்து தேவலோகத்துக்கு மேலே ஏறிப்போவது போன்ற உணர்ச்சியை உண்டாக்கிற்று. அதுதான் நாங்கள் முதல்தடவை கொடைக்கானல் போனது. ஆனந்தகிரி என்னுமிடத்தில் ஒருவீடு வாடகைக்கு எடுத்துக்கொண்டு அதில் தங்கினோம்.

பல்லாரி—கடப்பை

தாசில்தார் ஸ்ரீமான் திருவேங்கடத்தையங்கார் பல்லாரியிலாரம்பித்து கடப்பையில் முடிக்குமாறு ஓர் வெண்பா இயற்றுமென்ன, அபிநவ காளமேகம் அநந்தகிருஷ்ணையங்கார் ஆசுகவியாக உரைத்தது:

"பல்லா ரியர்கள் பணியும் பராங்குசனைக்
கல்லாவென் நெஞ்சே கணமேனும்—போல்லா
அவக்குணத்தை விட்டேநீ அன்பாய்த் தோழுதால்
பவக்கடலி னின்று கடப்பை"

[பூஜ்யர்கள் பலர் அடிவணங்கிக் கற்கும் நம்மாழ்வாரின் அருளிச் செயல்களைக் கற்றறியாத எனது நெஞ்சே! நீ தீய குணங்களை விட்டொழித்து உள்ளன்போடு வழிபட்டால் ஸம்ஸார ஸாகரத்தைக்கடப்பாய்!]

அபூர்வ ராமாயணம்.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

2. க: வீர்யவாந்?

"வீர்யவாந் க: ?"—வீர்யமுடையவன் யாவன்? என்கிற இரண்டாவது வினவை இனி விமர்சிப்போம். பகவானுடைய திருக்குணங்களில், வீர்யம் சௌர்யம் பராக்ரமம் என மூன்று குணங்கள் சேர்த்து அநுஸந்திக்கப்படுவதுண்டு. இம்மூன்று சொற்களுக்கும் பொருளில் வாசியில்லைபோல் தோன்றினாலும் வாசி கொள்ளலாம்.

எதிரிகளின் சேனை எவ்வளவு பிரபலமாக இருந்தாலும் அதைக் கண்டு சிறிதும் அஞ்சாமை(1), அந்தச்சேனையினுள்ளே ஒருவனாகவே புகுந்து எதிரிகளை அநாயாஸமாகக்கொன்று முடிக்கும் வல்லமை(2), அப்படிச் செய்யுமளவில் தனக்குச் சிறிதளவேனும் பங்கம் நேராதபடி ஸகலவித பங்கங்களும் எதிரிகளுக்கே சாரநிற்றல்(3) என்றிங்ஙனே மூன்று வகையான ஆற்றல்கள் பெரும் போர்வீரர்களுக்கு இருக்கவேண்டியவையுண்டு. இம்மூன்றையுஞ் சொல்லும் சொற்களாக இவற்றைக்கொள்ளலாம்.

இங்கு "க: வீர்யவாந்?" என்று வீர்யமொன்று மாத்திரமே சொல்லப்பட்டிருந்தாலும் மற்றை யிரண்டும் உபலக்ஷணமாகக் கொள்ளத்தக்கன. அல்லது, வீர்ய மென்ற சொல்லிலேயே அம் மூன்று பொருள்களையும் சேர அநுஸந்தானம் செய்யவுமாம்.

கீழே "குணவாந் க:" என்றவிடத்தில் பகவானுடைய எளிமைக்குணத்தை நினைத்து உருகி நெஞ்சு நீர்ப்பண்டமாகிக் கிடப்பவர்களுக்கு உடனே இந்த வீர்யத்தை யநுஸந்தித்தாலல்லது தரிப்பு ஏற்படாதாதலால் இதனை அடுத்த வினவாகவைத்தது மிகப்பொருத்தமாகும். ஸௌலப்யத்தை யநுஸந்தித்து உருகுமவர்கள் ஈடுமெடுப்புமில்லாத மேன்மையை யநுஸந்தித்தே ஒருவாறு தரிக்கவேணுமென்பது ஆசிரியர்களின் அருமருந்தான அருளிச்செயல்.

ஸ்ரீராமாயணத்திலும், மற்றும் இராமபிரானைப்பற்றிப் பேசும் பல நூல்களிலும் இராமனை வீரனென்றும் சூரனென்றும் பராக்ரமசாலியென்றும் பாராட்டிக்கூறுவது விசேஷமாகக் காணத்தக்கது. இராமனுக்கு மஹாவீரனென்ற ஒரு திருநாமமுண்டு. "ஜயஜய மஹாவீர!" என்றே ரகுவீரகத்யத்தின் தொடக்கம். வீரராகவனென்றே ஒரு திவ்ய தேசத்தில் திருநாமம் பெற்று விளங்குகின்றமை ப்ரஸித்தம். பவபூதிமஹாகவி மஹாவீரசரிதமென்றே பெயரிட்டு நூலியற்றினன்.

ஆழ்வார்கள் இராமனது செயலைச் சொல்லி வீரனென்றே வாய் வெருவுவர்கள்; "இலங்கை மன்னன் ஐந்தொடைந்து பைந்தலை நிலத்துகக் கலங்கவன்று சென்று கொன்று வென்றிகொண்ட வீரனே!" என்றும் "மாறுசெய்த வாளரக்கன் நாளுலப்ப அன்றிலங்கை நீறுசெய்து சென்றுகொன்று வென்றிகொண்ட வீரனார்" என்றுமுள்ள [திருச்சந்த விருத்தம்] பாசுரங்கள் காண்க.

இவை யெல்லாவற்றிலுங்காட்டில் எதிரி கையாலே விடுதீட்டென்னுங் கணக்கிலே இராவணனே வியந்து போற்றும் வீரியம் இராமனுக்குள்ளது. [வால்மீ. யுத்த. 106-6.] "சத்ரோঃ ப்ரக்க்யாதவீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமைঃ" என்பது இராவணனுடைய மொழி. இராமனை ப்ரக்க்யாதவீர்யனென்று இராவணன் தன்வாயினால் போர்க்களத்திற் சொல்லுவதானது அந்த வீர்யத்தைத் தான் மிக நன்றாகவநுபவித்ததனாலன்றோ! "விக்ரமை: ரஞ்ஜநீயஸ்ய" என்றும் அடுத்தபடியே சொல்லுகிறான்.

இங்ஙனே சொல்லும்படியாக இராமன் செய்த வீரச் செயல்கள் பலபல விருப்பினும் ஒன்றெடுத்துக் காட்டுவோமிங்கு. யுத்த காண்டத்தில் தொண்ணூற்றுநான்காம் ஸர்க்கம் காண்க. அங்கு மூலபலம் திரண்டவன்று இராமனுடைய அதிமாநுஷப் போர் வல்லமையைப் பேச வான்மீகிமுனிவரும் தடுமாறுகின்றார். "சிங்கம் பிங்கம் சரைர் தத்தம் ப்ரபக்நம் சஸ்த்ரபீடிதம். பலம் ராமேண தத்ருசுர் ந ராமம் சீக்ரகாரிணம்." என்று, இராமனால் பலவாறு தகர்ப்புண்ட அரக்கருசேனைகளைக் கண்டார்களேயொழிய பம்பரமாகச் சுழல்கின்ற இராமனை ஒருவரும் காண மாட்டிற்றிலர் என்கிறார்.

மேலே *தே து ராமஸஹஸ்ராணி ரணே பச்யந்தி ராக்ஷஸாঃ* என்று, ஆயிரக்கணக்கான ஸ்ரீராமமூர்த்திகளைக் கண்டார்களென்கிறார். உடனே *புநঃ பச்யந்தி காகுத்ஸ்தம் ஏகமேவ மஹாஹவே* என்று, அந்தப் போர்க்களத்தில் இராமனொருவனையே கண்டார்களென்கிறார்.

இராமனைக் காணவே யில்லையென்பது, ஆயிரக்கணக்கான ராமர்களைக் கண்டார்களென்பது, ஒரு ராமனையே கண்டார்களென்பது - ஆகவிப்படி ஒன்றோடொன்று சேராத வண்ணம் பேசும்படியாகவன்றோ பெருமாள் மிகவிசித்திரமான போர்த் தொழில் நிகழ்த்திற்று.

திருவாய்மொழியில் (8.6-3.) *ஒருவரிருவரோர் மூவரென நின்று, உருவுகரந்து உள்ளுந்தோறும் தித்திப்பான்* என்ற பாசுரத்திற்குப் பூருவாசாரியர்கள் பொருள் நிர்வஹித்திருக்கிற விதம் இதரபண்டிதர்களின் புத்திக்குச் சிறிதும் எட்டமாட்டாதது. ஒருவரிருவரோர் மூவரென நின்றதும் உருவுகரந்ததும் எப்போதென்று தெரிந்துகொள்ளமுடியாதபடி ஆழ்வார்பாசுரம் தோன்றியுள்ளது. இதற்குக் கீழ்ப்பாட்டு *செருக்கடுத்தன்று திகைத்த வரக்கரை, உருக்கெட வாளிபொழிந்த வொருவனே* என்று முடிந்திருக்

கிறது. மேற்பாட்டின் முன்னடிகட்குக் கீழ்ப்பாட்டின் பின்னடிகளோடு அந்வய மென்று கண்டு உரை செய்தருளியுள்ளார்கள்.

இங்குப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்திகள் இவை காண்மின்;— "ஒருவரிருவரோர் மூவரென நின்று உருவு கரந்த - உருக்கெடவாளி பொழிந்த வொருவன் என்று கீழோடே அந்விதமாகக் கடவது. மூலபலம் சாம்படி அருளுகிறவன்று முந்துற ஒருவனாய்த் தோற்றி, சாரிகையில் வேகம் மிக மிக இருவரும் மூவருமாய்த் தோற்றி,வேகம் மிக்கவாறே இந்த்ரிய ஸம்யோகத்துக்கு இடமில்லாதபடியாகையாலே ரூபக்ரஹணம் அரிதாகி உருக்கெட வாளி பொழிந்த வொருவனென்று அந்வயம். வ்யாபரித்த சடக்காலே ரூபம் கண்ணுக்குப் பிடிபடா தொழிகை" என்று. இதனால் இராமனது வீரம் வாசாமகோசரமென்றதாயிற்று.

இராமன் இவ்வளவு மஹாவீரனாயிருக்கும்போது இராவணனை ஒரு நொடிப் பொழுதில் கொன்றிருக்கலாமே; அங்ஙனம் கொல்லாது வெகு ப்ரயாஸங்கள் பட்டதாகத் தெரிகிறதே, அஃது என்? என்று சிலர் கேட்கக்கூடும். கேண்மின்; "பொல்லாவரக்கனைக் கிள்ளிக் களைந்தானை" என்று ஆண்டாளும் "சதுரமாமதிள் சூழிலங்கைக் கிறைவன் தலைபத்துதிரவோட்டி ஓர் வெங்கணையுய்த்தவன்" என்று திருப்பாணாழ்வாரு மருளிச்செய்தபடியே ராவண ஸம்ஹாரத்தைப் பெருமாள் அவலீலையாகவேதான் செய்தார். அதில் ஐயமொன்றுமில்லை.

'எப்படியாவது ராவணன் உடன்பட்டு வழிபட்டு உஜ்ஜீவிக்கவும் ஜீவிக்கவும் ப்ராப்தமாகுமோ?' என்கிற நசை பெருமாளுக்கிருந்தமையினாலேயே அவனை ஸம்ஹரிப்பதில் காலதாமதம் செய்யப்பட்டதென்கிற தத்துவம் உணரத்தக்கது. இராவணனைக்காட்டிலும் பன்மடங்குவலிமைமிக்கவனென்று ப்ரஸித்திபெற்றிருந்த வாலியை அநாயாஸமாக முடித்தவர் பெருமாள். [ஸுந்தரகாண்டம் ஸர்-51. ச்லோ. 11.] திருவடி இராவணனுக்கு ஹிதோபதேசம் செய்கையில் *த்வயா விஜ்ஞாதபூர்வச் ச வாலீ வாநரபுங்கவ:,ராமேண நிஹதஸ் ஸங்க்யே சரேணைகேந வாநர:* என்று, 'அப்பா ராவணா! வாலியென்கிற வாநரேச்வரரை ஏற்கெனவே நீ அறிவாயன்றோ, அவர் இராமனால் ஒரே யம்பினால் முடிக்கப்பட்டார்காண்' என்கிறார்.

அன்றியும், இராவணனைப் பலவாறு பங்கப்படுத்தியவன் கார்த்தவீரியார்ஜுனன்; அன்னவனைப் பரசுராமன் தனது கோடாலிப் படையினால் ஆயிரங்கைகளையும் வெட்டிக் கொன்றவன். அப் பரசுராமன் இராமபிரானிடம் பட்டபாடு தெரிந்ததே. இத்தகைய ஒப்புயர்வற்ற ஆற்றல்பெற்ற இராகவன் இராவணனைச் சங்கரிக்கச் சிரமப்படவேண்டுமோ? சிரமப்பட்டதாகக் கதையிலே கண்டால் ஸத்யஸங்கல்பனும் மஹாவீரனுமான இராமன் எதற்காக இப்படிச் சிரமப்பட்டானென்று ஆராயவேண்டுமன்றோ. ஆராய்ந்தவளவில், கீழே நாம் தெரிவித்தகாரணமே ஊர்ஜிதமாகும்.

சூர்ப்பணகை மூக்கறுப்புண்டு ஜனஸ்தானத்திலிருந்த தன் தமையனாகிய கரனிடஞ் சென்று செய்தியறிவித்துப் புரண்டழுது

அவனுக்குக் கோபத்தை யுண்டாக்க, அவன் பதினாலாயிரம் ஸேனாதிபதிகளையும் ஸேனைகளையும் இராமனோடு போர்புரியவனுப்ப, இராகவன் அவர்களத்தனை பேரையும் தாம் ஒருவராகவே கொன்று வென்றிட, பிறகு கரன்தானே நேரில் வந்தெதிர்க்க, இராமன் "அஸஹாய சூர!" என்று ரகுவீரகத்யத்தில் விளிக்கும்படியாக லக்ஷ்மணனையும் துணைகொள்ளாமல் ஏகாகியாய் அவன் தலையை யறுத்திட்டதும் ப்ரஸித்தம்.

"சதுர்தச ஸஹஸ்ராணி ரக்ஷஸாம் பீமகர்மணாம், ஏகச்ச ராமோ தர்மாத்மா கதம் யுத்தம் பவிஷ்யதி!" என்று வயிறுபிடித்த மஹரிஷிகளும் வியக்கும்படி அவலீலையாகவன்றோ நீறு செய்தது. அத்தகைய பேராற்றல் பெற்ற பெருவீரனுக்கு இராவணன் ஒரு பதார்த்தமோ? ஒரேயடியில் அவனைத் தொலைக்கமாட்டாமையில்லை. எவ்வகையினாலாவது அவன் அபிமுகனாக வருகிறானாவென்று பார்த்திருந்தாரத்தனை. இது பெருமாளுடைய வார்த்தையினாலேயே நன்கு விளங்கும்படியை நிரூபிப்போமிங்கு.

ஸ்ரீ ராமாயண யுத்தகாண்டத்தில் "மரணாந்தாநி வைராணி நிர்வ்ருத்தம் ந: ப்ரயோஜநம், க்ரியதாம் அஸ்ய ஸம்ஸ்காரோ மமாப்யேஷ யதா தவ." என்பது விபீஷணாழ்வானை நோக்கிப் பெருமாளருளிச்செய்ததொரு ச்லோகம். இராவணன் மாண்டபின்பு 'இந்த மஹாபாபிக்கு நான் உத்தரக்ரியை [ஈமக்கடன்] பண்ணமாட்டேன்' என்று ஒரு நிலை நின்ற விபீஷணாழ்வானை நோக்கிக் கூறினது இது. ஸாதாரணமாக வடமொழி பயின்ற அனைவரும் ஸ்ரீராமாயணத்தில் இறங்கி அர்த்தம் சொல்லப்புறப்படுவது வழக்கமாதலால், அப்படிப்பட்டவர்கள் இதற்குக் கூறும் பொருள் எங்ஙனே யென்னில், உலகத்தில் ஒருவனிடத்து ஒருவனுக்குப் பகை மரணம்வரைக்குமே யாதலால் இந்த ராவணன் மாண்டொழிந்த பின்பும் இவனிடத்து நாம் பகை வைப்பது எதுக்கு? இவனை வதை செய்வதும் பிராட்டியைக் கைக்கொள்வதுமே நமக்கு ப்ரயோஜனமாதலால் அது நிறைவேறப்பெற்றபின்பும் இவன்மீது நாம் பகை பாராட்டலாகுமோ? பகையை மறந்து இனி இவனுக்குச் செய்ய வேண்டியதைச் செய்—என்று பெருமாள் கூறுவதாகவே பலரும் பொருள் சொல்லுவர்.

இப்பொருள் பொருத்தமுடையதன்றென்றும் இது இராமபிரானுடைய திருவுள்ளத்திற்கு ஒவ்வாதென்றும் நம்பிள்ளை திருவுள்ளம்பற்றி இன்சுவைமிக வியாக்கியானம் செய்தருளியுள்ளார். (அதனையே இங்கு விவரிக்கிறோம்.) இதுவரை பெருமாள்மீது இராவணன் பகை பாராட்டியிருந்தானேயல்லாது இராவணன்மீது பெருமாள் சிறிதும் பகை பாராட்டியிருந்ததில்லை; விபீஷணாழ்வானைப் பரிக்ரஹிப்பதா விட்டிடுவதா? என்று விசாரம் நடந்து பரிக்ரஹிப்பதென்று நிச்சயித்து "ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட! தத்தமஸ்யாபயம் மயா" என்று ஸுக்ரீவனை ஏவி விபீஷணனை அழைத்துக்கொண்டுவர நியமித்தபோது "விபீஷணோ வா ஸுக்ரீவ! யதி வா ராவணஸ் ஸ்வயம்" என்று பெருமாள் கூறியுள்ளார்; வந்தவன் விபீஷணனு

யிருந்தாலும் ஸரி; இராவணனே மாறுவேஷம் பூண்டு வந்திருந்தாலும் ஸரி; விடாதே கொண்டுவா என்றார். அங்ஙனே சொன்ன பெருமாளுடைய திருவுள்ளத்திற்கு இணங்கவல்ல பொருளன்றோ பணிக்கவேணும்.

இது கேண்மின்; விபீஷணு! இவ்விராவணன் ஜீவித்திருக்கும் நாளிலேயே இவனுக்குச் சில நன்மைகள் நான் செய்யக் கருதியிருந்தேன்; அவை ஈடேறுதபடிக்கு இவன் பலவகையான த்வேஷ காரியங்களைச் செய்துவந்தான்; மஹரிஷிகளின் குடியிருப்பை யழித்தான், பிராட்டியைப் பிரித்தான். நம் உயிர்நிலையான ஸ்ரீஜடாயு மஹாராஜரை நலிந்தான்; இப்படிப்பட்ட வைரங்களை இவன் தான் சாகிறவரையில் செய்துதீர்த்தானுயினும் இனிச் செய்யப்போகிற தில்லையே—என்பதே "மரணாந்தாநி வைராணி" என்றதற்குப் பொருள். (வைராணி என்றது வைரகார்யாணி என்றபடி.)

இனி "நிர்வ்ருத்தம் ந: ப்ரயோஜனம்" என்றதுதான் இங்கு உயிரான வார்த்தை. இதன் பொருளைத்தான் செவ்வனே உணரப்பெற வேணும். "இவனை முடிக்கவேண்டியது நமக்கு ப்ரயோஜனம், அது நிறைவேறிவிட்டது" என்று பெருமாள் சொல்லுவதாகக் கொள்ளவே கூடாது; அப்பொருள் நெஞ்சாலும் நினைக்கத்தக்கதன்று; எடுத்துக்கழிக்கவுந்தகாத பொருள் அது. இதற்கு நம்பிள்ளையருளிச்செய்திருக்கிறஸ்ரீஸூக்தியை அப்படியேஎழுதுகிறோமிங்கு;

"[நிர்வ்ருத்தம் ந: ப்ரயோஜநம்] இவன் ஜீவித்திருக்கிற நாளிலே நாம் செய்யும் நன்மையை இவன் விலக்காதொழிய வேணுமென்று இத்தனையே பெறப்பார்த்திருந்தோம்; அது அந்நாளில் பெற்றிலோம்; நாம் தேடியிருந்தவது முந்துறமுன்னம் ஸித்திக்கப்பெற்றோமிறே" என்று.

இதைச் சிறிது விவரிப்போம். பகவான் சேதநர்களுக்கு நன்மைபுரியக் கடமைப்பட்டவன்; தான் செய்யநினைத்த நன்மைகளை நிர்ஹேதுகமாகத் தானே செய்துவிடலாமானாலும் "ஸர்வஜ்ஞோபி ஹி விச்வேசஸ் ஸதா காருணிகோபி ஸந், ஸம்ஸாரதந்த்ரவாஹித்வாத் ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே" என்று சாஸ்த்ரங்களிற் கூறியிருப்பதனுல் சேதநர்களிடமிருந்து சிறிது எதிர்பார்க்கிறுன் என்று ஏற்படுகிறது.

அப்படி பகவான் எதிர்பார்ப்பது எது, என்னில்; அதை நாம் ஒருவிதமாக நிஷ்கர்ஷித்துச் சொல்லமுடியாது. கர்மயோகம் ஜ்ஞானயோகம் பக்தியோகம் முதலானவற்றில் ஏதேனுமொன்றை எதிர்பார்க்கவும் கூடும்; "நாம் செய்யும் நன்மையை இவன் விலக்காதிருக்கவேணும்" என்று இவ்வளவே யெதிர்பார்ப்பதுமுண்டு. இதற்கு அப்ரதிஷேதம் என்று பெயர்.

ப்ரதிஷேதமாவது விலக்குகை; அப்ரதிஷேதமாவது விலக்காமை. பகவானுடைய கருணை நம்மேல் பெருகவொண்ணுதபடி நாம் தந்தலை வெட்டிகளாய்த் திரிவதுண்டே அதுதான் விலக்குகை; நம்முடைய விபரீத ப்ரவ்ருத்திகளைக் கண்டு பகவான் "ஐயோ! நம்முடைய கருணை புகுவதற்கும் இடம்தராமல் இப்படி தடை

செய்கிறனே பாவி" என்று கண்ணீர் பெருக்கி நிற்பன். சேதநன் அநுகூல ப்ரவ்ருத்தியொன்றும் செய்யாமற்போனாலும் விபரீத ப்ரவ்ருத்திகளைச் செய்யாமலாவதிருந்தால் அவனுடைய அருள் வெள்ளம் தடையின்றிப் பெருகியே தீரும்.

இதை ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்தில் கூரத்தாழ்வான் வெகு அற்புதமாக அருளிச்செய்கிறார்,(ச்லோ-61.)*யத்ப்ரஹ்மகல்பநியுதாநு பவேபி* என்கிற ச்லோகத்தில். இதில் "க்ஷாம்யஸ்யஹோ ததபி ஸந்தி விராம மாத்ராத்" என்பது உயிரான வார்த்தை. சேதநன் ஸுக்ருத விசேஷங்களைச் செய்யாமற்போனாலும் துஷ்க்ருதமாவ தொன்றும் செய்யாமலிருந்தால் அவ்வளவையே பற்றாசாகக் கொண்டு எம்பெருமான் அருள்புரிந்து தீருகிறான் என்பதுதான் இந்த கூரத்தாழ்வானது ஸ்ரீஸூக்தியில் காட்டப்பட்ட விஷயம்.

நாமாகவொரு ஸுக்ருதமும் செய்யாதவளவில் அதைப்பற்றிச் சிறிதும் கவலையில்லை. எம்பெருமானது கருணைப் பெருக்குக்குத் தடையாக அவனோடு எதிரம்புகோப்பதும், அவனாக அருள் செய்யத் திருவுள்ளம் பற்றினாலும் அதையும் தடைசெய்வதுபோல் நாம் விபரீத ப்ராதிகூலப்ரவ்ருத்திகளிலே கைவைப்பதுமாயிருந்தால் அது கண்டு எம்பெருமான் ஐயோவென்று சோகிக்கவே நேர்கின்றது.

இராவணன் பிராட்டியைக் கவர்ந்தது, ஜடாயுவை நலிந்தது, பரம பாகவதர்களைக் குடியிருக்கவொட்டாது தீங்கிழைத்தது முதலியன செய்தாலும் இவற்றைப் பொருள்படுத்தாமல் கருணைக் கடலான காகுத்தன் "இன்றுபோய் நாளைவா" என்பது முதலிய வார்த்தைகளினால் இரக்கக் குறி காட்டியிருந்தும் அந்தோ! அவன் பெருமாள் திருவுள்ளத்தை யறியப்பெற்றிலன். "கச்சாநுஜாநாமி" என்ற பெருமாள் நியமனத்தைப்பெற்று இல்லம் சென்றவவன் திரும்பவும் போர்புரிய வாராதிருந்தானாகில் பெருமாள் அவனையே இலங்கைக் கரசனாக்கி வைத்தருள்வனே. இப்பேற்றுக்கு அவகாசம் கொடுத்திலனே யவன். ஆகவே, அவன் திறத்துப் பெருமாள் செய்ய நினைத்த நன்மை அவனுடைய ப்ராதிகூல்யத்தினால் தடைபட்டுப்போயிற்று.

அவன்றானே இப்போது இறந்தொழிந்தனனாதலால் இனி ப்ராதிகூல்யமொன்றுஞ் செய்யகில்லானே. இதனையே பெருமாள் பரம ப்ரயோஜனமாக நினைத்து "நிர்வ்ருத்தம் ந: ப்ரயோஜநம்" என்றார். நாம் செய்யநினைக்கும் நன்மைக்கு ஒரு தடை செய்யாமையாகிற இந் நிலைமையில் நாம் இவனுக்குச் செய்யக்கூடிய நன்மை யாதெனில், இவனுடலைக் காக்கையும் கழுகும் தின்னவிடாமல் பெரியார்களுக்குச் செய்கிற க்ரமத்திலே ஸம்ஸ்காரம் செய்வதுதான்; அதை விபீஷணா! நீ செய்வாயாக; நீ செய்யாயாகில் இதோ நான் செய்தேதீருவேன்—என்று பெருமாளருளிச்செய்வதே * மரணாந்தாநி வைராணி யென்றெடுத்த விந்த ச்லோகத்தினால் தேறியது. இப்படிப்பட்ட பெருமாள் இராவணனை ஒரே அம்பினால் முடிக்காது மிகவும் தாமதித்தது தம்முடைய சௌர்ய

வீர்ய பராக்ரமங்களில் குறைபினாலன்று என்பது நன்கறியத் தக்கது.

விச்வாமித்ர முனிவர் தம் வேள்வியை முடிக்க இராமனை வேண்டித் தயரத மன்னவனிடம் வந்தபோது "அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம்" என்றார். இதில் 'ஸத்ய பராக்ரமம்' என்றதன் உட்கருத்தை உய்த்துணரவேணும். எதிரியின் சோர்வுபார்த்து அவனை வதைத்திடாமல் ஆந்தனையும் ஆபிமுக்யம் கொள்ளப்பார்த்து அது கைகூடாவிடில் கடைசியாகக் கொன்றொழிப்பதே ஸத்யபராக்ரமமுடைமையென்று முன்னோர் உரை செய்துள்ளார்களென்பதும் உணரத்தக்கது.

"க: வீர்யவாந்?" என்ற வால்மீகியின் வினவை மற்றொருபடியாகவும் விவரிக்கலாம். பகவானை ஷாட்குண்யபரிபூர்ணனென்னும்போது ஞானம் சக்தி பலம் ஐச்வர்யம் வீர்யம் தேஜஸ்ஸு என ஆறுவகைக் குணங்கள் கொள்ளப்படுகின்றன. இவற்றுள் வீர்யமாவது என்ன? என்பதை பட்டர் "ம்ருககாபிகந்த இவ யத் ஸகலார்த்தாந் நிஜஸந்நிதேரவிக்ருதோ விக்ருணோஷி, ப்ரியரங்க வீர்யமிதி தத் து வதந்தே" என்கிற சுலோகத்தினால் நிரூபித்தருளுகிறார்; கஸ்தூரீ பரிமளமானது தான் சிறிதும் விகாரமடையாமலிருந்து கொண்டே பிறருடைய மனங்களை எப்படி விகாரப்படுத்துகின்றதோ, அப்படியே பகவான் தான் விகாரப்படாமலே ஸகல பதார்த்தங்களையும் விகாரப்படுத்துவதுதான் வீர்யம் என்றாயிற்று.

இக்குணம் இராமனிடத்து நன்கு காணத்தக்கது. சுமந்திரன் இராமனைக் கங்கைக் கரையில் விட்டிட்டுத் தேருடன் திரும்பி வந்து தசரதனிடம் செய்தி சொல்லுகையில், இராமனது பிரிவினால் மரம் செடி கொடி முதலியனவும் வாடி வதங்குவதை, "விஷயே தே மஹாராஜ! ராமவ்யஸநகர்சிதா:, அபி வ்ருக்ஷா: பரிம்லாநாஸ் ஸபுஷ்பாங்குர கோரகா:; உபதப்தோதகா நத்ய: பல்வலாநி ஸராம்ஸி ச, பரிசுஷ்க பலாசாநி வநாநி உபவநாநி ச" என்கிறான். 'அரசனே! உனது நாட்டிலுள்ள மரங்களுங்கூட இராமனது பிரிவைப் பொறுக்க மாட்டாமல் இளைத்துப் புஷ்பங்களோடும் தளிர்களோடும் மொக்குகளோடும் வாடிவதங்கிக்கிடக்கின்றன. குளங்குட்டைகளில் தண்ணீர் அடியிடமுடியாதபடி கொதிக்கின்றது; காடுகளிலும் நந்தவனங்களிலும் மரங்களின் இலைகளெல்லாம் உலர்ந்திருக்கின்றன—என்று கூறினன்.

இதைக் கூரத்தாழ்வானும் அதிமாநுஷஸ்தவத்தில் *வம்சம் ரகோ:* என்கிற ச்லோகத்தில் *த்வத்ஸந்நிதிப்ரபவஸைத்யஜுஷோ யதா ஹி வ்ருக்ஷாச்ச தாந்திமலபந்த பவத்வியோகே* என்பதனாலருளிச் செய்தார். இப்படி, சேதநம் அசேதநம் என்கிற வாசியற ஸகல பதார்த்தங்களையும் விகாரப்படுத்துகையாகிற குணம் இராமனிடத்துள்ளதென்பதை மனனஞ்செய்து வால்மீகிமுனிவர் "க: வீர்யவாந்?" என்று வினவினர் என்பதும் மிகப்பொருந்தும்.

உண்மைச்சித்திரம்



டாக்டரும், நோயாளியும்

— பூச்சி சீனு.

வை. மு. கோ.

நாவல்கள் தற்போது
கைவசமுள்ளவை

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)

ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கிளேஸ்)

ரூ. 2-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்

ரூ. 2.
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வானம்
தெய்விக ஒளி
மனத்தாமரை
அமரத்யாகி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
இதய ஒலி
சிலாசாசனம்

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணாடி
ஜயபேரிகை

ரூ. 1-4
கோபால ரத்னம்
மகிழ்ச்சி உதயம்
புதுமைக்கோயில்

ரூ. 1-2
படகோட்டி
அபராதி

ரூ. 1.
வீரவஸந்தா
நளினசேகரன்
மாலதி
வத்ஸகுமார்
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்

அணா. 12.
பக்ஷமாலிகா
சுடர்விளக்கு

அணா. 6.
உளுத்த இதயம்

[பிறந்த கதை, வளர்ந்த கதை - இரண்டு பாகங்களும் சென்ற ஆண்டு இதழ்களில் வெளியாயின. மூன்றாம் பாகத்தை இப்போது தொடங்குகிறோம்.]



ஆத்ம சோதனை

★

கவியோகி

ஸ்ரீ சுத்தானந்த பாரதி

★

● சுயசரிதை ●

III. படித்த கதை

33. கஞ்சிப் படிப்பு

1835; மெக்காலே சட்டம் செய்தான்; உத்யோகத்திற்கு ஆங்கிலம் அவசியமானது. 1854-ல் ஸர் சார்லஸ் உட் ஆசிரியர்களுக்கு கிராண்டுதந்து மூலக்கல்வியை முன்னேற்றினான். 1857-ல் அன்னியமாயத்தை ஒழிக்க இந்தியா புரட்சி செய்தது. அடிமைச் சங்கிலியை இறுக்க அதிகாரவர்க்கம் சூழ்ச்சி செய்தது. சங்கிலியின் உலைக்களம் பள்ளிக்கூடமே. 1904-ல் சர்வகலாசாலைச் சட்டம் செய்து, கர்சான் பிரபு இங்கிலீஷ் ஆதிக்கத்தைப் பலப்படுத்தினான். படிப்பின் விலை பலமடங்கானது. படித்தாலும் வேலையில்லை. புத்தகப்பூச்சிகள் பட்டச்சிறகால் பறந்தன. பெற்றோர் படாதபாடு பட்டு, பங்கைவிற்றுக் கடன்வாங்கிப் படிக்கவைத்து ஏமாந்தனர். கஞ்சிப்படிப்பு பசியாற்றவில்லை. கலியாணப்படிப்பு வரதட்சிணை சுரந்தது. மாமனார் தயவில் சிலர் டாக்டர், வக்கீல், எஞ்சினீரிங்தேறி அதிகாரவர்க்க இரும்பாட்சிக்குக் கைகொடுத்தனர். ஒரு பி. ஏ. பட்டதாரி புலம்புகிறான்:

ஐயோநான் பிஏ அலங்கார மாப்பிள்ளை
கையிலே பையன்; கவலைக்குப் பஞ்சமில்லை.
ஆமை நடையினிலே ஆங்கிலத்தைக் கற்றறிந்தேன்
ஊமைக் கனவினிலே ஓடிவிளை யாடுகின்றேன்.
படியென்ற தாயும் பழிக்கின்றாள் என்னை
அடியேன் பவளும் அடகுநகை கேட்கின்றாள்.
தாயைத் தவிக்கவிட்டுத் தாசியினைப் பூசிக்கும்
பேயை எனக்குவமை பேசிடினும் போதாதே.
கான மயிலாடக் கண்டாடும் கோழியைப்போல்
நானழகு செய்துகொண்டு நாகரிகம் காட்டுகின்றேன்.

ஆவணக் காப்பக நூல
600 008
183157

பங்குகளை விற்றுப் படிக்கவைத்த நல்லப்பன்
எங்குழந்தை யின்செலவும் இன்னந் தருகின்றான்.

மாமி பழிக்க மனைவி இடித்துரைக்கக்
காமி தவம்புரிந்த கதையான தென்கதியே.

வற்றி வரண்டு வயிறு பிழைத்திடநான்
கற்ற கலையறிவும் காற்றிலே போனதையா!

கீதை குறளறியேன் கீட்ஸை உருப்போட்டேன்.
சீதைக்கு ராமன் சிற்றப்ப னென்றிடுவேன்.

கம்பன் அறியேன் கரிகாலன் பேரறியேன்
வம்புமிகு நாவல்களை வாரிப் புசித்திடுவேன்.

உப்பைக் கரைக்கும் உதவா ஸயன்ஸறிவேன்
கிப்பன் அறிவேன்; கிழக்கின் ஒளியறியேன்.

ஜாமெட்ரி யானறிவேன்; சந்தைக் கணக்கறியேன்.
பூமிநூற் சொல்வேன் புழக்கடையின் மண்ணறியேன்.

கூலிவேலை செய்யும் குப்பன் பிழைக்கின்றான்
காலர்டை என்பிழைப்பைக் கல்லிசெய்ய லானதுவே.

என்னையும் நம்பவில்லை; ஈசனையும் நம்பவில்லை
பொன்விளையும் வாத புரிக்குவழி சொல்வீரே!

இதுதான் அன்னியக் கல்வி கற்றவர் கதி. நான் சுமார் பதினாயிரம் மாணவரைப் பார்த்திருக்கிறேன். அவருள் நூறுபேர் ஏதோ சுகமாயிருக்கிறார்கள். சுமார் ஐம்பது ஆசிரியர்களைக் கண்டிருக்கிறேன். அவருள் ஐந்தாறுபேரே கடமையறிந்து போதித்தனர். மற்றவர் வயிற்றுக்கடனுக்கே பாலைகோட் மாட்டி வருகின்றனர். சனி ஞாயிறு ஓய்வு; தேர்திருநாள்பண்டிகை கோடை கிறிஸ்துமஸ், நவராத்திரி சிவராத்திரி பொங்கல் தீபாவளி என்று ஏராளமான ஓய்வு நாட்களுண்டு. பள்ளிக்கூடநாளில் ஐந்துமணிநேரமே படிப்பு. அதிலும் சிறிது எரிப்பு சிரிப்புகளிற் செல்லும். கணக்குப் பார்த்தால் ஆண்டிற்கு அறுநூறுமணிநேரம், 24 நாட்கள் படிப்பு. இதில் கற்ற சரித்திரம் ஸயன்ஸ் கணக்கு எல்லாம் பள்ளிக்கூடத்தைவிட்டு வாழ்க்கையில் புகுந்ததும் மறந்துபோம். புத்தகங்களின் பெயரே நினைவிருக்கும். ஆங்கிலம் பேச எழுத வரும். அதைக்கொண்டு குமாஸ்தா வேலை பார்க்கலாம். பி. ஏ. படித்தவர் வேலையில்லாது திண்டாடுவதுண்டு. மூளை பிசகுவதும் உண்டு. அப்பன் பாட்டனை முட்டாள்கள் என்பவரும் உண்டு. கண்ணீரும் புண்ணீருமான குடும்பங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்கப் படும் துயரம் கொடிது! வாழைக்காய்வடைப்பாட்டி பேரனைப் படிக்கவைக்கிறாள். வேலை கிடைக்கவில்லை. "சாம்பு! என்னோடே பஜ்ஜிபண்ணிக்கொண்டிரு"; என்கிறாள்; அரிசிக்கடை அண்ணா மகனை பி. ஏ. படிக்கவைக்கிறார். பையன் முதல்தரமாகத்தேர்கிறான்: ஆனால் வேலையில்லை. "சோமு! நீயும் அரிசியளந்து போடு" என்கிறார் மனமுடைந்த அப்பா. ஏழைக்குடும்பங்கள் படும்பாட்டைக் காணச்சகியாது.

34. தன்னுதவி

இந்தப்படிப்பு எங்களையும் பெற்றோரையும் கசக்கிப் பிழிந்தது. தந்தை மாதச்சம்பளத்தை நித்யகல்யாணிக்கு நிவேதித்து அம்மாளிடம் தருவார். அம்மாள் கட்டுச்செட்டாகக் குடித்தனம் செய்வாள். தந்தை அடிக்கடி தேவஸ்தானம் காரியமாக வெளியூர்களுக்குச் செல்வார். நடந்துசென்றும், கோயில் பிரசாதம் சாப்பிட்டும் பணத்தை மிச்சம்பண்ணி எங்களுக்கு ஈடுகட்டுவார். என் அண்ணாக்கள் மகா மேதாவிகள். வேங்கடராமன் கலாநிபுணன். அவனது ஆங்கில வசனமே கவிதைபோலிருக்கும்; சதா படிப்பான், சிந்திப்பான், பாடுவான், என்னை வேலைவாங்குவான், அது படி இதுபடி என்று புத்தகங்களைத் தருவான். அவனாலே தான் எனக்குப் பாட்டிலும் உயர்ந்த இலக்கியங்களிலும் சுவை ஏற்பட்டது. சின்னண்ணா ரங்கசாமி வகுப்பில் முதல்தரம்; நாடகப்புலி. அவராலேதான் எனக்கு நாடகத்தில் மனம் சென்றது; ஸயன்ஸில் கருத்தூன்றியது. இருவரும் படித்த நூல்களைத் திருப்பித் திருப்பிப் படித்தே நான் பல விஷயங்களை அறிந்தேன். இருவரும் ஆங்கிலத்திலேதான் பேசுவார்கள். என்னைத் திட்டுவதும் ஆங்கிலத்திலேதான். மூத்தவர் விவேகானந்தர் நூல்களையும் ராமதீர்த்தர் திருவாக்குகளையும் என்னைப் படிக்கச்சொல்லிக் கேட்பார். இருவரும் கல்லூரிப்பட்டம் பெற்றனர். மூத்தவர் வக்கீல் ஆனார்; ஆனால் வரும்படி மட்டம். சும்மா படித்துக்கொண்டிருந்தார். இளையவர் ரங்கராஜா ஆசிரியர் ஆனார். கொஞ்சகாலம் பள்ளிப் பரிசோதகராயுமிருந்தார். அவர் ஹரிகதா பாகவதராகவும், இவர் வக்கீலாகவும் மாறியிருந்தால் குபேரச்செல்வம் படைத்திருப்பார்கள். இவர்களுக்குச் சர்க்கார் உதவிச்சம்பளமும், மாமா மாமனார் உதவியும் கிடைத்தன. கல்லூரிப்படிப்பை மாமாவீட்டில் சாப்பிட்டுக்கொண்டு முடித்தனர்.

எனக்குத் தன்னுதவியும் கடவுள் துணையுமே உண்டு. பெற்றோர் படும்பாட்டைக் கண்ணாரக்கண்டு, என் உள்ளத்தில் இரக்கம் பெருகியது. நான் தினம் காலை குளித்துவந்து, தாயார் பாதத்தில் மலர்தூவி பிரதக்ஷணம் செய்து நமஸ்கரிப்பதை ஒரு சாதனமாகச் செய்தேன். தகப்பனாரை வணங்கியே எழுந்திருப்பது. இந்த உபாசனை எனக்கு மனச்சாந்தியளித்தது. இவர்கள் சொற்ப வரும்படியில் பெரிய குடும்பத்தை எப்படித்தான் தாங்குகிறார்களோ என்று வியப்பேன். இயன்ற வழியிலெல்லாம் நானும் எனது செலவுகளுக்காகப் பொருளீட்டியே படித்தேன். காளையார்கோயில் திருநாள் பத்துநாளும் பஜனைகோஷ்டியில் கலந்துகொள்வேன். சமாராதனைகளில் தண்ணீர் கேட்பேன். சங்கீத வித்வான்களை மகிழ்விப்பேன், என் கவிதைகளை இனிய ராகங்களில் பாடுவேன், ஊரில் மாணவர்களுக்குப் பாடம் சொல்லித்தருவேன், புத்தகங்களை பைண்டுசெய்து தருவேன், சிநேகிதர் வீடுகளில் படிப்பேன், சாப்பிடுவேன்—இந்தமாதிரி முயற்சிகளால் என்னால் இயன்றதைச்செய்து பெற்றோரின் பாரத்தைக் குறைப்பேன்.

அவர்கள் எனக்குச் செலவிட்ட ஒவ்வொருகாசையும் கணக்குவைத்திருந்தேன். தகப்பனுரிடம் ஆயிரம் ரூபா தந்துதான் வீட்டைத் துறந்தேன். என் பெற்றோரின் தெய்வநம்பிக்கையும் சன்மார்க்க வாழ்வும் என் வாழ்விற்கு வழித்துணையாக உதவின. இன்றேல் மற்ற வாலிபர்போல் என்வாழ்வும் ஆங்கிலப்படிப்பின் தீமைகளைச் சுமந்து தடுமாறியிருக்கும்.

35. பெற்றோர் தியாகம்

நம்பு கடவுளை என்று தந்தை அடிக்கடி சொல்லுவார். தமது வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் உதாரணமாகக் காட்டுவார். ஒருநாள் அவர் ஆயிரம் ரூபா மடியில் கட்டிக்கொண்டு மதுரைக்குச் சென்றார். செம்பனூரில் திருடர் மறித்துக்கொண்டனர். தந்தை தமது மடிசஞ்சியைக்காட்டி "இதிலிருப்பதை எடுத்துச் செல்லுங்கள்" என்று பஞ்சாட்சரியை ஜபித்துக்கொண்டிருந்தார். திருடர் மனம் சட்டென்று மாறியது. மடிசஞ்சியில் விபூதிப்பையிருந்தது. "ஐயாகையால் விபூதி தாங்க" என்றனர். தந்தை "உங்களுக்கெல்லாம் சிவனருளால் நல்லபுத்தி வரட்டும்; மானமாகத் தொழில் செய்து பிழையுங்கள்" என்று நீறு தந்தார். திருடர் "அதுதான் புத்தி" என்று சென்றனர்.

ஒருசமயம் நானும் தந்தையுடன் இளையாற்றங்குடி சென்றேன். வழியில் சேவல்பட்டி மைதானத்தில் தந்தை மயக்கம் போட்டு விழுந்தார். வானம் இருண்டது. ஆள் அரவமில்லை. நான் பரபரப்புடன் முறையிட்டேன். எதிர்பாராமல் ஜல் ஜல்என்று காளைவண்டிவந்தது. வண்டியிலிருந்தவர் எங்கள் நிலைமையைக் கேட்டு, 'நமது ஐயா' என்று இரக்கங்கொண்டு தந்தையை ஏற்றிக் கொண்டார். மூவரும் நித்யகல்யாணியம்மன் கோயிலையடைந்தோம். தந்தைக்கும் மயக்கம் தெளிந்தது. அன்று தந்தை சண்டி சப்தசதி பாடி அம்பிகையைத் தொழுது, "அவள் கிருபையால் நாம் பிழைத்தோம்; நீயும் அம்பிகையைப் பாடு" என்றார். நான் பாடிய பாடல்களில் இவை நினைவிருக்கிறது:

நித்திய கல்யாணி நெஞ்சில் இருக்கையிலே
பத்தருக் கேது பயமிங்கே—சத்தியமே
எப்போதும் வெல்லும்; இறைவி யருளொன்றே
தப்பாது நன்மை தரும்.

ஒன்றும் கவலையில உள்ளமே நன்றாக
நின்று நிலைத்து நினைந்திடுவாய்—என்றுமே
நேயரைக் காத்தருளும் நித்திய கல்யாணி
தாயைப் புகுவாய் சரண்.

மூலக் கனலே முதிய வுலகாளும்
காலக் கனலே கதிரம்மை—நீலகண்டன்
பாகத் தமர்ந்த பரம சிவக்கனலே
யோகத் தமர்வாயென் னுள்.

இந்த வெண்பாவை அப்பா பாராட்டி நண்பருக்குப் படித்துக் காட்டினார்.

இருவரும் மடப்பள்ளிக்குப் போனோம். தந்தை பட்டைச்சாதம் வாங்கினார். அதைக் குளத்தங்கரையில் வைத்துச் சாப்பிட்டோம். அப்போது "இவ்வளவு கஷ்டப்பட்டு எங்களைப் படிக்கவைத்த தந்தைக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறோம்" என்று சொன்னேன். அவர் "நானா படிக்கவைக்கிறேன்? எனக்கென்ன செய உண்டு? உங்களைக் கவனிப்பது சர்வேசுவரன். மேலே ஆகாயத்தைப் பார். அது ஒளியும் மழையும் தாராவிட்டால், காற்று வீசாவிட்டால், நாம் பிழைக்கமுடியுமா? மண்ணுக்கு வானம்போல வாழ்வுக்குத் திருவருள்"...எனக்கு ஒரு பாட்டு உதித்தது:

மண்ணுக்கு வான்போல் வளருயிர்க்கு மாருதம்போல்
கண்ணுக் கொளிபோலக் காப்பாற்றும்—எண்ணில்லா
அண்டங்க ளைப்படைத்தான் ஆண்டான் அருளிறைவன்
உண்டின்ப முண்டிங் குணர்.

அந்நாள் சேவல்பட்டியில் உபதேசம் நடந்தது. ஏராளமான செட்டிப்பிள்ளைகள் கூடினார்கள். பதினாயிரக்கணக்கில் செலவு; லட்ச போஜனம் ஊர்வலம் பாட்டுக்கச்சேரி எல்லாம் நடந்தன. இந்தப் பணத்தையெல்லாம் சேர்த்து ஏழைமாணவர்களுக்குத் தந்தால் சுமார் ஆயிரம்பேர் கல்விபெறலாமே என்று நான் ஒரு செட்டியாரிடம் பேசிக்கொண்டிருந்தேன். சட்டென்று ஒரு நெடிய கனவான் "என்ன சொன்னீர்" என்று என் பக்கம் வந்தார். அவர் கையில் மேரி கார்லேல் காவல் இருந்தது. அவர் ஆங்கிலத்தில் "நீர் சொல்வது மெத்தச்சரி. எங்கள் பணமெல்லாம் கல்வியில் செலவிட்டால், நாடு முன்னேறும்." என்றார். அவரே ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரின் தமயனார் ராவ்பகதூர் ராமசாமி செட்டியார். சிதம்பரத்தில் அரிய அருட்பணியும் கலைப்பணியும் செய்தவர். அவர் தம்பி அண்ணாமலை செட்டியாரையும் உபதேசத்தில் பார்த்தேன்; இவர் திருக்குறள் படித்துக்கொண்டிருந்தார். இவர்களிடம் என் கல்விக்கு உதவிகேட்கத் தோன்றவில்லை. அப்பாவும் "படியளக்க ஒருவன் உண்டு....நமது தகுதிக்கேற்றதை அவன் தருவான்" என்றார். தேவஸ்தான விஷயமாகவும் கோர்ட்டு விஷயமாகவும் வேண்டிய எழுத்துவேலைகளை நான் செய்தேன். அதற்கு ஏற்பட்ட எழுத்துக்கூலியை அப்பா என் படிப்புக்கென்று ஒதுக்கிவைத்தார். தொழுதுண்டு வாழாது உழைத்துப்பிழைக்கும் நேர்மையைத் தந்தை எனக்குக் கற்பித்தார். தேவஸ்தான உத்யோகஸ்தர் சிவகங்கைக்கு வந்தால் எங்கள் வீட்டிலேதான் தங்கி உணவும் கொள்வார்கள். நோயானால் அது திருமட்டும் எங்கள் வீட்டிலேயே இருப்பார்கள். ஆனால், நாங்கள் இளையாற்றங்குடியில் இருந்தபோது ஒருநாளாவது எங்களைச் சாப்பிட அழைத்ததில்லை. தகப்பனார் "மேகம்போல் உதவி செய்வோம்" என்பார்.

எனது அன்னை தன்னையே குடும்பத்திற்குப் பலிதானமாக்கினாள். பெண்ணின் பெருமையெல்லாம் அவளிடம் காணலாம்.

மூன்றுவேளை சமயல், நெல்குத்துவது, மிளகாய்ப்பொடி யிடிப்பது முதல் தண்ணீர் சுமப்பது வரையில் அவளே. கணவன் தந்ததைக் கொண்டு அவள் சாமர்த்தியமாகக் குடும்பம் நடத்தி, விருந்தையும் உபசரித்தாள். தேர் திருநாள் பண்டிகை, பொங்கல், தீபாவளி, கலியாணம் கார்த்திகை எல்லாம் உறவினர் மெச்சும்படி அவள் நிறைவேற்றினுள். என்னை அவள் பூரிதட்சிணைகளுக்குப் போக விடமாட்டாள். கலியாண வீடுகளுக்குச் சென்று சாப்பிடவும் சொல்லமாட்டாள். அவளும் பரான்னம் உண்ணுள். பெற்றோர் படும் கஷ்டத்தைப்பார்த்து, நானே அவர்களுக்குப் பாரமில்லாமல் பிழைக்க வழிதேடினேன். ஒருதரம் எனக்குக் காப்புப்போட்டு அழகுசெய்தனர் பெற்றோர். ஒருநாள் அரிசிவாங்கப் பணம் தட்டியது. நான் அந்தக் காப்பைக் கழற்றித் தட்டான் கடையில் கொண்டுபோய் விற்றுப் பணம் தந்தேன். "தெய்வம்போல் எங்களை அன்புடன் பேணும் உங்கள் ஆசீர்வாதமே எனக்கு நகைநட்டாகும்" என்றேன். ஒருநாள் சுந்தரம்பிள்ளை கடையில் சாமான் வாங்கினேன். அவன் சில்லறை தரும்போது முக்கால் அணு அதிகமாகத் தந்துவிட்டான். அம்மாளிடம் "இதோ முக்காலணு லாபம்" என்று விபரம் சொன்னேன். அம்மாள் "பாபம், தொழிலாளியை ஏமாற்றக்கூடாது"......என்று அந்த முக்காலணுவைத் தானே சென்று சுந்தரம்பிள்ளையிடம் தந்தாள். தனக்குச் சொந்தமில்லாத எதிலும் ஆசை வைக்கக்கூடாது என்பதை அம்மாள் கற்பித்தாள். ஒருநாள் எனது வர்ணப்பெட்டியை யாரோ திருடிக்கொண்டார். டிராயிங்மாஸ்டர் "கொண்டா முக்கால் ரூபா புதிய வர்ணப் பெட்டிக்கு"...என்று விரட்டிவிட்டார். நான் பெற்றோரைத் தொந்தரவுசெய்யவில்லை. வைத்தியலிங்கத்திற்கு ஆறுபுத்தகங்கள் பைண்டு செய்துதந்து, பணம்வாங்கி டிராயிங்மாஸ்டரைத் திருப்தி செய்தேன். ஒருதரம்எனக்குப் புத்தகம்வாங்க அம்மாள் செம்பை அடகு வைத்துப் பணம்தந்தாள். என் கண்ணில் கண்ணீர் வந்துவிட்டது.

ஒருதரம் என் புத்தகங்களை வகுப்பில் யாரோ திருடிக்கொண்டார். நான் தந்தையைப் புதுப்புத்தகம் கேட்க மனம் வருந்தினேன். எனது நண்பர் புத்தகங்களைப் பார்த்து எழுதியெழுதிப் பாடம் பண்ணிப் பரீட்சை தேறினேன்.

36. மூத்தவர்

நான் என்னுல் இயன்றமட்டும் குடும்பத்திற்கு உழைப்பேன். பெரியண்ணு குடும்பக்கவலையே இல்லாதவர். அவர் படிப்பார், பாடுவார், சிரிக்கச்சிரிக்கப் பேசுவார். பொதுநலம் தேசசேவை என்று கிளம்பிவிடுவார். என்னையும் கூட அழைத்துச்செல்வார். தியாகராஜர், கோபாலகிருஷ்ண பாரதியார், கவிகுஞ்சரி பாரதியார், சுப்பராமையர், க்ஷேத்ரி, சாமாசாஸ்திரிகள், தீட்சிதர், வேமனு முதலியோர் வாக்குகளை அவர் பாடக் கேட்டுக்கேட்டு, நான் ரசிப்பதுண்டு. கம்பர், வில்லிபுத்தூரார், சேக்கிழார், புகழேந்தி, கச்சியப்பர், ஷேக்ஸ்பியர், ஷெல்லி, வேட்ஸ் ஒர்த், பைரன், கீட்ஸ் கவிதைகளை அவர் பலராகங்களில் படிப்பார். அவருடன் நான் பிரம்ம

ஞானசபைக்குச்சென்று படிப்பதுண்டு. என்னை அவர் "பங்காரு" என்றழைப்பார்.நான் அவருடன் அதிகம்பேசக் கூச்சம்."பங்காரு! கலியாணம் பண்ணிக்காதே" என்று அடிக்கடி உபதேசிப்பார். உள்ளூர் பொதுக்கூட்டங்களுக்கெல்லாம் என்னை அழைத்துச்சென்று, "பங்காரு!தேசசேவைசெய்;கலியாணத்தில் மாட்டிக்கொள்ளாதே" என்பார். எனது வைராக்யத்தை அவர் சொல் தீட்டிவிடும்.

ஆனால் அவரே கலியாண நுகத்தடியில் மாட்டிக்கொண்டு வெகுபாடுபட்டார். வானம்பாடிபோல் சுதந்தரமான அவர் வாழ்க்கை,வறுமைசுமந்து வருந்தியது. வக்கீல்தொழிலில் சிலருக்கே வரும்படி, சிலருக்கு வம்படி, சிலருக்குத் தம்படிக்கும் இழுபறிதான்! ஆனால் எப்படியோ காலட்சேபம் நடக்கும்; கடன் வராது; அவரும் கவலைப்படமாட்டார். அண்ணுவுக்குச் சோழவந்தான் வேங்கடராமையர் பெண் அமைந்தது. மாமனார் தக்க செல்வர். அந்தக் கலியாணத்தில் இவர் பண்ணின விகடக்கூத்துகள் எனக்கே வியப்பாயிருந்தன. வாத்தியார் ஒருமந்திரம் சொல்வார். இவர் தமிழில் ஒன்று முணுமுணுப்பார்.பந்தலில் எல்லாரும் சிரிக்கும்படி பேசுவார். நான் சிரித்தால்மட்டும் "பங்காரு! கலியாணம் பண்ணிக்காதே" என்பார். இந்தப் பல்லவிக்கு அனுபல்லவிபோல் ஒரு சம்பவம் நடந்தது.

ஒருநாள் சோழவந்தான் ஆற்றிலிருந்து தெரியும் நாகமலைக்குப் புறப்பட்டேன். செல்லச்செல்ல மலை வெகுதூரத்தில் இருந்தது. கால்தளர்ந்து ஒரு சோலையில் அமர்ந்து, கையில் கொணர்ந்த இட்டலியைச் சாப்பிட்டேன். அப்போது ஒரு பண்டாரம் வந்தார். நான் அவருக்கு இட்டலி தந்தேன். பிறகு பேசினோம். அவர் "நாகமலையிலிருந்தே வருகிறேன். அது இன்னும் வெகு தொலை இருக்கிறது. திரும்பிப்போ" என்றார். "மலை சிவலிங்கம்போல் இருக்கிறது; அதைக்கண்டு திரும்பலாம்" என்றேன்."தம்பி! தூரப் பார்வைக்கு மலை சலவைபோல் வழுவழுப்பாகத்தோன்றுகிறது. கிட்டப்போனால் காடுமுரடு, காடு; அதில் நரி பாம்புகள் அதிகம். எதைப்போலென்றால், கலியாணபந்தம்போல்; கலியாணம் "பார்வைக்கு இன்பம்; கட்டிக்கொண்டால் துன்பம்" என்றார். என் அண்ணுவும் இப்படியே சொல்லிக் கலியாணம் செய்துகொண்டார் என்றேன். அந்தப் பண்டாரம் "வா தம்பி ஊருக்கு" என்று அழைத்துச்செல்லும் வழியில் சித்தர் பாடல்களைப் பாடினார்.

கட்டாத காளையைக் கட்டவேணும்—ஆசை
வெட்டவேணும் வாசி கட்டவேணும்
எட்டாத கொம்பை வளைக்கவேணும்—காயம்
என்றைக் கிருக்குமோ வாலைப்பெண்ணே!

என்ற வரிகள் என் உள்ளத்திற் பதிந்தன.

அண்ணு, மாமனார் செலவில் கல்லூரிப்படிப்பை முடித்து உள்ளூர் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயரானார்; அந்த வேலை அவருக்குப்பிடித்தும் இருந்தது. ஆனால் அப்பாவுக்காக அவர் வக்கீலுக்குப் படித்தார். தாமே படித்த பரீட்சையில் தேறிக் கடை

ஷிரித்தார். வந்த வரும்படியைக்கொண்டு அண்ணு காங்கரஸிற்குச் போவார், பொதுநலம்புரிவார். 1916-ல் லக்னே காங்கரஸிற்குப் சென்றுவந்து அவர் நடத்திய திண்ணைப்பிரசங்கங்கள் எனது தேச வெறியைத் தூண்டிவிட்டன.

37. அரங்கண்ணு

இளையண்ணு ரங்கசாமியை நண்பர் ரங்கராஜ் என்றழைப்பர். எங்கள் வீட்டில் குடும்பப் பொறுப்புள்ளவர் அவரே. இவர் மெட்றிகுலேஷனில் முதல் பரிசுபெற்ற ஷேக்ஸ்பியர் பெரிய ரேஸட் லட்ஜ் பதிப்பை நான் தினம் பாராயணம் பண்ணிவந்தேன். இவர் கல்லூரியில் இயற்கை விஞ்ஞானம் படித்தார். இவர் படித்த ஸயன்ஸ் நூல்களையும் குறிப்புகளையும் நான் படித்துப் பயன் பெற்றேன். ஆங்கிலம் ஆரியம் தமிழ் ஆகிய மும்மொழியிலும் பெரும்புலமை படைத்தவர் இவர். நல்ல தெய்வபக்தர், ஒழுக்கம் தவருத உத்தமர், அன்புமயம், காரியத்திறமை மிக்கவர். ஊரில் இவருக்கு நல்ல மதிப்புண்டு. மாணவர் இவரை உயிர்போல நேசிப் பர். நான் பார்த்த சிறந்த ஆசிரியருள் இவர் ஒருவர். இவர் பாடம்சொல்லும்போது பையன்கள் அதே கவனமாயிருப்பார்கள். இவரிடமும் நான் பேசக்கூச்சம், ஆனுல் தள்ளியிருந்தே இவரிடம் நான் கற்றவை மிகப்பல. இவர் இன்னமும் குடும்பஞானியாக, சன்மார்க்கச் செல்வராக வாழ்கிருர்.

என் அக்கா ரங்கநாயகியின் வாழ்க்கை எனக்கு உலகம் இன்னது, குடும்பம் இன்னது என்பதை விளக்கியது. பெண்ணுலகைப் படம்பிடித்துக் காட்டியது. அழகும் குணமும் ஆற்றலும் மிக்க ரங்கத்திற்கு கலியாணம் ஆகவேண்டுமே என்று பெற்ருேர் கவலைப்பட்டபோது, திடீரென்று ஒருநாள் சாதுவான கோபுசாமி வந்து வாய்த்தார். மாப்பிள்ளைச்செருக்கும் முறுக்கும் இல்லை. அவர் எங்கள் நிலையறிந்து நடப்பார்; என்னிடம் அவருக்குப் பிரியம். ஓய்வு நாட்களில் தேவகோட்டைக்குச் சென்று அவருடனிருப்பேன். அவருக்கு ஆங்கிலத்தில் செய்யவேண்டிய உதவிகளைச் செய்வேன். வரும்போது அப்படியும் இப்படியும் சம்பாதித்து என் பள்ளிச்செலவுகளுக்குப் பணம் சேர்த்துவருவேன். இவர் மனை சின்னச்செலம்பணியில் காட்டோரத்தில்; பாம்புகள் வரும்; நரிகள் ஊளையிடும்; கணவன் பத்துமணிவரையில் முத்து. கரு. அரு வீட்டில் அலுவல் பார்த்து வருவார். ரங்கம் தைரியமாகக் குடித்தனம் செய்தாள். அவள் குழந்தைகள் நல்ல நிலைமையில் இருக்கிருர்கள். சிறுவயதில் அவளுக்கு நான் ஏராளமான கும்மிகளும் கீர்த்தனங்களும் கலியாணப்பாடல்களும் எழுதிக்கொடுத்தேன். அவள் பாடும்போது கூடப்பாடுவதுண்டு. இந்தமாதிரி மேதாவிக் குடும்பத்தில் வசித்ததே எனக்கு அரிய கல்விப்பயனைத் தந்தது. நான் பள்ளிப்பாடங்களைப் பள்ளிக்கூடத்துடன் கட்டிவைத்துவிடுவேன். வீட்டிலும் வெளியிலும் புதிய புதிய அறிவையும் அனுபவத்தையும் தேடித்திரிவேன். பள்ளிப் பாடத்தைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுகிறேன்: அப்படியே ஆசிரியர் வர்ணனையும் சேர்க்கிறேன்.

வீராங்கனை

வை. மு. கோ. 88-வது நாவல்

"உலகத்தின் விசித்திரமே விசித்திரம். சகலமும் அந்த உலகளந்த மாயாவி யிருக்கிறனே அவன் செய்யும் கூத்துதான். அதோ பாரு. வள்ளியின் அரசமர ப்ரதட்சிணக் காட்சியை. ஈரப் புடவையுடன், குங்குமம் பளிச்சென்று டால்வீசும் ப்ரகாசத்துடன் கண்களை மூடியும்திறந்தும் வாய் ஏதோ முணுமுணுத்து பஜனை செய்தவாறு ப்ரதட்சிணம் தடபுடல்படுகிறது. உம்!

அன்றுடும் தான் குடிக்கக் கஞ்சிக்கும் உடுக்கக் கந்தைக்கும் வழி இல்லை என்றாலும், பிள்ளைவரம் கேட்கும் ஆசையில் குறைவே இல்லை. என்ன ஆசையோ! எந்த புதையல் பாழாகிவிடுகிறதோ! அதை ஆள ஒரு அருமை மகனை வேண்டுகிறாள். என்ன வேடிக்கை பாரு!" என்று குளத்தில் குளிக்கும் ஒரு பெண் மற்றொரு வயதான பெரியம்மாளிடம் சொன்னாள்.

அவள் சொல்வதையே ஆமோதித்துத் தாளம் போட்டுப் பரிகசிக்கும் தோரணையில் "போதுமே லட்சணம்! வள்ளிக்கு வயது ஆகஆகத்தான் ஆசையும் அதிகமாகிறது. வள்ளி சம்சாரத்திற்கு வந்து பத்து வருஷமாகப்போகிறது. இந்த மலடிக்குப் புத்திரபாக்யமாம். ஆசை வெட்கமறியாது என்கிற பழமொழி இம்மாதிரி மனிதர்களைப் பார்த்துத்தானே பிறந்திருக்கும். அரச மரத்தை தினம் சுற்றிவிட்டு அடிவயிற்றைத் தொட்டுப்பார்த்துக் கொள்ளப் பழகுகிறாள்" என்றாள் ஒருத்தி.

மற்றொருத்தி "அரசு ப்ரதட்சணம் மட்டுமா செய்வதாக நினைத்தாய்? வயலில் அன்றுடும் உழைக்கும் ஏழைக் குடியானவர்களாய் அந்த தம்பதிகள் தம்மை நினைக்கவில்லை. நாகப்ரதிஷ்டையாம்; சஷ்டி உபவாசமாம்; சங்குப்பால் குடிப்பதாம்;. அடேயப்பா! எத்தனை பிள்ளைவரம் கேட்கும் வழிகள் உண்டோ அத்தனையும் செய்கிறார்கள்! தன் வயிறு கஞ்சிக்கழும்போது பிள்ளைவரம் கேட்க வெட்கமாகத்தானிருக்காதோ!..."

வேறொருத்தி "உலகத்தின் போக்கு இருக்கிறது பாரு, நாளுக்கு நாள்சொல்லமுடியவேயில்லை. வள்ளியின் வீட்டுக்கு எதிர் வீட்டு எல்லாத்தாளின் லீலையைப் பாரு. எட்டுக்குட்டியும் பொட்டை நாயுமாகத் தவிக்கும் வேதனையில் இரண்டுமாதக் கர்ப்பம் ஆக வேண்டியதுதான், உடனே ஆஸ்பத்ரிக்குப் போய் அதை அழித்து விட்டு உடம்பைப் பாழாக்கிக்கொண்டுவருகிறாள். அந்த தண்டனையை பகவான் வள்ளிக்குக் கொடுக்கக்கூடாதோ? குழந்தையாவது குட்டியாவது! ஹாய்யா தன்பாட்டில் திரியாமல் இதென்ன ஆசையோ பாவம்! இத்தனை செய்தும் பலனைக் காணவில்லை. இனிமேலாவது பிறக்கிறதாவது?"...

என்று வம்பர்மாதர் விநோத சபையின் அரங்கமாகிய குளக்கரையில் குளித்தவாறு பேசிக்கொண்டிருப்பதை முதலில் சொல்லிய வயதான மாது கேட்டு மனக்கலக்கத்துடன் "ஏண்டியம்மா? பரிசுத்தமான இந்த குளத்தில் உங்கள் சரீர அழுக்கு, உடையழுக்கு, பாத்திரங்களின் அழுக்கு முதலியவைகளைப் போக்கிக் கொள்ள வந்த இடத்தில் உங்கள் உள்ளத்தில் மூட்டை மூட்டையாக அழுக்கைச் சம்பாதித்துக்கொள்ளவா வருகிறீர்கள்? அப்போதுமுதல் நானும் பார்க்கிறேன். பாவம்! இன்று உங்கள் மகா சபைக்கு விஷயமாக வள்ளியம்மாள் அகப்பட்டுக்கொண்டாளாக்கும்; வீண் வம்பும் பேச்சும் எதற்கு? இங்குள்ள உங்களில் யாருக்காவது குழந்தைகள் காலாகாலத்தில் பிறக்காமல் வள்ளி

யைப்போல் இருந்தால், அப்போதுதான் அந்த அருமை உங்களுக்குத்தெரியும். பசி, தாகம் முதலிய சகலமான உணர்ச்சிகளும் ஏழைகளுக்கும் ஆடுமாடுகளுக்கும் செல்வச்சீமான்களுக்கும் ஏன் அரசன்முதல் சகலருக்கும் ஒன்ருகவே இருப்பதுபோல் இந்தக் குழந்தை ஆசையும் ஒன்ருக இல்லாது மாறிவிடுமா? வள்ளியின் வாழ்க்கையில் ஏழ்மை நிறைந்திருக்கலாம். உள்ளத்திற்கு ஏழ்மை நிலைமை கிடையாது. அது எல்லோருக்கும் சமமான ஆசையுடன் தான் ப்ரகாசிக்கும் என்பதை நீங்களறியவேண்டாமா? இதென்ன வம்புப் பேச்சுகள்?" என்று சற்று நடுத்தரமான அதிகாரத்துடனேயே கூறியவாறு தன் காரியத்தை முடித்துக்கொண்டு கரை ஏறும்போது கொல்லென்று எல்லோரும் சிரித்தார்கள்.

கிழவி அதை ஒரு தரம் திரும்பிப்பார்த்தபிறகு லக்ஷ்யம்செய்யாமல் அரசமரத்தடிக்குவந்து தன் கையிலிருந்த ஜலத்தை அரசமரத்திற்குக் கொட்டித் தானும் ப்ரதட்சிண நமஸ்காரத்தைச் செய்து பின், "வள்ளீ! இந்த அரசமரமும் இதனடியிலுள்ள விக்னேச்வரரும் உன் குறைதீர ஒரு நல்ல குழந்தையைக் கொடுத்து ரட்சிக்கவேண்டும். இன்று உன் முகத்திலுள்ள அபூர்வமான களையைப்பார்த்தால், நீ செய்யும் ப்ரார்த்தனைக்குப் பகவான் பலனைக் கொடுத்துவிட்டதாகவே தோன்ருகிறது. ஏழையானுலும் பணக்காரனுனுலும் மக்கட்பேற்றை விரும்பாதவர் உலகத்தில் இருக்கவேமாட்டார்கள். உன் ப்ரார்த்தனைக்குப் பலன் கட்டாயம் கிடைக்கும்" என்று கூறித் தன் கையிலிருந்த குங்குமத்தைத் தானும் இட்டுக்கொண்டு வள்ளிக்கும் கொடுத்து இட்டுக்கொள்ளச் சொல்லி, மேலும் "வள்ளீ! இது என் தம்பி ராமேச்வரத்திலிருந்து கொண்டுவந்த ப்ரஸாதம். இந்த தேவியின் அருள் உனக்குப் பரிபூரணமாக இருக்கட்டும்" என்று தானே சகலமும் சொல்லிவிட்டுச் சென்ருள்.

வள்ளியோ, 108 ப்ரதட்சிணமும் மவுனமாகச்செய்தால் மிகச் சிறந்ததாகும், பலனும் ப்ரமாதமாய் உண்டாகும் என்று யாரோ சொல்லியிருந்ததால் பதில்பேசாமல் மவுனத்துடன் தன் காரியத்தைச்செய்துவந்தாள். தன்னுடைய ப்ரதட்சிணத்திலுள்ள நம்பிக்கையும் பக்தியும் கிழவி குங்குமம்கொடுத்து ஆசீர்வதித்ததில் பின்னும் அதிகமாகியது.

குளித்துக்கொண்டிருந்த மற்றவர்கள் கிழவியைப்பற்றி விமர்சனம் செய்யத் தொடங்கிவிட்டார்கள். அந்த ஊருக்கே அரசம்பட்டி என்றுதான் பெயர். குடியான ஜனங்களும், சிறிய அக்ரகாரமும் ஒரு சின்ன சாமான்ய கோயிலும் உண்டு. மற்றப்படி எத்தகைய வசதியும் கிடையாது. தம்தம் நிலங்களில் உழுது பயிரிட்டு ஜீவிப்பது, அதைக்கொண்டே வ்யாபாரம் செய்வது, இவை தவிர வேறு அறியார்கள். சிறிய பள்ளிக்கூடங்கூட இல்லாத பட்டிக்காடு. அக்ரகாரத்திலுள்ள ஒருவருக்கு அந்தக் கிராமத்தில் 100 ஏகரா நிலம் உண்டு. அந்த நிலத்தில்தான் வள்ளியும் அவள் கணவன் வேலனும் வேலைசெய்து வருகிருர்கள்.

மிக்க ஏழ்மைநிலையிலிருப்பினும், இருவரும் கூழ்குடித்து குடும்பம் நடத்தியபோதிலும், தாம்பத்யத்தில் ஒற்றுமையுடன் சந்தோஷமாகவே வாழ்க்கை நடத்துகிறார்கள். எழுத்துவாசனை இருவருமே அறியமாட்டார்கள். இவர்களுக்கு யாராவது கடிதமெழுதினால் அதைத் தம் எஜமானரிடந்தான் படித்தறியவேணும். பதிலும் எஜமான்தான் எழுதித்தரவேண்டும். அத்தகைய நிரக்ஷரகுக்ஷிகளானாலும் புத்திரபாக்யமில்லாத குறையால் யார்யார் எதைச்சொன்னாலும் செய்வதற்கு வள்ளி துணிந்துவிட்டாள். இந்த அரசு ப்ரதட்சிணம் ஆரம்பித்து பத்துப்பதினைந்து நாட்களாகின்றன. ஆனால், வள்ளிக்கு எத்தனை நாட்களாயிற்று என்று கணக்குத்தெரியாது பாவம்! அதையும் எஜமான் வீட்டில்தான் போய் அறிந்துகொள்ளவேண்டும். தான் 108 ப்ரதட்சிணம் செய்வதற்குக் கணக்குத்தெரியாததால் 108 மஞ்சள் கிழங்கை எஜமானியம்மாள் எண்ணிக்கொடுத்து ஒவ்வொரு ப்ரதட்சிணத்துக்கு ஒவ்வொரு மஞ்சள் அடையாளமாகப் போட்டுக்கொண்டே செய்தால் கணக்குச் சரியாகவரும் என்று சொல்லிக்கொடுத்தபடியே வள்ளி செய்துகொண்டுவந்தாள்.

இன்றும் அப்படியே வாயைத் திறக்காமல் மவுனமாகச் செய்யும்போது குளத்தில் குளித்துக்கொண்டிருந்தவர்கள் இடுப்பில் குடமும் தோளில் தோய்த்த துணியும் கையில் செம்பு லோட்டா முதலியவைகளுடன் கரையேறியதும், வேண்டுமென்று கொழுப்புக்காக அரசமரத்தின் பக்கம்வந்து "லக்ஷ்மீ! வள்ளியின் முகத்தில் பிள்ளைத்தாச்சி களை சொட்ட வாரம்பித்துவிட்டது பார்த்தாயா?" என்றாள் ஒருத்தி.

மற்றொருத்தி "நன்றாகப் பாரு வயிறுகூடப் பருத்துவிட்டதாகவன்றோ தெரிகிறது" என்றாள். இன்னொருத்தி, "அடாடா! என்ன வெளுப்புவெளுத்து, கழுத்து நீண்டு கண்களில் கர்ப்பகளை ஓடி வழிகிறது. புறங்கைகளைப் பாரு, கண்ணாடிமாதிரி மினுங்குகிறது" என்றாள். வேறொருத்தி, "உண்மைதான். வயிற்றில் வந்துள்ள குழந்தை சொர்ண விக்ரகம்போலிருக்குமானால் தாயாரின் முகத்தில் அந்த டால் பளபளவென்று வீசுமோன்னோ, அது வள்ளியிடம் காண்கிறது!" என்றதொருத்தி குத்தலாக உரத்துக்கூற, கலகலவென்று எல்லோரும் சிரித்தார்கள்.

இவர்களைவிட ஜகவாயாடியான இன்னொருத்தி "ஏண்டியம்மா! நாளையதினம் சோமவாரம். எனக்கு 5 பெண்மாத்திரம் இருப்பது போதவில்லை. ஆசை விட்டுவிடுமா என்ன? இன்னொரு குழந்தை பிறக்க நாளைமுதல் அரசமர ப்ரதட்சிணம் செய்யலாம் என்று நினைக்கிறேன். அப்படிச்செய்து பிறக்கும் குழந்தைக்கு, அரசம்மா... அரசப்பா என்று பெயர்வைப்பதாக இப்போதே ப்ரதிக்ஞையும் செய்துகொள்கிறேன்" என்றாள். கடகடவென்று எல்லோரும் சிரித்துக்கொண்டே போய்விட்டார்கள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட வள்ளியின் உள்ளத்தில் சுருக்கென்று பொத்தியது. "ஏழைக்கு ஒரு ஆசை, பணக்காரர்களுக்கு

ஒரு ஆசையா! ஐயோ! இதென்ன பரிகாஸம்! கேலிக் கூத்து?" என்று வருத்தத்துடன் தனது ப்ரதக்ஷிண நமஸ்காரங்களை முடித்துக்கொண்டு விட்டிற்குவந்தாள். ப்ரதிதினம் வள்ளி ப்ரதக்ஷிணம் செய்யும்போது யாராவது பரிகாஸஞ்செய்து சிரிப்பார்கள் எனினும், இன்று தன்னெதிரில் வேண்டுமென்றே வந்து நின்று இப்படி இறமாப்புடன் சொல்லிச்சென்ற வார்த்தைகள் அவள் செவியிலேயே ஒலித்து மிகவும் வேதனையைக் கொடுத்தன. பகவான் தனக்கு ஏன் இத்தகைய ஆசையைக் கொடுக்கவேண்டும். ஒரு குழந்தைக்கு உலகம் செய்யும் தவம் கூறமுடியாதென்று சொல்வது என் விஷயத்தில் சரியாக இருக்கிறது. அதே விஷயம் மற்றவர்களுக்குக் கேலியாக இருக்கிறதே! இதென்ன உலக விசித்திரம்!" என்று அவள் உள்ளமே வியந்து, கசந்தது.

2

வேலன் விடியற்காலையிலேயே எழுந்து வயலில் வேலைசெய்யப் போய்விட்டான். முக்யமாக ஏர்கட்டி உழுதுவிட்டு சுமார் 10 மணி சமயத்திற்கு வீட்டிற்குவந்தான். வேலனுக்கும் எழுதப் படிக்கத் தெரியாது. இருப்பினும் எத்தனை நேரமாயினும் குளத்தில் நன்றாக ஸ்நானம்செய்துவிட்டு விபூதியும்குங்குமமும் சேர்ந்தணிந்து கொண்டு ஈர உடையுடனேயே அங்குள்ள கோயிலுக்குச்சென்று தனக்குத் தெரிந்த தோத்திரங்களைச் சொல்லியவாறு ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டுத்தான் வீட்டிற்குவந்து சாப்பிடுவான். வேலையே ஓயவில்லை என்றால்கூட அன்று மாலையிலாவது இந்த காரியத்தைச் செய்யாமல் சாப்பிடமாட்டான்.

அன்று ஏர்கட்டி உழுதுவிட்டு வழக்கம்போல் கோயிலுக்குச் சென்றான். அன்று ஸ்வாமிதரிசனம் செய்கையில் இவனுக்கு எதிரில் ஒரு பெண்பிள்ளை வாய்விட்டே "எனக்கு இனி குழந்தைகள் பிறக்காதிருக்க வரங்கொடுக்கமாட்டாயா? ஆண்டவனே! இத்தனை குழந்தைகளை வைத்துக்கொண்டு நான் படும் துன்பம் உனக்குப் பொறுக்கிறதா, அல்லது சந்தோஷமாயிருக்கிறதா? நான் சரியானபடி ஒருநாளைக்கு ஒருவாய் கஞ்சிகூடக் குடிப்பதற்கு இல்லாத நிலைமையையும் கொடுத்து வருஷம் தவறாது குழந்தையையும் கொடுத்தால் இதென்ன அக்ரமம்? என்னால் தாங்கமுடியவில்லையே!" என்று கண்ணீர்விட்டுக் கலங்கிப் பெரிதாக வேண்டினாள்.

இதைப் பார்த்த வேலனுக்கு தேகம் சிலிர்த்தது. "என்ன மாயா உலகம்! சர்வ ரக்ஷகன் ஸன்னிதானத்தில் ஒரே விஷயத்தை ஒருவர் வெறுப்பது, ஒருவர் வேண்டுவதா? இதென்ன விசித்திரம்?" என்று ஒருவிதமான குழப்பமும் வியப்பும் உண்டாகியது. இவனோ நித்ய தரித்திரன். அந்த ஏழைக்கு உதவி செய்யும் சக்தி கனவில்கூடக் காணமுடியாது என்பது பட்டவர்த்தனமாகத்

தெரிந்த விஷயம். இன்னிலைமையில் அவளிடம் பச்சாத்தாபப் பட்டுப் பேசுவதற்கு வாய் எங்கிருக்கிறது? அதோடு, பேசினல் சிரிக்கமாட்டாளா! "பாவம், ஒரு குழந்தையையாவது நமக்குக் கொடுப்பாளா? இத்தனை வெறுப்புடன் பேசும் உள்ளம் தன் குழந்தையை பிறத்தியாருக்குக் கொடுக்க இசையுமா? அதையும் பார்த்து விடலாம்" என்று தோன்றியதால் இருவரும் ஸேவித்துவிட்டு வெளியே வரும்போது, "தாயே! தாங்கள் யாரோ தெரியவில்லையே?"...என்று மெல்லத் தயங்கியவாறு கேட்டான்.

அந்தப் பெண்மணி நாணிக்கோணிநின்றவாறு "நீங்கள் யாரு? நான் அடுத்த க்ராமத்திலிருப்பவள். எப்போதாவது இந்த கோயிலுக்கு வந்து ஸ்வாமி தரிசனம் செய்வது வழக்கம்" என்றாள்.

வேலன்:—தாயே! தங்களுடைய ப்ரார்த்தனைகளைக் கேட்டுக் கொண்டிருந்தேன். எனக்கோ, ஒரு குழந்தை கிடையாது. அதற்காக இந்த பகவானை நாங்கள் வேண்டுவது கொஞ்சநஞ்சமல்ல. இவருக்குக் கொஞ்சங்கூட மனம் இளகவே இல்லை. ஒரு சின்னஞ்சிறு குழந்தைக்கு நாங்கள் ஏங்கித் தவிக்கிறோம். தாங்கள் சலிப்புடன் சொல்லியதால் கேட்கிறேன். ஒரு குழந்தையை எங்களுக்குக் கொடுக்கமுடியுமா?" என்று மிக்க வணக்கத்துடன் கூறியவாறு கேட்டான்.

"ஐயா! போதும் உங்கள் வார்த்தை! ஏதாவது கஞ்சி வார்க்க உதவி செய்வதாகச் சொல்வீர்களென்று நினைத்தேன். என்னுடைய தரித்திரம் மலைபோலிருப்பினும் என் செல்வங்களால் நான் அடையும் சந்தோஷ இன்பமும் மற்றொரு மலைபோல் என்னிதயத்தில் இன்பத்தை உண்டாக்குகிறது. என் குழந்தைகளைச் சேர்ந்தாற்போல் உட்கார்த்திக் கூழோ கஞ்சியோ கொடுப்பதே எனக்குப் பேரானந்தமாகும். அவர்கள் ஒன்று சேர்ந்து சண்டையும் பூசலும் போட்டுக்கொண்டு மழலை மொழிகளால் பேசி விளையாடுவதைப் பார்க்கும்போதே பசித் துன்பம் பறந்துபோய்விடும். குழந்தைகளை மாறி மாறிக் கட்டித் தழுவிப் படுத்துறங்குவதே எனக்கு இப்பிறவியின் ஸார்த்தகமாகும். நாலு வீட்டில் வேலை செய்தாவது என் குழந்தைகளைக் காப்பாத்துவேனே யன்றிக் குழந்தையை தானங்கொடுப்பதா! அச்சான்யம்போல் அப்படிக் கேட்காதீர்கள்" என்றவாறு விடுவிடென்று போய்விட்டாள்.

தாயின் அன்பையும் மக்களின் மகிமையையும் பார்த்து உள்ளுக்குள் வியப்பு அதிகமாக ஆக, அவன் உள்ளத்தில் ஏற்கெனவே நிர்த்தனம்செய்த குழந்தைஆசை பின்னும் தாண்டவமாடத் தொடங்கிவிட்டது. "ஆகா! இந்தப் பேரானந்தத்தை எங்களுக்கு ஒரு தினமாவது கொடுக்கமாட்டாயா?" என்று பகவானை வேண்டியவாறு வீட்டிற்கு வந்தான்.

ஏற்கெனவே தன்னை அவமானப்படுத்தியதற்காக மனம் குன்றிக் கண்ணீர் பெருகியவாறு வள்ளி நிற்பதைக் கண்டு திடுக்கிட்டான் வேலன். "என்ன விஷயம் வள்ளீ! ஏன் கண்ணீர்

விடுகிறாய்? அரச ப்ரதட்சிணத்திற்குப் போகவில்லையா? ...உடம்பு ஏதாவது சரியில்லையா ?" என்றான்.

ஏற்கெனவே மனது புண்பட்டுத் தவிக்கும் வள்ளிக்கு இக் கேள்வியைக் கேட்டதும் பின்னும் துக்கம் பீறிக்கொண்டு வந்து விட்டது. "இனிமேல் நான் கோயிலும் சுற்றப்போகவில்லை, குளமும் சுற்றப் போகவில்லை. என்னுடைய ஆசையை நான் அடியோடு விட்டுவிடப்போகிறேன். இன்று குளக்கரையில் அரசு ப்ரதட்சிணம் செய்யும்போது அங்கு குளித்த பெண்கள் என்னைக் கேலிசெய்து பேசியதை என்னால் சகிக்கவே முடியவில்லை. மானம் போகிறது. பகவான் வேண்டுமென்று என்னை இம்மாதிரி சோதிக்க வேண்டாம். உலகத்தில் ஒரே காரியம் ஒருவருக்கு மிக்க உயர்வாயிருக்கிறது. ஒருவர்க்கு மிகுந்த இழிவாயிருக்கிறது. இந்த மாதிரி ஜனங்களின்முன்பு நான் இனி ப்ரதட்சிணம் செய்வதையே நிறுத்திவிடப்போகிறேன். என் கவலைக்கும் கண்ணீருக்கும் மனமிரங்கி பகவான் இப்படியே கொடுத்தால் கொடுக்கட்டும். இல்லாவிட்டால் போகட்டும்" என்று கண்ணீருடன் கூறினாள்.

சற்றுமுன்பு தான் கோயிலில் கண்ட காட்சியின் வியப்பு மாறுவதற்குள் இங்கு மனைவியின் கண்ணீர் அவன் நெஞ்சை உருக்கியது. "வள்ளீ! இந்த கலிகால உலகத்தைப்பற்றி நம்ப பெரியஎஜமான் அடிக்கடி என்னிடம் பேசுவாங்க. அந்த வார்த்தையின் உண்மையை நான் அடிக்கடி கண்டு அனுபவித்து எனக்குள்ளேயே ஆச்சரியப்படுகிறேன். ஒரு அம்மாளுக்கு ஏராளமாய்க்குழந்தைகள் பிறந்துவிட்டதால் கடவுளின் முன்பு நின்று இனி குழந்தையே வேண்டாமே என்று அந்தம்மாள் வேண்டுகிறாள். நானோ 'ஒரு குழந்தை கொடுக்கமாட்டாயா?' என்று வேண்டினேன். உலகத்தில் இருளும் வெளிச்சமும் எப்படி சமமாக இருக்கிறதோ அப்படித்தான் மக்களின் ஆசை நிராசை முதலியனவும் சமமாக இருக்கும். இதற்காக நீ உன் ப்ரார்த்தனையை விடலாமா? வள்ளீ! இதோ பாரு! வம்புபேசுவதே தொழிலாக இருப்பவர்கள் எப்போதும் எதையோஉளறிக்கொண்டு தானிருப்பார்கள். அதை நம்மால் தடுக்கவும்முடியாது. அதற்கு பயந்து நம் காரியத்தை நிறுத்தவுங்கூடாது. ஆகையால் நீ மனத்தைத் தளரவிடாதே. கடவுள் நமக்கு எந்தவழியிலாவது ஒரு செல்வத்தைக் கொடுப்பானோ என்ற ஏங்குகையில் இம்மாதிரி நீ சொல்லாதே. எடுத்த காரியத்தை முடிக்காமல் விடுவதே மகா குற்றமல்லவா?....வள்ளீ! இதோபாரு. ஒன்னுவேணுமானாலும் செய்யலாம். நீ விடியற்காலையில் எவரும் வருவதற்கு முன்பே போய் ப்ரதட்சிணம் செய்துவிடு. உனக்குத் துணையாக நானே வருகிறேன். இல்லாவிட்டால் எதிர்வீட்டுப் பாட்டியைத் துணைக்கு அனுப்புகிறேன்; வருத்தப்படாதே" என்று இவன் சொல்லும்போது, "குடு குடுகுடுகுடு...நல்லகாலம் பொறக்குது நல்லகாலம் பொறக்குது. ஒரு சந்தோசசேதி வரப்போவுது....குடுகுடுகுடுகுடு...ஒரு வருசத்

துக்குமுன்னே இந்த ஊட்டே ஒரு துர்தேவதை பார்வை இருந்துச்சு; அதனாலே களவு...பிடை...ரோகம்...மனக்கசப்பு அல்லாம் சுத்திக்கிட்டிருந்துச்சு...எங்க ஜக்கம்மா விடியகாலெவந்து கடாட்சம் பண்ணி அந்த தேவதையை ஓட்டிட்டா...குடுகுடுகுடு....இந்த ஊட்டெ புடிச்ச பீடே ஓடிபோயிடுச்சு. கலக்கமெல்லாம் தொலைஞ்சு போயிடுச்சு...ஒரு கந்தெ குடுங்க......ஒருபிடி அரிசிபோடுங்க..."

என்று முடுக்கிவிட்ட மெஷின்போல் தானாகவே மூச்சுவிடாது குடுகுடுப்பைக்காரன் சொல்லிக்கொண்டு நிற்பதைக்கேட்ட வள்ளியின் முகம் பின்னும் சுளித்தது. "ஆமாம்! வயத்துப் பிழைப்புக்கு இது ஒரு வழி. குடுகுடுப்பைக்காரனெ பாத்தாலே எனக்குப் புடிக்கல்லே. போனவருஷம் ஒரு குடுகுடுப்பைக்காரன் வந்து இதே குளியா ஒம்பதாவது மாசம் ராஜாமவன் பொறக்கப்போறான்னு சொன்னான். அதைக்கேட்டுமகிழ்ந்துபோய்,எனக்குக் கட்ட கந்தை இல்லாமல்போனாலும் சந்தோஷத்தாலே ஒரு புடவை தூக்கிக் கொடுத்தேன். சந்தோஷ சமாசாரம் வருது என்றான். அடுத்த நாளே என் தங்கச்சி செத்துப்போன துக்கசமாசாரந்தான் வந்தது. அதுமுதல் இவர்களைப் பார்த்தாலே எனக்குக் கோபம் வருகிறது. இவனைத் துரத்தியடியுங்கள்" என்றாள்.

வேல:—நாம் அதைத்தான செய்யானேன்? தானாக நாலுந ழிகத்திவிட்டுப் போய்விடுகிறான். இல்லை என்பதை நம வாயால சொல்லவேண்டாம்...என்று பேசிமுடிப்பதற்குள் குடுகுடுப்பைக்காரன தானாகவே போய்விட்டான்.

சில முரடர்களைப்போல் இவன் நின்று பிடிவாதம்செய்து கோபத்தை உண்டாக்காமல் போய்விட்டதைக் கண்டு "ஐயோ! ஒருபிடி அரிசியாவது போடாது அனுப்பிவிட்டோமே; அதனால் ஏதாவது குற்றம் நடந்துவிடுமோ!" என்று பயந்துகொண்டு, ஒரு பிடி அரிசியை எடுத்துக்கொண்டு வாசலிலபோகும் குடுகுடுப்பைக்காரனை அழைத்து அரிசியைப் போட்டபிறகுதான் அவள் மனது நிம்மதியடைந்தது. ஏழைகளானாலும் தயாளகுணமும் இயற்கையிலேயே பச்சாத்தாபமும் கூடியிருப்பதால் வேலனின் வாழ்க்கையில் அவனையறியாத ஒரு குளிர்ச்சி நிறைந்திருந்தது.

3

வேலனின் கூடப்பிறந்த சகோதரிமட்டும் ஒருத்தி வெளியூரில் நிறைந்த பூமி காணிகளுடன் இருக்கிறாள். அவளுக்கும் ஒரு குழந்தைஇலலாத குறையில் வள்ளியைப்போல் பலபல ப்ரார்த்தனைகள் செய்தும்,ப்ரதட்சிணநமஸ்காரங்கள்செய்தும்,பட்டினி உபவாஸங்கள் இருந்தும் பலனில்லாது போய்விட்டதால், அவளுடைய மாமியார் முதலிய பெரியவர்கள் அவள் கணவனுக்கு இரண்டாந்தாரம் கல்யாணத்தைச் செய்துவிட்டார்கள். அதனால் அவள் மனமுடைந்துபோய் இனி தனக்கு இந்த வீட்டில்இருக்க பரியமில்லை என்று கூறி வெளியே வந்துவிட்டாள். சில வருஷங்களாயின.

இளையாளுக்கும் குழந்தை பிறக்கவில்லை. "பகவத்செயல் இருந்தால்தான் குழந்தை பிறக்கும். ஒருவரை வீணாகப் பழித்துத் துன்புறுத்துவதால் பலனில்லை. மனிதனால் எத்தகைய சிறிய துரும்பையும் அசைக்கமுடியாது. பகவானின் கடாக்ஷமிருந்தால்தான் எந்த காரியத்தையும் செய்து முடிக்கமுடியும்" என்கிற அறிவு கன்னியம்மாளின் கணவன், மாமியார் முதலியவர்களுக்கு உதயமாகிய பிறகு மறுபடியும் கன்னியம்மாளை அவர்களே அழைத்துச்சென்றார்கள். தன்வரையில் இனி விமோசனமில்லை என்பது தீர்மானமாகிவிட்டது எனினும் தன்னுடைய தம்பிக்காவது ஒரு குழந்தை பிறந்து தான் பிறந்த வீடு வம்சம் விளங்கிச் சந்தோஷமாக வாழக்கூடாதா! என்று சதா அங்கலாய்த்தவாறு பகவானை வேண்டிக்கொண்டிருந்தாள்.

தம்பியிடமிருந்து கடிதமே வரவில்லை. விஷயமும் எதுவும் தெரியாததால் தானாவது போய்ப் பார்த்துவிட்டு வரலாமா என்கிற ஆசையும் உண்டாகியது. கன்னியம்மாளின் கணவன் சற்று முரடனாகையினால் வேலனுக்கும் அவனுக்கும் அதிகப் பிடித்தம் கிடையாது. முக்யமான விசேஷங்களைத்தவிர அவன் அந்த வீட்டிற்கு வருவதே கிடையாது. எப்படியாவது இருக்கட்டும். தன் தம்பியும் அவன் மனைவியும் க்ஷேமமாயிருந்தால் போதும் என்று சதா வாழ்த்திக்கொண்டிருப்பாள்.

கன்னியம்மாளுக்கு காலை தூங்கி எழுந்ததுமுதல் ஓரே உத்ஸாகமும் அவளை யறியாத ஒருவித குதூகல உணர்ச்சியும் உண்டாகியது. இதற்குக் காரணமே அவளுக்குப் புரியவில்லை. அன்று பகல் தபால்காரன் வந்து, "கன்னியம்மாள்! தபால்" என்று கூப்பிட்டவுடனே கன்னியம்மாளுக்கு ஒரு புதிய இன்பம் சுரந்து துள்ளி ஓடி வந்தாள். இவளுக்கும் எழுதப்படிக்கத் தெரியாதாகையினால் தபால்காரனைப்பார்த்து, "ஐயா! கடிதம் எங்கேந்து வந்திருக்கு. என் தம்பி இடமிருந்து வந்திருக்குதா பாருங்கோ" என்றாள்.

"இல்லையம்மா! கோவிந்தபுரத்திருந்து வந்திருக்கிறது" என்றான்.

"என்ன! என்ன! கோவிந்தபுரமா? எல்லம்மா என்று கையெழுத்து இருக்கிறதா?" என்று பதைபதைக்கக் கேட்டாள். 'ஆமாம்' என்று கூறி வழக்கம்போல் தபாலைப் படிக்கவாரம்பித்தான்.

"கன்னியம்மாளுக்கு எல்லம்மா எழுதியது. க்ஷேமம். அப்படியே அறிய ஆசைப்படுகிறேன். நம்ப வேலனுக்கு ஒரு கொழந்தை பிறக்கணும்னு நானு ஒரு ஜோஸியரிடம் சாத்திரம் கேட்டேன். வள்ளிக்குக் கொழந்தை பிறக்காது. வேறே கல்யாணம் பண்ணினா கட்டாயம் கொழந்தை பொறக்கும்னு சொல்லிட்டாரு. எங்க ஊரு மணியக்காரரின் பெண் செக்க செவேலென்று ராஜாத்தியாட்டமா இருக்கிறாள் அவளை நம்ப வேலனுக்குக் கட்டிக்கொடுப்பதாக சொல்கிறார்கள். நீ உடனே வேலனிடம் போய் விஷயத்தைச் சொல்லி காரியத்தை

முடித்துக்கொண்டு இங்கு வா. அடுத்தவாரமே கல்யாணத்தைப் பண்ணிவிடலாம். உடனே பதில் போடு.

உன் சிறிய தாயார்,
எல்லம்மாள்."

இதைப் படிக்கக்கேட்டதும் இத்தனைநேரம் எங்குமில்லாத சந்தோஷம் சிறகடித்துப் பறந்த உள்ளத்தில் சிறகுகள் ஒடிந்தது போலாகிவிட்டதால் முகம் சுருங்கியது. அவளுடைய உள்ளத்தின் வேகம் கண்களால் வழிந்தது. இதற்குள் தபால்காரன் "ஏம்மா... ஒங்க சமாச்சாரத்தைக் கண்ணால் பார்த்திருக்கையில்கூட அந்தம்மாளுக்கு இப்படி செய்யணும்னு எப்படியம்மா தோணிச்சு?" என்று கேட்டான். ஏற்கெனவே இதே எண்ணம் கன்னியம்மாளின் நெஞ்சில் போராடுவதைப் பின்னும் கிளறிவிடுவதுபோல் இவன் வார்த்தைகள் தோன்றின..."இந்த உலகம் இருக்கிறது பாரு, விவஸ்தையற்ற சூனிய புத்தியுடைய மாமிஸப் பிண்டங்களைச் சுமக்கும் சுமைதாங்கிபோன்றதுதான். பகவானின் செயல் ஒன்று என்பதை மறந்து தன்போக்கில் ஆடுகிறார்கள். இரண்டாங் கல்யாணமாம், கர்மாதியாம். இந்த செய்கையினால் என்னுள்ளம் எப்படித்தான் துடித்தது, என்னபாடு பட்டது என்பது எனக்கல்லவா தெரியும். "வாய் புளித்ததோ! மாங்காய் புளித்ததோ!" என்று பேசுகிறவர்களுக்கு வருத்தம் என்ன தெரியும்?

பாவம்! வள்ளியம்மாள் மிகவும் நல்லவள். அவள் மனத்தை சோகலைவத்துக் கண்ணீர்விடும்படியாகச் செய்ய நான் ஒருபோதும் துணியமாட்டேன். இத்தகைய ஒரு கடிதம் வருவதற்காகவா இன்று எனக்கு என்னையறியாத உத்ஸாகமும் சந்தோஷமும் தாண்டவமாடியது...போதும்; ஜோஸியம் கேட்டாளாம், மந்திரம் செய்தாளாம்! இதற்கு பதிலே எழுதப்போவதில்லை. எனக்கு கார்டு வேண்டாம் நீ போய்வாப்பா" என்று அவனை அனுப்பினாள்.

கன்னியம்மாளின் சந்தோஷ உணர்ச்சிகள் பறந்துபோய், கவலையும் ஏதோமாதிரியான ஏக்கமுந்தான் குடிகொண்டன. தம்பிக்கு ஒரு கடிதம் எழுதி க்ஷேமத்தை விசாரிக்கவேண்டும் என்று தோன்றியது. தனக்கு அசட்டுத்தனமாய் எல்லம்மாள் கடிதம் எழுதியதுபோல் வள்ளிக்காவது வேலனுக்காவது எழுதிவிடுவாளோ! அதனால் அவர்கள் மனது கலங்குமோ! என்று தோன்றியதால் தானே முன்கூட்டி ஒருகடிதம் எழுதிவிட எண்ணி வீதியில் போய்விட்ட தபால்காரனை அழைத்து தன் விஷயத்தைச் சொல்லி வேலனுக்கு ஒரு கடிதம் எழுதி அவனிடமே கொடுத்தாள். அதன் பிறகு ஒரு சிறிது ஆறுதல் உண்டாகியது.

4

முதல் நாள் தான்பட்ட அவமானத்திற்காக மறுநாள் வள்ளி அதிகாலையிலேயே தன் கணவன் சொல்லியதுபோல் எதிர் வீட்டுக் கிழவியைத் துணைக்கு அழைத்துச்சென்று ஸ்நானத்தைப்

பண்ணி ப்ரதக்ஷணத்தை முடித்துக்கொண்டு மற்ற பெண்கள் குளிக்க வருவதற்குள்ளாகவே வீட்டிற்கு வந்துவிட்டாள். முதல் நாள் வந்த வம்பர்மகாஸபை அங்கத்தினர்களான வம்பிகள் ஒரு கூட்டமாகக் குளத்திற்கு வரும்போது "இன்று வள்ளி வரட்டும். நான் இந்த அரசமரத்துத் திண்ணையின் கீழே மறைந்துகொண்டு வள்ளிக்கு அரசமரத்துப் பிள்ளையாரும் நாகராஜனும் பிள்ளைவரம் கொடுப்பதுபோல் நான் குரலை மாற்றிக்கொண்டு பேசப்போகிறேன். நீங்களெல்லாரும் சிரியுங்கள்" என்று ஒருத்தி சொன்னாள்.

இதுகேட்ட மற்றொருத்தி,—இன்னொன்றுகூடச் சொல்லலாம். நாங்கள் கரைமீதுவந்து "பிள்ளையார் பிள்ளையார் நீர் எங்கிருக்கீர் பிள்ளையார்" என்று நான் பாடுகிறேன். "வள்ளியம்மாளுக்குப் பிள்ளைவரங்கொடு பிள்ளையார்"...என்று நீ பாடு. அப்போது, "கொடுத்தோம்" என்று நீ மறைவிலிருந்து சொல்லு. இன்னும் தமாஷாக இருக்கும்"—என்றாள்.

இப்படித் தாம் வள்ளியம்மாளிடம் நடிக்கவேண்டிய நாடகத்தை நடித்துப் பேசிக்கொண்டே சென்றார்கள். தாங்கள் வம்பு ப்ரஸங்கத்தை ஆரம்பித்து நடத்தியபடி துணி துவைத்துப் பாத்திரம்தேய்த்துக் குளித்து வேலைகள் சகலமும் முடிந்தும் வள்ளி வராததால் பாவம்! அவர்களுக்குப் பெரிய ஏமாற்றம் உண்டாகி விட்டது. முக்யமான பகவத், பாகவத கைங்கர்யம் செய்ய ஆசைப்பட்டவர்களுக்கு ஏதோ பாபத்தின் பயனால் கைகூடாது போய்விட்டால் பக்தர்கள் எப்படித் தவிப்பார்களோ அப்படியாகி விட்டது இந்த வம்பிகளின் நிலைமையும். "இன்னும் வள்ளி ஏன் வரவில்லை!" என்றாள் ஒருத்தி.

"ஒருவேளை குழந்தை பிறந்துவிட்டதோ என்னவோ?" என்றாள் ஒருத்தி. மற்றொருத்தி "வள்ளியின் பக்திக்குமெச்சி பிள்ளையாரே அரசமரத்தைப் பேர்த்துக்கொண்டு அவள் வீட்டிற்கே போய் விட்டாரோ என்னவோ!" என்றாள். இப்படி பிறரைப் பரிகஸித்து வம்புபேசி வீண்பொழுதில் காலத்தைக் கடத்தும் வேகத்தில் வெய்யில் சுறீரென்று வந்து நேரம் கடந்துபோவதை உடம்பில் உறைத்துக் காட்டியும் அவர்களுடைய எண்ணங்கள் சிதறி எதிர்பார்க்கும் நிலைமையில் அவர்களுக்கு உறைக்கவே இல்லை.

இந்த வம்பிகளில் ஒருத்தியின் குழந்தை இவள் குளத்திற்கு வரும்பொழுது தூங்கிக்கொண்டிருந்தது. அது சற்று நேரத்திற்கெல்லாம் எழுந்துவிட்டதும் வீட்டில் தாயாரைக் காணாது காலை ஆகாரத்திற்காகப் பெரிதாக அழுதுகொண்டே பின்பக்கத்துத் தோட்டத்திற்குச்சென்று தடுக்கிவிழுந்து காயம்பட்டு அழுது கொண்டே இருந்ததைக் கண்ட அதன் தகப்பனர் ஓடிவந்து குழந்தையை எடுத்து ரத்தத்தைத் துடைத்துத் தூக்கிக்கொண்டு குளத்திற்கு ஓடிவந்தான்.

வீண் அரட்டை அடித்துக்கொண்டு கரைமீது நிற்கும் தன் மனைவியைப் பார்த்து பளீரென்று முதுகில் இரண்டறைகள் விட்டு

அவள் தலைமயிரைப் பிடித்து உலுக்கி "வாயாடிக் கழுதையே! வள்ளியம்மாளின் வருகைக்காகவா காத்திருந்து வம்புபேசிக் கொண்டிருக்கிறாய்? விடா, குழந்தைகளா, எல்லாம் மறந்தே போய்விட்டதா? இனிமேல் குளத்திற்கு வா; காலை ஒடித்து விடுகிறேன். உன் வம்புபேசும் ஸ்வாரஸ்யத்தில் குழந்தை எழுந்து அழுமே என்பது மறந்து பாழாய்ப்போனதால் குழந்தையின் மண்டை உடைந்தது. இப்படியே தட்டித் தடுமாறி அழுதுகொண்டு போய் கிணற்றில் விழுந்திருக்குமானல் என்ன ஆவது?" என்று பெரிதாகக் கத்துவதைப் பார்த்த மற்றபெண்கள் இருந்த இடம் தெரியாமல் ஓடக்கிளம்பினார்கள்.

முதல்நாள் வந்த கிழவி, அப்போதுதான் குளிக்கவந்தவள் இந்த காட்சியைக் கண்டு சந்தோஷப்பட்டு "உம். இப்படி எல்லா வீட்டு ஆடவர்களும் தம்தம் மனைவிகளை அடக்கி வாய்மீது இடித் தால் இம்மாதிரி வம்புபேச வரமாட்டார்கள். பவித்திரமான குளத்தங்கரையை வம்பர் மகாசபையாகச் செய்துகொண்டு வீண் பாப மூட்டையைச் சுமந்துகொண்டு போகிறார்களேயன்றி நல்ல விஷயங்களை ஒருவருக்கொருவர் பேசித் தெரிந்துகொண்டு ஆத்மா வுக்கு நல்ல வழியைத் தேடாமல் குளிக்கவந்தும் சேற்றையே வாரியல்லவா பூசிக்கொள்கிறார்கள்! ஒருத்தியாவது பகவன் ஞமத்தை வாயாரச் சொல்லவோ பகவானின் குணவிசேஷங்களைப் பாடியோ பேசியோ பொழுதுபோக்க வகையில்லாமல் பிறரைப் பரிகஸிப்பதில்தான் இவர்களுக்கு நோக்கம்...நல்ல காரியம் செய் தாயப்பா! குழந்தைக்கு உடனே மங்களவஸ்து மருந்தை அரைத் துக்கட்டு. ரத்தம் நின்றுவிடும். சீழ் பிடிக்காது. வலியும் அதிக மாகாது. விக்கம் காணாது. உடனே அதைச் செய்யுங்கள்" என்றாள்.

கணவன், பலருடைய முன்னிலையில் தன்னை அடித்தும் திட்டி யும் அவமானப்படுத்திவிட்டதால் அழுகை பீறிக்கொண்டு வந் தது. அதுசமயம் கிழவியும் வந்துசேர்ந்து சொல்வதில் பின்னும் ஆத்திரம் அதிகரித்துவிட்டது. குழந்தை இவளைப் பார்த்ததும் "அம்மா! உவ்வா! உவ்வா!" என்று பெரிதாக அழுதது. இடுப் பில் குடமும் கையில் ஈரத்துணியுமாயிருப்பதால் குழந்தையை வாங்கிக்கொள்ள முடியாது விறுவிறென்று வீட்டிற்குப் போய் விட்டாள். பிறரைப்பற்றித் தான் வம்பு பேசுவதில் உள்ள ரஸபாவம் சொந்த விஷயத்தில் கணவன் ஒரு பேச்சு பேசுவது சகிக்காது ஆத்திரம் வரும்போதுகூட தன் செய்கையின் குற்றம் தனக்குத் தெரியாதிருப்பது அனேகருடைய ஸ்வபாவமாகும்.

இந்த சம்பவத்துடன் குளக்கரை வம்பர்மாதர் சபையின் மூக்கு அறுபட்டதுபோல் மூளியாகிவிட்டது. வள்ளிக்கு இது தெரிந்த பிறகு அவள் ப்ரதக்ஷிண நமஸ்காரத்தை நிர்ப்பயமாக நிம் மதியாகச் செய்யத் தொடங்கினாள். வள்ளியிடம் அபிமானங் கொண்டுள்ள பாட்டி தன் பேத்தியின் ப்ரஸவத்திற்காக வெளியூர் சென்று இரண்டு மாதங்கள் கழித்துத் திரும்பிவந்தாள்.

ஊரிலிருந்து தாழம்பூ, மருதாணி, கரிகாய்கள், வாழைப்பழம் முதலியவைகள் எப்போதும் கிழவி வாங்கிக் கொண்டு வருவாள். அக்கம்பக்கம் உள்ள பெண்களுக்குக் கொடுத்து ஆசிர்வதிப்பதில் அவளுக்கு அலாதி ப்ரீதி. அதேபோல் தட்டுடன் எல்லாவற்றை யும் எடுத்துக்கொண்டு வள்ளியின் வீட்டிற்கு வந்தாள். வள்ளி சுருட்டி முடங்கிப் படுத்திருந்தாள். "அம்மா வள்ளீ! வள்ளீ!" என்று கிழவி கூப்பிட்டதும் வள்ளி சுருட்டிக்கட்டிக்கொண்டு எழுந்து நின்று "எப்போ வந்தீர்கள் பாட்டீ? கண்ணயர்ந்துவிட் டேன். பேத்தியும் குழந்தையும் சவுக்யமா" என்று கூறியபடியே நமஸ்கரித்தாள்.

கிழவி வள்ளியின் கையில் வெற்றிலைப் பாக்கைக் கொடுத்த படி ஏறஇறங்கப்பார்த்து ப்ரமிப்பும் அடங்காத ஆச்சரியமும் அடைந்து "ஏண்டியம்மா!...வள்ளீ! கடவுளின் கருணை பரிபூர்ண மாக இருந்து பலித்திருப்பது போல்தெரிகிறதே...கில்லு...ஆகா... கன்னம் கண்ணாடிபோல் தளதள வென்று மின்னுகிறதே! அடாடா ...என்ன ஆனந்தம்...என்ன உத்ஸாகம் ஏண்டியம்மா? வெட்கப் படாமல் சொல்லு. எத்தனை மாதமாகிறது? என்னுள்ளம் இப் போது எப்படித்தான் பூரிக்கிறது தெரியுமா! உன் கண்ணில் கர்ப்பவதியின் டால் வீசுகிறதடி, என் ராஜாத்தி!"...என்று கிழவி சொல்லச் சொல்ல வள்ளியின் இதயத்தில் ஆனந்தம் தேங்கிக் கொந்தளித்து,

"பாட்டி! எல்லாம் அந்த ஆண்டவனின் செயலும் உங்கள் ஆசிர்வாதமும்தான். நீங்கள் எப்போது வருவீர்கள் என்று நான் ப்ரதி தினம் எதிர்பார்த்தேன். மூன்றுமாதமாகிறது பாட்டி" என்று நாணிக்கோணிச் சொன்னாள்.

கிழவி:—வள்ளீ! இதோ பாரு. இந்தப் பாழும் ஊர்ஜனங் களின் கண்ணும் பொறாமையும் உன்னை ஒன்றும் செய்யாதிருக்க வேண்டும். உன் குலதெய்வங்களையெல்லாம் வேண்டிக்கொள்ளு. இத்தனை வருஷம் கழித்து வந்திருப்பதால் மிகவும்ஜாக்ரதை யாக இருக்கவேண்டும். இன்றே உன் நாத்தனாருக்குக் கடிதம் எழுதிவிடச் சொல்லு. அவள் வந்து சகல பொறுப்பும் ஏற்று நடத்தி உனக்குச் செய்யவேண்டியதை எல்லாம் செய் யட்டும். கண்ணைக்கொடுத்த பகவான் கடைசிவரையில் ரக்ஷிக்க வேண்டும். நீ வீட்டைவிட்டு வெளியேறாதே.உன்னுடைய அழகைப் பார்த்தாகூட த்ருஷ்டிதான் வந்துவிடும். உட்காருடியம்மா! தாழம்பூவைத்துத் தலைபின்னுகிறேன்." என்று தன் சந்தோஷம் பூராவும் கொட்டியளந்து தலை பின்னி அலங்கரித்தாள்.

உண்மையில் வள்ளியின் புதிய அழகு எல்லோரையும் ப்ரமிக் கச் செய்தது. எதிர்வீட்டுக் கிழவி சுமார் 12 குழந்தைகளைப் பெற்ற அனுபவசாலி. அதோடு அவளுடைய வாழ்நாளில் சுமார் நூற்றுக்கதிகமான குழந்தைகளை இவ்வுலகத்திற்கு முதல்முதல் தன் கையினால் காட்டியிருக்கிறாள். நூற்றுக்கணக்கான கர்ப்

பிணிகளைப் பார்த்து அவர்களுக்குப் பணிக்கை சொல்லிக்கொடுத்திருக்கிறள். அத்தகைய ஜாம்புவான்போன்ற கிழவிக்கு வள்ளியின் ப்ரமாத அழகிட்டிருக்கும் அத்புதத்தைக் கண்டதும் வியப்பு ஒருபுறம் சந்தோஷம் ஒருபுறம் எனினும், மிகவும் பயமும் கவலையுங் கூட ஒருபுறம் பாதிக்காமலில்லை.

கிழவியின் அனுபவத்தில் அவள் பலவித அனுபவங்களைக் கண்டிருப்பதால் இந்த அழகைக் கண்டதும் அவளுக்குக் கலக்கம் உண்டாகியது. கர்ப்பிணிகளுக்கு எங்குமில்லாத அழகும் புதிய மெருகும் இட்டால் அதற்கு இரண்டு காரணங்களைப் பெரியவர்கள் சொல்வார்கள். ஒன்று வயிற்றிலுள்ள குழந்தை சாதாரணக் குழந்தையாயில்லாமல் மகா ஞானியாகவோ, பெரிய உதாரணங் கூறும்படியான முறையிலோ இருக்குமாயின் அந்த சோபையை முன்கூட்டி அறிவிப்பதேபோல் கர்ப்பத்தின் ப்ரகாசம் தாயின் முகத்திலும் அங்கங்களிலும் டால் வீசுமாம். இதற்கு உபமானமாக கௌஸலை ஸ்ரீராமனை கர்ப்பவதியாயிருக்கையில் அழகிட்டதைக் கூறுவார்கள்.

இன்னொரு காரணம்: இத்தகைய ப்ரமாதமான அழகிட்டால் கர்ப்பவதிக்கு ஏதாவது தீங்கு நேரிடவும், உயிரே போய்விடவும் விபத்து நேரும் என்று சொல்வார்கள். இதற்கு உதாரணம் ஸீதா தேவி கர்ப்பவதியாயிருந்தபோது அதிஸௌந்தர்ய சோபை உண்டாகியதை உதாரணமாகக் கூறுவார்கள். சகுந்தலை கர்ப்பவதியாயிருந்தபோது அவளழகைக்கண்டு வனத்திலுள்ள மிருகங்கள்கூட ப்ரமித்ததாகவும் சொல்வதுண்டு.

முன்னோர்கள் கூறும் இத்தகைய உதாரணங்களைக் கேட்டறிந்து அவைகளில் நம்பிக்கையும் வைத்திருக்கும் கிழவியானதால் வள்ளியின் அழகு நன்மையாகவே இருக்கவேண்டுமே என்று உள்ளூர வருந்தினள். ஆனல், அதை வெளியிடவில்லை. வள்ளி கர்ப்பவதியாகி இருப்பது எப்படியோ முதல்முதல் இவளைப் பரிகஸித்து வம்புபேசிய வம்பர்களின் குடிசையில் நுழைந்துவிட்டது.

சாதாரணமாய் உலகத்தில் பல இடங்களுக்குப்போய் பலருடன் பழகும் பொதுமக்களுக்கு தாங்கள் கண்டறிந்த விஷயங்கள் வரையில்தான் தெரியுமேயன்றி வேறு இதர வம்பு தும்புகள் தெரியாது. சிலரோ வீட்டைவிட்டு வெளியே தலைகாட்டுவதே இல்லை. நான் படி தாண்டாத பத்தினி என்று சொல்லிக்கொண்டு இந்த உலகம், இதற்கும் மேல்பட்ட பல உலகத்து விஷயங்களையும் சமாசாரப் பத்ரிகையைப்போல் அறிவிக்கும் கருவிகளாகிவிடுகிருர்கள். எப்படித்தான் இத்தனை விஷயங்கள் சேகரித்தார்களோ என்று ப்ரமிக்கும்படியாகிவிடுகிறது.

இன்னும் சிலரோ, வம்புக்கென்றே அந்த அரிய பிறவியைத் தான் பெற்றிருப்பதாக திடசங்கல்பம் செய்துகொண்டு "யார்யாரிடம் என்ன கிடைக்கும்! யார் வாயைக் கிளறினல் எப்படி விஷயம் வரும்!" என்ற எண்ணத்திலேயே ருசிகொண்டு அலைகிருர்கள்.

ஒரே வீட்டில் உள்ள பலரிடம் ஒரே விஷயத்தை அறிந்த அதற்குக் கயிறுதிரித்து வேடிக்கை பார்ப்பதுவே தொழில். அத்தகைய மனிதர்களுடைய பேச்சில் சதா குற்றம், குதர்க்கம், இரண்டுபட்ட அர்த்தம், கோபம் தொனிக்கும் சப்தம், கலகத்தை மூட்டும் வாசகங்கள் முதலியவைகளே ஒலிக்கும். இத்தகைய சுபாவமுடையவர்கள் தங்களுடைய காலமெல்லாம் இம்மாதிரி வீண் வியாபாரத்தில் கழிகிறதே, இதை நல்ல விஷயத்தில் செலுத்தாமல் போய்விட்டோமே—என்பதை நினைப்பதே இல்லை. அம்மாதிரி நினைக்கவேண்டுமென்கிற நினைப்புகூடச் சிலருக்கு ஏற்படுவதில்லை. எங்கோ ஒரு சிலர் கடைசி காலத்திலாவது திருந்தி நற்கதியடைகிறார்கள். சிலருக்கு முடிவே இல்லை.

உலகம் பலவிதம்ல்லவா? அன்று குளக்கரையில் தனக்கு நேர்ந்த அவமானத்தினால் மனம் நொந்த மனுஷி புத்தி திருந்தி நல்வழிப்படாமல் கணவனிடம் பெரிய சண்டை இட்டுக்கொண்டு வீட்டில் ஒரே ரகளையை சுலபமாக வரவழைத்துவிட்டாள். தன்னை அவமானப்படுத்தியதற்குக் காரணம் இந்த குழந்தைதானே சனீச்வரன், பீடைபிடித்த மூதேவி என்று குழந்தையைத் திட்டுவதும் தடார்புடார் என்று அடிப்பதுமாக இன்னும் விபரீதப்போக்கில் மாறினாளேயன்றி பயனளிக்கவில்லை.

ஆனால், கூடவந்த இரண்டொருத்திமட்டும் தாங்களும் இம்மாதிரி எங்கே அவமானப்பட நேருமோ என்ற பயத்தினால் சற்று திருந்தவாரம்பித்தார்கள். தாங்கள் குளக்கரையில் செய்த பரிகாஸமும் வள்ளியை அழவைத்ததும் இவர்கள் யாருமே மறக்கவில்லை. "இனிமேலாவது வள்ளி கர்ப்பவதியாகவாவது?" என்று ஏளனம் செய்த மகாசபையினர், வள்ளி கர்ப்பவதியாகி இருப்பதோடு ப்ரமாதமான அழகிட்டு பார்ப்பதற்கு தேவகன்னியோ, மோகினிப் பெண்ணோ என்று ஐயுறும்படியான வசீகரத்துடன் இருக்கிறாள் என்ற விஷயமும் எட்டியதும், தாங்கள் நினைத்த நினைப்பு தோல்வியுற்றதே என்று தோன்றாமல் "இது உண்மையாக இருக்குமா! வேண்டுமென்று வேஷம்போட்டு நடிக்கிறாளோ என்னவோ!" என்கிற குதர்க்க புத்திதான் தோன்றி சிலருக்கு சம்சயத்தைக் கொடுத்தது. சிலருக்கோ, "இது மாமாங்கத்து வருஷமோன்னோ! அதனால் கிழங்கள்கூடக் கர்ப்பிணியாகும் காலமாயிற்றே! இந்த மலடியும் காப்பவதியானாளோ! என்னவோ!" என்றுதோன்றியது. இருப்பினும் வள்ளியைப் பார்க்கவேண்டும் என்கிற ஆசை எல்லாருக்கும் உண்டாகியது. தாங்கள் நேருக்குநேராக இத்தனை அவமானப்படுத்தியிருக்கையில் எப்படி அவள் வீடேறிப் போய் பார்ப்பது என்று லஜ்ஜையும் உண்டாகியது.

வள்ளியோ வீட்டைவிட்டு வெளியே வருவதே இல்லை. கிழவி சொல்லியபடி கடிதம்எழுதி நாத்தனாரை வரவழைத்தாள். ஏற்கெனவே வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த கன்னியம்மாள் இத்தகைய சந்தோஷச் செய்தியைத் தாங்கிய கடிதம்

வந்ததும் பூரிததுப் புலகிதமடைந்து மசக்கைப் பக்ஷணங்கள் செய்துகொண்டு உடனே ஓடிவந்தாள்.

வள்ளியைக் கண்டு அபாரமான மகிழ்ச்சியடைந்து அவளுக்குப் பரிந்துபரிந்து உபசரித்து வரத்தொடங்கினுள். சகலமும் பொறுப்புடன் கன்னியம்மாள் செய்வதால் வள்ளி வாசல்புறம் வெளிநாட்டமே யில்லாது இருந்ததால் இந்த வம்பர்களுக்கு வள்ளியின் தரிசனம்கூடக் கிடைக்கவில்லை. அந்த காரணத்தை முன்னிட்டு "அடேயப்பா! பெரிய சமஸ்தானத்திற்குப் பிள்ளை பிறக்கப் போகிறது பாரு! இதற்கு இத்தனை பூச்சிவித்தை காட்டுகிருன். பாவம்!" என்று அப்போதும் ஒரு சொட்டுச் சொல்லையே பேசிக் கொண்டார்கள். அதிலுள்ள ஆனந்தம் அவர்களுக்கு வேறு எதில் இருக்கிறது?

5

"ஹரேராம ஹரேராம ராமராம ஹரே ஹரே...ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ணக்ருஷ்ண ஹரே ஹரே...நாராயண நாராயணா"...என்று பகவன்நாமத்தை உதபாரகத்தில் பாடியவாறு ஒரு பெரிய மகான் காஷாய உடையைத் தவைத்து, குளிர் நடுக்கும் அதிகாலையில் சலசலவென்று நீர் ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றில் ஸ்நானத்தைச்செய்து பின் கரைமீதே உட்கார்ந்து ஜபம்செய்தார். அதற்குப் பிறகு தோத்திரப் பாடல்களைப் பாடி மனம்களிக்க பஜனை செய்தபின் தன்போக்காகக் காலாற நடக்கவாரம்பித்தார்.

அம் மகானுக்கு இந்த உலகமே சொந்தவீடு. எங்காவது கோயிலிலோ அல்லது நல்ல சிறந்த விவேகிகளான பக்தர்கள் வீட்டிலோ ஆகாரம் கிடைத்தால் சாப்பிடுவது. இல்லையேல், ஆகாரத்தைப்பற்றிய கவலையே படமாட்டார். பசிக்கும் உணர்ச்சிக்கு அந்த மகான் அடிமையானவரல்ல. அவருடைய திடமான வைராக்யச் சங்கிலியில் மேற்குறித்தவைகள் அடங்கியிருப்பதே அவருடைய சக்தியின் ப்ரபாவமாகும்.

ஆனுல், அதை அறியக்கூடிய சக்திதான் சாதாரண அவிவேகமும் அக்ஞானமும் நிறைந்த மனிதர்களிடம் இல்லை. பலர் பல மாதிரி தம்தம் அறிவுக்கெட்டியவாறு விமர்சனம் செய்வதே அவர்களது ஆத்ம தர்மமாகக்கொண்டிருப்பதால், "போலீச் சாமியார் வேஷதாரி, துறவறம் பூண்டதாக பாவனைகாட்டிவிட்டு நடத்தையில் ஊழலே ப்ரகாசிக்கின்றது; கோயிலில் மொத்தை சோற்றுக்குப் போகும்போது அங்குள்ள பெண்களையே பார்க்கிருன். அயோக்யன் அதமன்"...என்ற வாசகங்களினுல் பேசுகிறவர் சிலர்.

"இது வெறும் பயித்தியம். மூளையே கலங்கிவிட்டது. ஏதோ பயித்யமானுலும் பிறரை அடித்தும் உதைத்தும் இம்சை செய்யாமல் அதன் போக்காகப் போகிறது" என்று கூறுகிற ப்ரகஸ்பதிகள் சிலரும் தம்தம் விமர்சனத்தைப் பேசி மகிழ்ந்தனர்.

பின்னும் திமிர்படைத்த சிலரோ சாமியாரைக் கூப்பிட்டு வீண் விதண்டாவாதங்களும் குழம்புப் பேச்சுக்களும் பேசி மனத்லைத நோகவைப்பார்கள். அதைச் சற்றும் பொருள்படுத்தாது "அப்பனே! ஆண்டவன் இருக்கிருன் என்ற எண்ணத்தையாவது மறக்காது வைத்துக்கொள்ளுங்கள். இந்தக் கட்டையைத் தாங்கள் என்னதான் சொல்லியபோதிலும் அதைப்பற்றிக் கவலேயே இல்லே. உங்கள் காலம் வீணுக வ்யர்த்தமாகாதிருக்கவேண்டுமே என்று தான் பயப்படுகிறேன். நன்ருக இருங்கள். நல்ல தெளிந்த ஞானத்தைப் பெறுங்கள்" என்று கூறிவிட்டுத் தன் போக்காகப் போய்க்கொண்டே இருப்பார்.

குழம்புத்தனமாய் திமிருடன் பேசிய சோதாக்களின் மனது கூட இந்த செய்கையினுல் சற்று மாறுதலடைந்து "அடாடா!" என்று வியக்கும் என்ருல், சற்று ஞானமும் பக்தியும் உடையவர்கள் உண்மையாக மதிப்பார்கள் என்பதைக் கூறவாவேண்டும்? சாமியார் அன்று கோயிலில் ஒரு புறம் உட்கார்ந்து "ராம ராம" என்று நாமஜபம் செய்துகொண்டிருந்தார். அவருக்கு இரண்டு நாட்களாக ஆகாரமே கிடைக்கவில்லே. பசியின் கொடுமைதான் அவரை ஏதுவும் செய்வதில்லே எனினும் சற்று சோர்வு உண்டாகி யிருந்தது.

கோயிலில் ஸ்வாமிதரிசனம் செய்துவிட்டுப் போகும் ஜனங்களில் ஒரு பெண்மணியைமட்டும் சாமியார் சற்று கவனித்து உற்றுப்பார்த்தார், கண்களில் தண்ணீர்முட்ட அவள் சோகப் பதுமைபோல் காணப்பட்டதனுல்தான் சாமியாரின் கவனம் அவள்மீது சென்றது. அவள் இவரைத் தாண்டிக்கொண்டு போகும் சமயம் சாமியார் அவளேப்பார்த்து "தாயே! சற்று நில்லு. நீ இப்போது படும் கவலே சீக்கிரமாக நிவர்த்தியாகிவிடும். பயப்படாதே. உன் தாயாரின் ஆயுள் கெட்டியானதுதான். அது நீங்காது. இதோ இந்த விபூதியைத் தடவி இந்த குங்குமத்தையே தினம் இட்டு நீயும் இட்டுக்கொண்டுவா. உன் தாயாருக்கு ஒரு சிறிய தோஷம் இருக்கிறது. அதற்குப் பரிகாரம் நான்கு வெள்ளிக் கிழமைகளில் நான்கு ஏழை சுமங்கலிகளுக்கு சுமங்கலி ப்ரார்த்தனே செய்தால் உடம்பு உடனே தேவலேயாகிவிடும். சில வருஷங்களுக்கு முன்னுல் உன் தாயாரை நம்பி ஒருவர் 200 ரூபாயைக் கொடுத்து சுமங்கலி ப்ராத்தனேயைச் செய்யும்படியாகச் சொன்னுர். அவள் செய்யாமலேயே செய்துவிட்டதாகப் பொய் சொல்லித் தானே பணத்தை எடுத்துக்கொண்டுவிட்ட தோஷந்தான் இப்படிப் படுத்துகிறது. இதைச் செய்தால் சரியாகிவிடும்" என்று வலிய தானே கூப்பிட்டுச் சொல்லியதைக் கேட்ட அந்தப் பெண்ணுக்குக் கோபம் வந்துவிட்டது.

"பொழுதுபோக்கற்ற போலிச்சாமியாருக்கு இதுவேறு ப்ரவர்த்தகமா? என் தாயார் திருடியல்ல, மோசக்காரியல்ல; என்

தாயார் தரித்திரம்பிடித்தவளல்ல. முதலில் நல்ல வார்த்தைகளைச் சொல்வதுபோல் சொல்லிவிட்டுப் பெரிய மலையைப் புரட்டுவது தான் சாமியாரின் பவிஷா?" என்று விடுவிடென்று பேசினாள்; அவ்வாறு பேசியவள் வேறு யாருமில்லை, வள்ளி அரசுப்ரதக்ஷிணம் செய்கையில் பரிகாஸம்செய்த வம்பர்களில் ஒரு சிகாமணிதான்.

சாமியார் அலக்ஷியமாகப் பார்த்துச் சிரித்தபடியே "தாயே! இந்த படபடப்பு வார்த்தை என்னை ஒன்றும் செய்துவிடாது. இந்தக் கட்டையை யாராவது அடித்தால்கூடப் பாதகமில்லை. ஏதோ ஆண்டவனின் ஆக்ஞையைச் சொன்னேன். இந்தப் பரிகாரம் செய்யாவிட்டால் கூடிய சீக்கிரம் வாயடைத்து ஊமையாகிவிடும்; பேசவும் வராது தவிக்கையில், உன் தாயாரே தான்செய்த குற்றத்தை உணர்ந்து வருந்துவாள்; அப்போது தெரியும்" என்றுகூறி விட்டு எழுந்துபோய்விட்டார்.

ஜோதிஷசாஸ்திரத்தை உள்ளது உள்ளபடி அறிந்து பரிபூர்ணமாய் நம்புகிறவர்களுக்கு வீண் வம்புப் பேச்சே கிடையாது. அந்த சாஸ்திரம் என்னவோ பொய்யல்ல. அதைக் கையாளும் அதிகாரிகளின் போக்கில்தான் சாஸ்திரமே வீணானது. அதையார் நம்புவது என்று ஒரு வித்யாஸ அபிப்ராயம் உண்டாகிறது.

வயற்றுப் பிழைப்புக்காகவும் சிலர் அரைகுறையாகத் தெரிந்ததைக்கொட்டியளந்துவிடுவதில் காக்காய் ஏறியது பனம்பழம் விழுந்தது என்றாற்போல் ஒருவருக்கு ஏதாவதொரு அம்சம் பலித்துவிட்டால் அதையே முக்யமாகக்கொண்டு பெரிய தம்பட்டம் அடித்துப் பறைசாற்றுகிறார்கள். அதே ஜோஸ்யர் மற்றொருவருக்குச் சொல்லியது பலிக்காவிடில் அவரை எதிர்மாறாகப் பறைசாற்றி அந்த மனிதன் தூற்றுகிறான். இரண்டான்கெட்டான் ஜோஸ்யர்களுக்கும் வயிற்றுப்பிழைப்புக்காகவே தொழிலாக வைத்துக்கொண்டுள்ள ஜோஸ்யர்களுக்குந்தான் மேல்சொன்னவாறு புகழும் இகழும் சேர்ந்து பாதிக்குமேயன்றி சரியானபடி சாஸ்திரத்தைக் கண்டறிந்து சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு சிறந்த சாஸ்திரத்தை வயிற்றுப்பிழைப்புக்காக விற்காமல் சொல்கிறவர்களுடைய ஜோஸ்யம் கட்டாயம் நூற்றுக்குத் தொண்ணூறு சரியானபடி பலித்தே தீருகிறது.

அத்தகையோர் தம்மைத்தாம் விளம்பரம் செய்துகொள்வதில்லை; தொழிலாகக்கொள்வதில்லை. சிலர் தம் சந்தோஷத்திற்காகப் பணமோ,பொருளோ கொடுத்தால் அதை வாங்குவதுமில்லை. அப்படி நிர்ப்பந்தத்தினால் வாங்கினால் தர்ம கைங்கர்யத்திற்குக் கொடுத்து உதவிவிடுவார்கள். இத்தகைய சிறந்த மகான்கள் இக்காலத்தில் கிடைப்பதே அரிதாக இருக்கிறது. எங்கோ நூற்றுக்கொருவர் கிடைத்தாலும் அவர்களின் மதிப்பை யறியும் சக்தி மக்களிடம் இல்லை என்பதை நிரூபித்துக்காட்டுவதுபோலவே தோன்றியது இந்தச் சாமியார் சொல்லியதைக் கேளாமல் அந்தப் பெண் சென்ற காட்சி.

இந்த வம்பர் மாதர் சபையின் அங்கத்தினளான பெண் வெறுப்புடன் வீட்டிற்கு வந்து தன் தாயிடம் நடந்த வரலாற்றைச் சொல்லிச் சாமியாரைத் திட்டினாள். இது கேட்ட நோயாளியான அவள் தாயார் திடுக்கிட்டுவிட்டாள். பெண்ணின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தாள். தாயாரின் தேக அசௌக்யத்துக்காக இந்தப்பெண் தாய் வீட்டிற்குவந்திருக்கிறாள். ஆகையால் ஏற்கெனவே தடுக்குத்தனமாய் மாமியார் வீட்டிலேயே நடக்கும் இவள், தாய் வீட்டில் கேட்கவேண்டுமா? சாமியாரைத் திட்டிக்கொண்டே இருந்தாள்.

ஆனால், நோயாளியான தாயாருக்குமட்டும் தன் வாய் அடைத்துவிடும் என்று சொன்னதைக் கேட்டதும் உள்ளூறக் குடல் நடுங்கியது. தன்னிலைமை இப்போதே மோசமாக இருக்கையில், இன்னும் வாயடைத்து ஊமையாகிவிட்டால் தன் கதி என்னவாவது என்ற எண்ணத்தால் மனது அடித்தது. பெண்ணைப் பார்த்து..."சின்னம்மா! அந்த சாமியார் சொல்லியது மிகவும் உண்மை; நான் அந்த மாதிரி துணிந்துசெய்ததும் உண்மை; உன் பிதாவின் சிநேதர் ஒருவர் வடக்கே வெகுதூரத்தில் வேலையிலிருந்தார்; அவர் ஒரு சமயம் இங்கு வந்துவிட்டுப் போகும்போது 200 ரூபாயைக் கொடுத்து ஏழை சுமங்கலிகளுக்கு சுமங்கலி ப்ரார்த்தனை செய்துவிடும்படிக் கூறி ஊருக்குப் போனார். அப்போது சவரன் 15 ரூபாய்தான் விற்றது. என் பேராசையின் கொடுமையினால் அந்த பணத்திற்குச் சவரன்கள் வாங்கிச் சங்கிலிசெய்து போட்டுக் கொண்டதோடு ஒரு ரவிக்கைமட்டும் வாங்கி ஒரு சுமங்கலிக்குத் தாம்பூலத்தில்வைத்துக் கொடுத்துவிட்டு ஏமாற்றியது உண்மை தான். அடாடா! இப்படிப்பட்ட முழு உண்மையை அப்பட்டமாகக் கூறிய அந்த மகானை நான் தரிசிக்கவேண்டுமே; அவரை உடனே கூட்டிக்கொண்டு வா" என்றாள்.

சின்னம்மாளின் வியப்பு கரைகடந்தது. "சாமியாரைத் திட்டியும் தகாத வார்த்தைகளால் மனத்தை நோகச்செய்தும் வந்து விட்டோமே; இந்த மகாகொடியவிஷயம் உண்மையானதா?"..என்ற மகா வாயாடியான அவளுடைய இதயங்கூட இச்செய்கையின உண்மையால் வருந்தியது. "அம்மா! இது உண்மையானதா! நீ கூடவா இப்படிச் செய்தாய்? என்ன அநியாயம்! அந்தச் சங்கிலி எங்கே? அதையே விற்று இந்தக் காரியத்தைச் செய்துவிடலாமே... அந்தச் சாமியாரை நான் கண்டபடித் திட்டிவிட்டு வந்தேனே! அவரை மறுபடியும் நானே எப்படிப் போய் அழைப்பேன்?" என்றாள்.

தாயார்:—சின்னம்மா! அந்தச் சங்கிலியை விற்றுத்தான் உன் கல்யாணத்தைச் செய்யவேண்டுமென்று அதை விற்க உன் பிதா அவருடைய சிநேகிதனிடம் கொடுத்தார். அந்த மனிதன் அதை எடுத்துக்கொண்டு மோசம் செய்துவிட்டுச் சொல்லாமல் ஓடியும்விட்டான். ஆகையால் அவனிருப்பிடத்தை இந்த சாமியார்

மூலம் கேட்டறியலாம் என்றுதான் அவரைக் கூப்பிடச் சொல்கிறேன்... நான் செய்த மோசம் எனக்கே பலித்துவிட்டது என்பது என் மனத்திற்குள் வேலைசெய்துகொண்டே இருந்தது. இன்று உனக்கும் தெரிந்துவிட்டது. நெருப்புப் பிடித்தால் அது ஒரு பாகத்தை மட்டுமா அழிக்கும்? முற்றிலும் பஸ்மீகரம் செய்து விடுமல்லவா? அதுபோல் நான் பேராசையினால் செய்த காரியம் சொத்தும் பறிபோயிற்று; சரீரமும் நோயாளிப் பிண்டமாகியது. இன்னும் வாயும் அடைத்துவிடுமானால் என்ன செய்வது? எனக்கு ஒரு சந்தேகம் உண்டாகிறது.

அதாவது,—200 ரூபாய் கொடுத்த சிநேகிதர் திடீரென்று ஞானம் பிறந்து எங்கேயோ ஓடிவிட்டதாகக் கேள்விப்பட்டேன். அவரேதான் இந்தச் சாமியாராக இருந்து தெரிந்த விஷயத்தை ஜோஸ்யம் சொல்வதுபோல் சொல்லிவிட்டாரோ என்றும் தோன்றுகிறது. எதற்கும் அவரைக் கட்டாயம் கூட்டிக்கொண்டு வரச்சொல்லு." என்றாள்.

உடனே சின்னம்மாளே கோயிலுக்கு ஓடினாள். அந்தக் கோயில் பூராவும் தேடியும் சாமியாரை அங்குக் காணவில்லை. சில தெருக்களையும் பார்த்துவிட்டு வந்து "அம்மா! அவரைக் காணவே இல்லை. இந்த ஊரில் எங்கு சென்றாரோ? எப்படித் தேடுவது?" என்றாள். நோயாளியின் மனத்தில் பின்னும் வேதனைகளும் சந்தேகமும் அதிகரித்தன. "என் தாயார் திருடியா!" என்று நினைக்கும்போது சின்னம்மாளுக்கு அவளிடம் சற்று வெறுப்பே உண்டாகியது.

18157
சென்னை 600 008

வை. மு. கோ.
87-வது நாவல்

ஜீவநாடி

27-வது ஆண்டுமலரில் வெளியாகி,
உயரிய தனிப்பதிப்பாக வெளிவந்துள்ளது.
(10 ஆர்ட் படங்களுடன்.)

மனிதர்களின் வாழ்க்கையை நடத்திச்செல்வதற்கு சக்திதான் ப்ரதானம். அந்த சக்தி அவரவர்களின் கர்ம விசேஷத்தின் பலனால் ஒவ்வொரு விதம் அமைந்து செல்கிறது. ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று ஜீவநாடியாய் அமைந்து அதன் பலனைக்கொடுத்து வாழ்க்கை வண்டியை ஓட்டிச்செல்கின்றது. தனபாலன், ஜெயபாலன், பூபதி, குந்தலா, விமலா, சபலா, அகிலா, நிர்மலா ஆகியவர்களுக்கு எந்தெந்த அம்சங்கள் ஜீவநாடியாக அமைந்து எத்தகைய பலனைக்கொடுக்கிறது என்பதைப் படித்துக் களியுங்கள்.

ரூ. 2. (ரிஜிஸ்தர் தபாலில் 2-4.)

ராப்பர் 2-ம் பக்கத் தொடர்ச்சி

100 மைல் உல்லாஸ நடைப் பிரயாணத்தைக் குறித்த உண்மைச் சித்திரத்தை எழுதியுள்ளார் ஸகோதரி சுபலக்ஷ்மி.

அடுத்தபடியாக "ஜீவ நாடி" வை. மு. கோ. 87-வது நவீனம் 10 படங்களுடன் (16 அத்யாயங்களுடன்) வெளியாகியுள்ளது. (இதுவே தனிப்புத்தகமாக வந்துள்ள பதிப்பில் சுமார் 130 பக்கத்திற்கு மேல் உள்ளது.)

"பாசம் வென்றது" என்ற மல்லிகைசுந்தரத்தின் சிறுகதை பல விடங்களில் ப்ரத்யட்சமாக நடந்திருக்கக் கூடியதே.

"ஒளியும் நிழலும்" "குட்டிபோடோக்ராபர்" என்ற போடோ விருந்தும், அடுத்தபடியாக முழுநாடகம் போடோ ரூபமாகவும் வை. மு. ஸ்ரீ. எடுத்தது வெளியாகியுள்ளன. சென்ற ஆண்டு வெள்ளிவிழா மலரில் வெளியான "அமரத்யாகி" நவீனம் மஹாத்மாஜி ஸேவா சங்கத்தினரால் மஹாத்மா ஞாபகார்த்த மாணவர் இலவசச் சம்பள நிதிக்குப் பொருள் திரட்டுவதற்காக நடிக்கப்பட்டபோது, முக்யமான கட்டங்கள் போடோ எடுக்கப்பட்டன. அவற்றுள் 29 வெளியிடப்பட்டுள்ளன.

அடுத்த 16 பக்கங்கள் பக்திரஸமான, தத்வ பரமான விஷயங்கள். ஸ்ரீ முதலியாண்டான் வம்சதிலகரான ஸ்ரீசைலாசாரியர் ஸ்வாமி "ஸஹஸ்ரநாம மகிமை" யைக் குறித்தும், ஸ்ரீ ப்ர. அண்ணங்கராசாரியர்ஸ்வாமி "எம்பெருமானார் தரிசனத்தைக் குறித்தும், ஸ்ரீ காரப்பங்காடு வெங்கடாசார்யா ஸ்வாமி "விசிஷ்டாத்வைதமும் ஈசாவாஸ்ய உபநிஷத்தும்" என்பது பற்றியும், ஸ்ரீதிருமணி அப்பன் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி "குலவித்யை" யைப் பற்றியும், எழுதி அருளியுள்ளனர்.

"ஆழ்வார்கள் கண்ட திருக்கச்சி" என்ற போடோ அனுபந்தம் (வை. மு. ஸ்ரீ.) பாசுரக் குறிப்புடன் வெளிவந்துள்ளது. அத்திகிரி, திருவெஃகா, அட்டபுயகரம், திருத்தண்கா, பாடகம், ஊரகம் காரகம் நீரகம் கார்வானம், பரமேச்சுர விண்ணகரம், (பச்சைவண்ணம்), பவழ வண்ணம், நிலாத்திங்கள் துண்டம், கள்வன்—ஆகிய திவ்ய தேசங்களின் போடோக்கள் 15.

"அந்த நிசியிலே" என்ற மகுடத்துடன் ச. கௌஸல்யாநந்தனன், காந்தியடிகள் கண்ணன் காட்டும் ஸ்திதப்ரக்ஞனின் நிலையிலே ஈடுபட்டிருந்ததையும், ராமநாமத்தில் மெய்மறந்த இன்பம் கண்டதையும் குறிப்பிட்டு, போஜ சம்புவையும் வால்மீகியையும் ஆதாரமாகக் கொண்டு ஸ்ரீராமாயணத்திலுள்ள ஸ்திதப்ரக்ஞனைக் கண்முன் நிறுத்துகிறார்; பரதன் ஸாக்ஷாத்கரித்தபடி காட்டுகிறார்.

"மூவர் கட்டிய வீடு" என்ற சம்பாஷணையில் பி. ஸ்ரீ. அழகு, நன்மை, இசைவு என்ற முப்பெருங் கொள்கைகளை ரஸமாய் விளக்கியுள்ளார்.

"குணதிசையும் குடதிசையும்" வியாசத்தில் ரா. ஸ்ரீ. தேசிகன், கிரேக்க ஞானி ப்ளேடோவின் கொள்கைகளையும் நமது மனப்பண்பையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார். கருத்துக்கள் கிழக்கிலிருந்து மேற்கே யாத்திரை செய்தனவா? அல்லது தனித்தே அங்கங்கே ஒரே மாதிரியான கருத்துக்கள் தோன்றுகின்றனவா? சாதிப்பிரிவு பற்றியும் இன்னும் சில தத்துவங்களையும் குறிப்பிட்டுள்ளார்.

அங்கங்கே பொருள் நிறைந்த குறிப்புகளும், ஹாஸ்யப் படங்களும், துணுக்குகளும உள்ளன.

மேன்மேலும் பல கலைகளின் பேரிணைப்பான இத்தகைய விருந்தளிப்பதில் எமக்கு உத்ஸாகமளிப்பது வாசகமஹனீயர்களின் கையிலிருக்கிறது. — வை. மு. ஸ்ரீ.

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAI-NAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26. Car St., Triplicane, Madras. 5.

Managing Editor : V. M. SRINIVASAN, M. A. B. L.

தமிழ்த் தலைவர் இந்திய ஜனாதிபதியாகிறார்!

"எனக்கு எழுபது வயதாகிவிட்டது. பதவியிலிருந்து விலக அனுமதியுங்கள்" என்கிறார் ராஜாஜி. அதெப்படி முடியும் இப்போது! இந்தியக் குடியரசின் சரித்திரத்தில்
இந்தத் தியாகித் தமிழர்தானே
முதல் ஜனாதிபதியாக இருக்கவேண்டுமென்று
பாரதத் தாயும் மக்களும் தீர்மானித்துள்ளனர்!